
தேவியின் கண்மணி

ஆர்.மகேஸ்வரி

ரூ.8



# "என் கல்யாண வைபோகம் உன்னோடுதான்"

# "என் கல்யாண வைபோகம் உன்னோடுதான்"

உன் அனுமதி கேட்காமலேயே...
உன்னை நான் நேசித்துவிட்டேன்!
உன் அனுமதி பெறாமலேயே...
உன் சுவாசத்தைத் தேடித்தேடி சுவாசித்து விட்டேன்!
உனக்கு தெரியாமல்...
உன் காலடிதடத்தை தேடித்தேடி முத்தமிட்டு விட்டேன்!
உன்னோடு பழகிய நாட்களையும்...
பேசிய வார்த்தைகளையும் பொக்கிஷமாய்..
என் இதயத்தில் பதுக்கிக் கொண்டேன்!
இதற்காக நீ என்னை மன்னிப்பாயா...?

கல்வராயன் மலையடிவாரம்!

மிதமான பனியின் தாலாட்டில் இன்பமாய் உறங்கிக் கொண்டிருந்தது 'பூம்பொழில்' என்ற அழகிய சிற்றூர்!

பூம்பொழில் கிராமத்தில் மொத்தமே நூறு வீடுகள் தான் இருக்கும்! எல்லாமே கூரையும், ஓடும் வேய்ந்த வீடுகள்! அங்கு வசிப்பவர்களின் தொழில், விவசாயம்!

காடு, கழனி, பண்ணை என்று நிலமிருப்பவர்களிடம் நிலமில்லாதவர்கள் அங்கே விவசாய கூலிகளாய் வேலை செய்து பிழைப்பு நடத்தினர்.

சுற்றிலும் பெரிய காம்பவுண்ட் சுவர் எழுப்பி உள்ளே கலைநயத்தோடு, பெரும் வேலைப்பாடுகளுடன் அம்சமாய், காண்பவரைக் கவரும் வண்ணம், கம்பீரத்துடன் ஊரின் மத்தியில் பெரிய பங்களா பிரமாண்டமாய் எழுந்து நின்றிருந்தது!

கேட்டிலிருந்து பங்களாவிற்கு செல்ல பெரிய சிமெண்ட் பாதை! அதன் ஒருபுறம் சிவப்பு ரோஜாக்கள் மறுபுறம் மஞ்சள் ரோஜாக்கள் என்று மங்களகரமாய் ரோஜாச்செடிகளின் அணிவகுப்பு மனதை அள்ளும்!

**-ஆர்.மகேஸ்வரி**



மல்லிகை, முல்லை, இருவாட்சி, ஜாதிமல்லிகை என தோட்டம் நந்தவனமாய் காட்சியளிக்கும்! தோட்டத்தின் கடைசியில் இயற்கையாய் சிறுகுளம் அமைத்து... அதில் நீரை நிரப்பி.. தாமரை, அல்லிமலர்களை மலர விட்டிருந்தனர்.

அதிகாலை நான்கு மணி! நித்யாவிற்கு விழிப்பு வந்து விட்டது. கணவன் ராகுல் அருகில் நல்ல நித்திரையில் இருந்தான். அவன் கால் தொட்டு வணங்கி விட்டு படுக்கையறையை விட்டு வெளியே வந்தாள். எப்பேர்ப்பட்ட பனியானாலும், மழையானாலும் நித்யா எழுந்து விடுவாள்.

தலையோடு குளித்தாள். தலையை துவட்டி அவளின் நீண்ட கூந்தலின் அடியில் சிறு முடிச்சிட்டாள். மஞ்சளில் மினுமினுத்த முகத்தில் லேசாய் பவுடர் ஒற்றி.. கருஞ்சாந்து பொட்டு வைத்துக் கொண்டாள்.

போர்டிகோவில் நீரை தெளித்து சிறு கோலமிட்டாள். பின் பங்களாவின் கேட்டை திறந்து மெயின் வாசலுக்கு சாணம் தெளித்து, பெருக்கி.. இழையிழையாய் அழகான ரங்கோலி கோலமிட்டாள் கலர்பொடியைத் தூவிகோலத்திற்கு மேலும் அழகு கூட்டினாள்!

சிறுசாண உருண்டையில் பீர்க்கம் பூவை செருகி கோலத்தின் மத்தியில் வைத்தாள்.

கோலத்தின் அழகை கண்களை விரித்து விழிகளில் வாங்கிக் கொண்டாள்!

அவள் நாள்தோறும் ரசிப்புடன் விரும்பி செய்யும் வேலைகளில் ஒன்று!

பூஜையறைக்கு வந்தாள். நேற்றே பிரிட்ஜில் தொடுத்து வைத்திருந்த மல்லிகை சரங்களை சாமிபடங்களுக்கு வைத்தாள். காமாட்சியம்மன் விளக்கையும், குத்துவிளக்கையும் ஏற்றி பூஜை செய்தாள்.

நெற்றியிலும், வகிட்டிலும், தாலியிலும் குங்குமத்தை வைத்துக் கொண்டு வெளியே வந்தாள்.

காபி தயாரித்து பெரிய பிளாஸ்கில் ஊற்றிக் கொண்டு மாடியேறிப் போய் தனது நாத்தனார் மதிவதனாவின் அறைக்குள் சென்றாள்.

மதிவதனா என்ற அழகு சிலை தலை முதல் கால்வரை போர்வையை இழுத்து போர்த்திக் கொண்டு நன்கு உறங்கிக் கொண்டிருந்தது.

''வதனா.. ஏய் மதிவதனா.. மணி ஐந்தாச்சி! எழுடி!''

நித்யா மதிவதனாவை பிடித்து உலுக்கினாள்.

''அண்ணி.. என்னை இன்னும் கொஞ்ச நேரம் தூங்க விடுங்க! நல்ல கனவு அண்ணி! என் கனவுல அழகான வெள்ளைக்குதிரை வந்தது!'' என்று மதிவதனா சிணுங்க..

''வெள்ளைக்குதிரை கனவுல வந்தால் நல்லது தான்! நீ தூங்கினது போதும்! எழு''

''அடுத்ததா அந்த வெள்ளைக்குதிரை மேல ஒரு அழகான ராஜகுமாரன் அமர்ந்து வந்தான்! அந்த ராஜகுமாரன் எப்படி இருந்தான், தெரி

யுமா? மூக்கும், முழியுமா நல்ல சிவந்த நிறத்துல இருந்தான்! எவ்வளவு பெரிய தினவெடுத்த பரந்த தோள்கள்! சிறுத்த இடுப்பு! நீள நீளமாய் கைகளும், கால்களும் அப்பப்பா.. எவ்வளவு அழகு தெரியுமா? அந்த ராஜகுமாரனோட உதட்டுக்கும் மேலே இருந்த கருத்தடர்ந்த மீசை எவ்வளவு அம்சம் தெரியுமா?''

நித்யாவிற்கு அவள் பேச்சு எரிச்சலைத் தந்தது.

''உன் பாழாப்போன கனவும், மண்ணும்! எழுந்து படிடி முண்டம்!'' அதட்டினாள்.

''அந்த ராஜகுமாரன் வெள்ளைக்குதிரையை வேகமாக விரட்டிட்டு வந்து.. நடந்து போயிட்டு இருந்த என்னை அப்படி அலாக்கா தூக்கி தன் முன்னாடி உட்கார வைத்து குதிரையை வேகமாக விரட்டிட்டு போய்'' ஒரு கோயில் வாசல்ல நிறுத்தி என் கழுத்துல தாலி கட்டிட்டார்! இந்தக் கனவுக்கு என்ன அண்ணி அர்த்தம்?''

மதிவதனா ஆர்வமாய் கேட்க.. நித்யா சுள்ளென்று சொன்னாள்.

''உன் கனவுக்கான அர்த்தத்தை ஏதாவது கிழம் கட்டையைப் பார்த்து கேளு! அர்த்தம் சொல்லுவாங்க, நீ என்னை காலையிலே ரம்பம் கொண்டு அறுக்காதே, தாயே! எழுந்து படி!''

காப்பியை குவளையில் ஊற்றி.. ஸ்டூல் மீது வைத்தாள்.

''படிப்பை அப்பறம் படிச்சிக்கலாம், அண்ணி!

கண்ட கனவை மீண்டும் தொடர்ந்து காண முடியுமா? முடியாதில்ல..? அதனால் தூங்கப்போறேன்! கனவு தொடருமில்ல?''

''உன் அண்ணன் கிட்ட சொல்லிடுவேன், மதிவதனா! படிக்கற வயசுல ராஜகுமாரன் கனவுல வந்தான், தாலி கட்டினான்னு உளறிதிரியறான்னு! இவ படிப்பை நிறுத்தி... கல்யாணம் பண்ணி அனுப்பற வேலையைப் பாருங்கன்னு சொல்லிடுவேன்!''

''சொல்லுங்க... நான் கல்யாணம் பண்ணிக்க ரெடிதான்!''

''ஒரு காபி போடக்கூட தெரியாத நீ கல்யாணம் செய்துட்டு என்னடி செய்வே? உன்னைக் கட்டிட்ட பாவத்துக்கு உன் கணவன், குழந்தையெல்லாம் பட்டினி கிடந்து தான் சாகணும்!''

''நான் எதுக்கு சமைக்கணும்?''

''அப்போ அரிசி, பருப்பு, காய்கறிகளையெல்லாம் பச்சையா சாப்பிடுவீங்களா?''

''வீட்டோட மாப்பிள்ளையா இருக்க சம்மதிப்பவனைத்தான் கட்டிக்குவேனாக்கும்!''

மதிவதனா இப்படி சொல்லவும்.. நித்யாவின் முகம் மலர்ந்தது

''அவன் சம்மதிக்கலேன்னால் என்னடி செய்வே?''

''சம்மதிக்கறவனைத்தான் கட்டிப்பேன்!'' என்று கூறவும் நித்யா தனது தம்பி இளங்கோவையும், மதிவதனாவையும் மாலையும் கழுத்துமாய் அருகருகே மணவறையில் நிறுத்தி கற்பனை செய்தவள்... அந்தக் கற்பனை தந்த தித்திப்பில் மதிவதனாவின் கன்னத்தில் அழுந்த முத்தமிட்டு விட்டு வெளியேறினாள்!



மதிவதனாவோ மீண்டும் போர்வையை இழுத்து போர்த்திக் கொண்டு கண்மூடி அவள் ராஜகுமாரனை சந்திக்க கனவுலோகம் சென்று விட்டாள்!

## 2

**உன்பாதம் படும் இடத்தில் புல்லாகவும்...**
**உன் பார்வைபடும் இடத்தில் பூவாகவும்...**
**உன் தளிருடல் தழுவும் ஆடையாகவும்..**
**மாறவேண்டும் என்று தவமிருக்கிறேன்!**
**அப்போது தான் உன் ஸ்பரிசம் கிட்டும், எனக்கு!**

சக்திவேல் பெரும் பணக்காரர்!

ஊரே அவர் பின்புதான்!

ஏதாவது அடிதடி, பிரச்சனை என்றால்... அந்த ஊர்மக்கள் காவல் நிலையம் செல்லமாட்டார்கள். சக்திவேல் ஐயாவிடம் தான் வருவார்கள்.

நேர்மையானவர்! நியாயவாதி! பெரும் வள்ளல்!

இந்தத்தகுதிகள் போதாதா..? ஒரு ஊரையும், ஒரு பெரும் கூட்டத்தையும் கட்டிப்போட்டு வைப்பதற்கு!

அவருடைய மகன்தான் ராகுல்! படிப்பு சரிவர ஏறாததால் பனிரெண்டாம் வகுப்போடு படிப்பை நிறுத்திவிட்டு தந்தையோடு பண்ணைக்கு விவசாயத்தைப் பார்வையிட சென்றான். பின் தந்தைக்கு வயசாக அவருக்கு ஓய்வு கொடுத்து விட்டு முழு கணக்கு வழக்கு, பண்ணை நிர்வாகம் என்று பார்த்துக் கொண்டான்!

ராகுலின் மனைவி நித்யா! பத்து வயதில் பரத் என்று மகனிருக்கிறான்!

சக்திவேல் ஐயாவின் இரண்டாவது பிள்ளை, மதிவதனா!

அவர் மனைவி கற்பகம் ராகுலை பெற்ற பின் நீண்ட நாட்கள் கருவுறாமல் இருந்து.. பதினைந்து வருடம் கழித்து கருவுற்றாள். சக்திவேல் ஐயா மகிழ்ந்தார். மனைவியை உள்ளங்கையில் வைத்து தாங்கினார்.

பிரசவ வலி எடுத்து ஆஸ்பத்திரியில் கற்பகத்தை சேர்த்தனர். நீண்ட நாட்கள் குழந்தைபேறு இல்லாமல் இருந்ததாலும், வயதாகி விட்டதாலும், இடுப்பு எலும்பு நெகிழ்வு கொடுக்காமல் போக.. பிரசவம் சிக்கலாகி மதிவதனா பூமியில் தவழ்ந்த அடுத்த நொடி விண்ணுலகு சென்று விட்டாள், கற்பகம்.

சக்திவேல் ஐயா சுடு மணலில் விழுந்தவராக துடித்துப் போனார்! மனைவியின் மரணம் அவரைப்படுக்கையில் தள்ளியது!

அவரை படுக்கையிலிருந்து எழுந்துநடமாட வைத்தது அவர் மனைவியின் ஜாடையை உரித்து வைத்து கொண்டு பிறந்த மதிவதனாதான்!

'தாயை விழுங்கிக் கொண்டு வெளியே வந்த எமன்... தரித்திரம்

பிடித்த சனியன்' என்று இதுபோன்ற குழந்தைகளை வெறுப்பவர்கள், ஏராளம்!

ஆனால், மாறாய் கற்பகம் ஜாடையில் இருந்த மதிவதனா மேல் அவர் மட்டற்ற அன்பும், பாசமும் கொண்டார்! தனது மனைவியே மீண்டும் மகள் உருவில் வந்து அவரோடு வாழ்வதாய் எண்ணி அந்தக்குழந்தைக்காக எழுந்துவிட்டார், சக்திவேல் ஐயா!

ராகுலுக்கும் தங்கையென்றால் உயிர்! அவள் சொல்தான் அவனுக்கு வேதம்!

தந்தையும், தமையனும் மாறிமாறி அன்பு, பாசம், நேசம் கொண்டு வளர்த்ததால் மதிவதனா ஒரு குட்டி இளவரசி கணக்காய் வளர்ந்தாள்.

மதிவதனா பிடிவாதக்காரி! எதையும் சாதித்தே பழகியவள்!

இன்பத்தையே அறிந்தவள்! துன்பத்தின், துயரத்தின் நிழல் கூட அறியாதவள்!

அவளுக்கு படிப்பைத் தவிர.. எந்த வேலையும் தெரியாது!

தெரிந்தாலும் செய்ய வேண்டிய அவசியம் என்ன? காலால் இட்ட வேலைகளை கைகளால் செய்ய நிறைய வேலைக்காரர்கள் இருக்கும் போது!

நன்றாக உடுத்திக் கொள்வாள்! பட்டுப்பாவாடை, தாவணி தான் அவளுக்கு பிடித்தமான உடை!

கல்லூரியில் தொளதொள, டைட்டான சுடிதாரில் வரும் பெண்களை விட.. பட்டுப்பாவாடை, தாவணியில் அம்சமாய் வரும் இந்த அழகு தேவதையைத்தான் நிறைய கல்லூரி மாணவர்களுக்கு பிடிக்கும்!

அவளின் தந்தைக்கு இருந்தசெல்வாக்கு அடுத்ததாய் தங்கைமேல் உயிரையே வைத்திருந்த ராகுல்மேல் பயம் என யாரும் அவளை நெருங்கமாட்டார்கள்!

அவளும் தான் உண்டு, படிப்பு உண்டு என்று இருப்பாள்!

மதிவதனா.. ஐந்தரையடி உயர அழகு பெட்டகம்!

முழுநிலவு போன்ற அழகான வட்டவடிவ வதனம்!

காதளவு நீண்ட இரு பெரிய நயனங்கள்! அந்த வட்ட முகத்துக்கு ஏற்ற கூரியநாசி!

செங்காந்தள் மலரின் நிறத்தைக் கொண்ட அழகான இரு இதழ்கள்! ஒரு ஆப்பிளை இருகூறாய் வெட்டி வைத்தாற்போன்ற சதைப் பற்றான கன்னங்கள்!

சிற்பி வடித்த சிலையாய்.. வடிவான மார்புடன்... சிறுத்த இடையுடன் கூடிய உடலமைப்பு!

அலையலையாய் நீண்ட சுருண்ட கருங்கூந்தல்!

ஆனால், அவளின் நிறம் மட்டும் மாநிறம்!

எல்லா அம்சங்களும் பொருந்திய அவளுக்கு தன்நிறம் மீது ரொம்பவே கவலை! அதை ஒரு குறையாய் எண்ணி எண்ணி மருகிப்போவாள்!

சிவப்பு தோல் மேல் பெரிதும் மோகம், அவளுக்கு!

ராகுல் தங்கையின் அறைக்கு செல்ல.. அவளோ போர்வையை



இழுத்து போர்த்திக் கொண்டு இருக்க தங்கையை தட்டி எழுப்பினான்.

''மதி மதிகுட்டி எழுந்திரிடா! இது கடைசி வருடம், இல்லையா? படிச்சாதானே பர்சன்டேஜ் வாங்க முடியும்?''

''பர்சன்டேஜ் வாங்கி என்ன செய்யப்போறேன்? வேலைக்கா போகப்போறேன்?''

''வேலைக்கு போக மட்டும் பர்சன்டேஜ் வேண்டும் என்பதில்லை. நீ முதல் வகுப்பில் தேர்வு பெற்றால் தானே உனக்கு கௌரவம்... எங்களுக்கு சந்தோசம்! நம்ம வசதிக்கு நீ வேலைக்கு போகணும்னு அவசியமில்லேதான்! நீ படிக்கும் படிப்பு உனது குழந்தைகளின் கல்வி வளர்ச்சிக்கு பயன்பட்டால் போதும் தான்! ஆனால் உன்னை மணக்கப்போகும் மாப்பிள்ளை, உன்னை வேலைக்கு அனுப்ப ஆசைப்பட்டால்?''

''அந்த அளவா இல்லாத மாப்பிள்ளைக்கு என்னைத் தருவே, அண்ணா?''

''மாட்டேன்தான்! உனக்கு விதியிருந்து, ஒரு ஏழையை மணக்க நேர்ந்தால்?''

''நீ என்னை அம்போ என்றா விட்டுவிடுவாய்? அந்த மாப்பிள்ளைக்கே என்னை கட்டி வைத்து நிறைய சீரும் நகையும் போட்டு அனுப்பமாட்டாயா?

அடுத்ததா நம் தாத்தா, அப்பா சொத்தில் எனக்கும் பாதி பங்கு உண்டுதானே? எனக்கான சொத்தை, பாதியாய் பிரித்து எனக்கு கொடுக்க மாட்டாயா?''

''கட்டாயம் கொடுப்பேன், மதிம்மா!''

''பாதிதான் பிரித்து கொடுப்பாயா? உன் தங்கை கேட்டால் முழு சொத்தையும் தரமாட்டாயா?''

மதிவதனா அவன் கைப்பிடித்து பாசமாய் கேட்டாள்.

''நீ கேட்டால் என் உயிரையே தருவேன்! வதனாம்மா! கேவலம்.. செங்கல்லும், சிமெண்டும் அடங்கிய பங்களாவையும்... மண்ணும், மணலும் நிரம்பிய நிலத்தையும், தரமாட்டேனா, கண்மணி? இந்த அண்ணனைப் பற்றி புரிந்து கொண்டது அவ்வளவு தானா?''

ராகுல் லேசான கோபம் கொள்ள...

''அண்ணா.. உன்னைப் பற்றி எனக்கு முழுமையா தெரியும்! நான் என்றால் உனக்கு உயிர்ன்னும், ரொம்ப இஷ்டம்ன்னும் தெரியும்! உலகத்துலேயே உனக்கு யாரை முதலில் பிடிக்கும்ன்னு கேட்டால்.. உன் மனைவி, மகனுக்கு கூட முதல் இடம் தரமாட்டே! எனக்கு தான் முதலிடம் தருவே! சும்மா உன்னை சீண்டினேன், அண்ணா!

நான் எப்போதும் உன்னிடம் போட்டிக்கே வரமாட்டேன்! சொத்து வேண்டும். பங்களா வேண்டும்ன்னு கேட்கமாட்டேன்! உன்னிடம் இருந்து நான் எதிர்பார்க்கிறது உன்னோட தூய அன்பையும், பாசத்தையும் தான்!

நான் சாகறவரைக்கும் நீ இப்படியே என்மேல் மாறாத அன்பு கொண்டு இருக்க வேண்டும், அண்ணா!''

மதிவதனா முடிக்க ராகுல் அவள் பேச்சில் நெகிழ்ந்து போனான்.
''மதி..மதிம்மா...''

''உனக்கு கல்யாணமான பிறகும் நான் தானே முதல், முக்கியம்! பிறகு தானே உன் மனைவி மகன் எல்லாம்!

அதுபோல நானும் என் கல்யாணத்திற்கு பிறகு, உன்னைப் போலவே இருப்பேன்! உங்களுக்கு பிறகு தான், எனக்கு வர கணவனும், குழந்தைகளும்!''

மதிவதனா சொல்ல அந்தச் சொற்கள் ராகுலின் உயிர்வரை ஊடுருவி சிலிர்க்க வைத்தது! அவளை நினைத்து சந்தோசப்பட்டான்! அவளின் மிதமிஞ்சிய அன்பைக் கண்டு கர்வப்பட்டான்!

மதிவதனா சொன்னச் சொல்லை காப்பாற்ற மாட்டாள், என்று அறியாமல்!

கடைசி பரீட்சை! கடைசி நாள் கல்லூரிக்கு செல்கிறோம்! இன்றோடு பழகிய தோழிகளையெல்லாம் பிரியப்போகிறோம் என்ற கவலை. அவள் மனதில் நிரம்பியிருந்தது.

வானத்து நீலக்கலரில் பட்டுபாவாடை, தாவணி அணிந்து தேவதை கணக்காய் படியிறங்கி வந்த மதிவதனாவையே கண்கள் விலக்காமல் பார்த்துக் கொண்டிருந்தார் சக்திவேல் ஐயா,

அவர் அருகில் ராகுல் அமர்ந்து, விவசாய கணக்குகளை கூறிக் கொண்டிருந்தான்.

மதிவதனா தந்தையின் அருகில் வந்து, அவரின் பாதம் தொட்டு வணங்கினாள்.

''இன்று கடைசி தேர்வு இல்லையா? நல்லா எழுதிட்டு வா மதிவதனா!''

''சரிப்பா!''

''மேலே அதே கல்லூரியில எம்.எஸ்ஸி சேர்ந்து படிக்கறியாம்மா? சேர்த்துவிடறேன்!''

''படிச்சது போதும்ப்பா!''

''வீட்டுல இருந்து என்னம்மா செய்யப்போறே?'

''உங்களுக்கு வயசாகுது! அடுத்ததா சமீபமா ஹார்ட்டுல பிரச்சனைன்னு ஹார்ட் ஆபரேசன் செய்துட்டு வந்திருக்கீங்க!''

''சரி நீ படிக்கறதுக்கும், எனக்கு வயசாகறதுக்கும், ஹார்ட் ஆபரேசன் செய்துட்டு வந்து இருக்கறதுக்கும்.. என்னம்மா சம்மந்தம்?''

''சுத்தி வளைச்சி சொன்னா புரிஞ்சிக்க மாட்டீங்களாப்பா? எதையும் நேரா வெளிப்படையா சொல்லணுமா?''

மதிவதனா சிணுங்கலோடு கூற சக்திவேல் ஐயாவிற்கு மட்டுமல்லாது ராகுல் அங்கு வந்த நித்யாவிற்கு கூட அர்த்தம் புரியாமல் விழித்தாள்!

''புரியும்படி சொல்லு, வதனாம்மா?''

''எனக்கு திருமணம் செய்து வச்சிடுங்க!''

''என்ன?'' என்று சக்திவேல் ஐயா ஆச்சரியமாக..

''காலா காலத்துல பொண்ணுக்கு கல்யாணம் செய்து கண்குளிர



பார்க்கணும்.. அவள் மாப்பிள்ளையோடு சந்தோசமா வாழ்ந்து.. வரிசையா பெத்துதர பேரப்பிள்ளைகளை கொஞ்சணும்ன்னு ஆசையில்லையாப்பா...?''

''அடிக்கள்ளி.. தகப்பன்கிட்ட பேசற பேச்சா இது?'' நித்யா சொல்ல..

''என்ன தப்பு அண்ணி? என் அப்பாவுக்கு உடம்பு சரியில்லே! இவர் இருக்கும் போதே என்னை ஒருத்தர் கையில பிடிச்சி கொடுத்துட்டால்.. இவர் கடமையும் தீர்ந்துடும்! இவருக்கும் நிம்மதியில்லையா?

நான் கணவனோட வாழறதைப் பார்த்து... அப்பா சந்தோசப்படணும்ன்னு ஆசையா இருக்கு! என் சந்தோசம் கண்டால் அப்பாவுடைய ஆயுளும் கூடுமில்லையா?''

அங்கிருந்த அனைவருக்கும் ஆச்சரியம்!

''அப்பா வதனா சொல்றமாதிரி நான்கூட யோசிக்கலையே! உங்க சந்தோசத்தின் மேலும், ஆயுளின் மேலும் வதனாவிற்கு எவ்வளவு அக்கறை?'' ராகுல் மகிழ்வோடு சொல்ல..

''இங்கே வாம்மா! என் குலவிளக்கு நீதாம்மா! இந்த தகப்பன் மேல உனக்கு இவ்வளவு பிரியமாடா?''

அருகில் வந்த மதிவதனாவின் முகம் தடவி, கைகளைப் பற்றிக் கொண்டார் சக்திவேல் ஐயா,

''அப்பா... நான் பொறக்கும் போதே உங்க மனைவியை எமனிடம் அனுப்பிட்டு வந்தவள்! உங்க சந்தோசத்தைப் பறித்துக் கொண்டவள்! அப்படிப்பட்ட என்மேல் சிறுதுளி கூட வெறுப்பைக் காட்டாமல் வளர்த்தவர் நீங்கள்!

மனைவி இறந்த மறுமாதமே, மறுதாலிகட்டி, வேறொருத்தியோட குடும்பம் நடத்தற நிறைய ஆண்களைத் தான் நான் பார்த்திருக்கிறேன்! சித்தி கொடுமைக்கு ஆளாகற நிறைய குழந்தைகளைப் பார்த்திருக்கிறேன்!

நீங்க உங்க எதிர்கால வாழ்க்கைக்கு ஒரு பெண்ணை மணந்து எங்கள் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்காமல் எங்களுக்காகவே வாழ்ந்தவர், நீங்கள்!

ஆரோக்யமா இருந்த உங்களுக்கு திடீர்ன்னு இருதயத்துல கோளாறுன்னு ஆபரேசன் செய்து இருக்கீங்க! ஆரோக்யமா ரொம்ப நாளைக்கு இருப்பீங்கதான்! ஆனாலும், உள்ளுக்குள்ள எனக்கும் பயம் தாப்பா!

உங்க மூச்சிருக்கும் போதே என்னை ஒரு நல்லவர் கையில் பிடிச்சி கொடுத்துடுங்கப்பா!''

''செய்யறேம்மா செய்துடறேம்மா! ஆனால், உனக்கொரு கல்யாணத்தை செய்து வச்சி உன்னைப் பிரிந்து எப்படிம்மா இருப்போம்?''

''எதுக்கு பிரியணும்?'' சட்டென்று கேட்டவள், சொன்னாள்.

''என்னாலும் உங்களைப்பிரிந்து இருக்க முடியாது! நம்ம வீட்டோடவே இருக்க மாப்பிள்ளையாப் பாருங்கப்பா! நீங்க அண்ணா,

அண்ணி, நான், உங்க மாப்பிள்ளைன்னு எல்லோரும் இங்கேயே ஒண்ணா வசிக்கணும்ப்பா!''

சக்திவேல், ராகுல் முகத்தை விட நித்யாவின் முகம் அதிகமாய் மலர்ந்தது.

''கட்டாயம் உன்னை வீட்டோட இருக்கற மாப்பிள்ளைக்குதாம்மா கட்டி வைப்பேன்! கவலைப்படாதே! நாம் எப்போதும் பிரியவே தேவையில்லை! சரியா?''

''ரொம்ப நன்றிப்பா! நான் கிளம்பறேன்!''

''ஏய் வதனா சாப்பிட்டு போடி!''

''வேண்டாம் அண்ணி!''

''ம்கூம்! தோ வரேன்!'' என்று ஓடியவள் நான்கு இட்லியை தட்டில் வைத்து சாம்பார், சட்னி ஊற்றி எடுத்து வந்து ஊட்டி விட்டாள்.

''அண்ணி.. நீங்க என் அண்ணி இல்லே என் தாய்!'' என்று கண்கள் கலங்க சொல்ல...

''ஏய் மதிவதனா என்னாடி கண்ணெல்லாம் கலங்கிட்டு?''

''சின்ன வயசுல இருந்து தாய் இல்லேங்கிற குறையோட தான் வளர்ந்தேன்! நீங்க என்னைக்கு, என் அண்ணாவை கல்யாணம் செய்துட்டு இந்த பங்களாவுக்குள்ள நுழைச்சீங்களோ.. அன்னையில இருந்து எனக்கு தாய் இல்லேங்கிற குறை சுத்தமா போயிடிச்சி! அப்படி ஒரு எண்ணமே வந்ததில்லை! இப்படி என்னை தாயாய் தாங்கிக் கொண்ட, தட்டி தாலாட்டிய உங்களுக்கு நான் என்ன கைமாறு செய்வேனோ...?''

''கலங்காதே, வதனா! கண்ணைத் துடைச்சிட்டு கிளம்பு. கயல்விழி வாசல்ல காத்திருக்கா!''

''உங்க மகன் பரத்தைக்கூட இந்த அளவு கவனிக்கறது இல்லையே! என்னைத்தானே பொத்திபொத்தி பார்த்துகிறீங்க!''

''என் மூத்தபிள்ளைடி, வதனா நீ! உன்னை என் வயத்துல சுமக்காதது மட்டும் தான் பாக்கி! உன்னைப் பொத்தி பொத்தி பாதுகாப்பதிலும்.. கண்ணுக்குள்ள வச்சி காப்பதிலும் என்னடி அதிசயம்?''

''அண்ணி.. அண்ணி'' என்று தழுதழுத்தவளை இழுத்து முத்தமிட்டு அணைத்துக் கொண்டாள், நித்யா.

நித்யா இந்த வீட்டிற்கு மருமகளாய் வந்து பத்து வருடங்கள் ஆகிறது! அப்போது மதிவதனாவிற்கு பத்து வயது!

அழகாய், துறுதுறுவென இருப்பாள்! தன்னை அண்ணனிடமிருந்து பிரித்து விடுவாளோ என்று பயந்து கொண்டு இருந்தவளை நித்யா இரு கரம் நீட்டி அழைத்து, அணைத்து, முத்தமிட்டு, மடியில் தூக்கி அமர்த்திக் கொண்டாள், மணவறையில் ராகுலின் தாலி ஏறும் முன்பே!

பெற்ற குழந்தையாய் பாவித்து அன்புக்காட்டி, பாசமழை பொழிய... மதிவதனா நித்யாவையே சுற்றி சுற்றி வந்தாள்!

சரியாக சாப்பிடாமல் அடம்பிடிக்கும் மதிவதனாவிற்கு சாப்பாடு ஊட்டி விடுவது நித்யாதான்! அந்த பழக்கம் இன்றும் தொடர்கிறது!

சனி, ஞாயிறுகளில் மதிவதனா தலையில் நல்லெண்ணெய்யை ஊற



வைத்து தலைக்கு குளிக்க வைப்பாள்! நீண்ட கருகரு சுருண்ட அடர்ந்த கூந்தலை நீர்போக பூத்துவாலையால் துடைத்து சாம்பிராணி புகைப் போடுவாள்!

பின் வலிக்காமல் சிக்கெடுத்து தலைவாரி விடுவாள்! அடர்த்தியாய் கட்டிய மல்லிகை, கனகாம்பரம் சரங்களை சூடிவிடுவாள்!

அவளின் அழகைக் கண்கொட்டாமல் பார்ப்பாள்!

கன்னம் வழித்து நெட்டி முறிப்பாள்!

அடிக்கடி மாலை நேரங்களில் உப்பு, மிளகாய் கொண்டு கண்ணாறு கழிப்பாள்!

இன்னமுமே மதிவதனாவிற்கு தனியாக தலைக்குளிக்க தெரியாது! அப்படியே குளித்தாலும் அழுக்கு போகாது!

எண்ணெய் பிசுபிசுப்பு போகாது!

நித்யா.. மதிவதனாவிற்கு அரவணைப்பில் அண்ணியாய் பாசம் காட்டுவதில் தாயாய் கருத்துக்களை பரிமாறிக் கொள்வதில் சகதோழியாய் மாறிப்போனாள்!

நித்யா சொன்ன சொல்லை மதிவதனா மீறமாட்டாள்!

நித்யா கிழித்த கோட்டை மதிவதனா தாண்டமாட்டாள்!

அந்த அளவு அவர்களிடையே பாசப்பிணைப்பு இறுகியிருந்தது!

இந்த பாசப்பிணைப்பு அவள் திருமணத்திற்கு பிறகும், என்றும் நிலைத்து நீடித்திருக்குமா?

## 3

**உன் பார்வை பட்டால்...**
**சாம்பல் கூட சந்தனசிற்பமாகும்!**
**உன் பாதம் பட்டால்...**
**பாலைவனம் கூட சோலைவனமாகும்!**

நித்யாவின் பெற்றோர் சண்முகம், பானுமதி பெற்றோர்களை எதிர்த்து காதல் திருமணம் செய்து பூம்பொழில் கிராமத்திற்கு பிழைக்க வந்தவர்கள்! சக்திவேல் ஐயாவின் பண்ணையில் கூலிவேலை செய்து பிழைத்து வந்தனர்.

நித்யா, இளங்கோ என்று இருகுழந்தைகளைப் பெற்று வறுமையிலும் மகிழ்ச்சியாய் வாழ்ந்தனர்.

ஒரு நாள் வெளியூரில் திருமணம் என்று கிளம்பி சென்றவர்கள்.. விபத்துக்குள்ளாகி பிணமாய் திரும்பினர்.. சண்முகம், பானுமதி.

சொந்த பந்தங்கள் வந்து அடக்கம் செய்தனர்.

பெரியப்பா, சித்தப்பா, அத்தை என்று அனைவரும் காரியம் முடிந்ததும்... அவர்களை அம்போ என்று விட்டுவிட்டு புறப்பட்டு விட்டனர்.

பதினைந்து வயது நித்யா, பனிரெண்டு வயது இளங்கோ.. இருவருக்கும் ஆதரவு காட்ட யாரும் இல்லை!

நிர்கதியாய் நின்ற இளங்குருத்துகள் இருவரும் நட்டாற்றில் விட்ட

கணக்காய் தவித்து போயினர்!

சக்திவேல் ஐயா கொடுத்த இரண்டு செண்ட் நிலத்தில் அவர்களுக்கு சொந்தமாய் இருந்தது. சின்னஞ்சிறு குடிசை வீடு மட்டும் தான்!

பெற்றவர்கள் சேமிப்பு என்று எதையும் வைத்துவிட்டு போகவில்லை! இருந்த அரிசியும், பருப்பும் காலியாகிவிட செய்வதறியாது திகைத்தனர்.

பத்தாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த நித்யா படிப்பை பாதியிலேயே நிறுத்திவிட்டு சக்திவேல் ஐயாவின் பூந்தோட்டத்திற்கு பூப்பறிக்க சென்றாள்.

சக்திவேல் ஐயா உதவுகிறேன் என்று கூற... நித்யா மறுத்துவிட்டாள்! தோட்டத்தில் பூப்பறிக்கும் வேலையை மட்டும் கொடுத்து உதவுங்கள் என்று கேட்டுக் கொண்டாள்.

அங்கு கிடைத்த வருமானத்தில் தம்பியும், தானும் ஏதோ சுமாராய் வயிற்றைக் கழுவினர்.

இளங்கோ தொடர்ந்து படித்தான்! தன் படிப்பை தியாகம் செய்துவிட்டு.. கூலிவேலை செய்து காப்பாற்றும் நித்யாவின் கஷ்டம் கண்டு.. இளங்கோ பொறுப்பாய் படித்தான்!

கந்தையானாலும் கசக்கி கட்டிக்கொண்டு...

கிழிசலானாலும் தைத்து உடுத்திக் கொண்டு இருந்த நித்யாவிற்கு.. பிரம்மன் வஞ்சனை இல்லாமல் அழகை வாரி வாரி கொடுத்திருந்தான்.

சந்தன சிற்பமாய்.. நிலவாய் ஜொலித்த முகத்துடன்... மயில்தோகையாய் நீண்டு வளர்ந்த கூந்தலுடன்... மல்லிகை, முல்லை மொட்டுக்களை கொய்துக் கொண்டிருந்த பூவை... அங்கு மேற்பார்வை செய்து கொண்டிருந்த காளையின் மனதையும் கொய்துவிட்டாள்!

ராகுல் அவள் அழகில், மேனி நிறத்தில், சுறுசுறுப்பில் மயங்கிப் போனான்!

அவளின் அநாதையான நிலையைக் கண்டு பரிதாபப்பட்டான்!

அவள் இருக்கும் இடத்தையே சுற்றி சுற்றி வட்டமிட்டான்! அவளை யாரும் அறியாமல் அங்கே, இங்கே நின்று கண்கள் விரிய காதலோடு நோக்க... இதையெல்லாம் எதுவும் அறியாமல் தானுண்டு, தன் வேலையுண்டு என்று இருந்தாள், நித்யா!

கொஞ்சநாளில் யாரோ தன்னைக் கூர்ந்து நோக்குவது போல.. அவளின் உள்ளுணர்வு எச்சரிக்க.. தூரத்தில் நின்று அவளையே வைத்த விழி எடுக்காமல் நோக்கிக் கொண்டிருந்த ராகுலை கவனித்து விட்டாள்!

ராகுலின் கண்களில் தெரிந்த கூர்மையும், ஒலியும் அவளுக்கு எதையோ உணர்த்தியது! அவளுள் எச்சரிக்கை உணர்வும் மேலோங்கியது!

ஐந்து மணிக்கெல்லாம் வேலை முடிந்துவிடும்!

பெரும்பாலோர் அடுப்பெரிக்க சுள்ளிபொறுக்கவும், மாடுகளுக்கு புல் அறுக்கவும் சென்றுவிடுவர்.



பண்ணையிலிருந்து பூம்பொழில் கிராமம் ஒரு கிலோ மீட்டர் தள்ளி உள்ளது. நித்யா கிளம்பும் போது ராகுலும் பின்னாடியே நடந்து விடுவான். ராகுல் வீடு மையத்தில் உள்ளது என்றால் நித்யாவின் வீடு ஊரின் கிழக்கே கடைசியில் உள்ளது.

பைக்கை தவிர்த்து அவள் பின்னாடி வரும் ராகுலைத் திரும்பிகூட பார்க்கமாட்டாள்.ஓட்டமும், நடையுமாய் ஓடிவந்து குடிசைக்குள் புகுந்து கொள்வாள்! மூடிய கதவை முறைத்துவிட்டு ராகுல் செல்வான்.

பூத்து குலுங்கும் காட்டுப் பூந்தோட்டமாய் காவல்காரன் இன்றி இருந்த நித்யாவை பதம் பார்க்கவும், பறித்து சூடிக்கொள்ளவும் பூம்பொழில் கிராமத்து காலிப்பயல்கள் நினைத்தனர்,

காலிப்பயல்களின் சலசலப்புக்கு அஞ்சாமல், அதைப் பொருட்படுத்தாமல் ஓட்டுக்குள் சுருங்கும் நத்தையாய் வாழ்க்கையை நித்யா ஓட்டிக் கொண்டிருந்தாள்.

திராட்சை கொடியில் இருந்த கனிக்காக.. எட்டி எட்டி முயற்சித்த நரிக்கு கனிகிட்டாமல் போனதும்... 'ச்சீ...ச்சீ...' இந்த பழம் புளிக்கும் என்று சென்ற நரியைப்போல கல்லெடுத்து குறிப்பார்த்து வீசியும் மரத்திலிருந்து கனிவிழாமல் போனால்... சலித்துக் கொண்டு போகும் நபர்கள் போல....

அவளைக் கட்டினால் மாமியார் வீடென்று ஒன்று உண்டா? மாமியார் கையில் ஒரு வேளை சோறு உட்கார்ந்து உண்ண வழியுண்டா...? நகை கிடைக்குமா...? சொத்து கிடைக்குமா....?

'அவளைக்கட்டினால் இலவசமாய் அவள் தம்பி தான் கிடைப்பான்' என்று அவரவர்களுக்கு தெரிந்த காரணம் கற்பித்து அகன்றனர்.

அவள் கற்பை வேட்டையாட நினைத்தவர்கள் ராகுல் அவளைப் பார்ப்பதையும், அவள் பின்னே வருவதையும் கண்டு... பெரிய இடத்து பொல்லாப்பு நமக்கெதுக்கு என்று ஒதுங்கிக் கொண்டனர்.

ராகுல் அவளைச் சுற்றி வருவது அவளுக்கு பாதுகாப்பு வளையமாய் இருந்தது.

நாட்கள் நகர.. நகர... பருவச் செழிப்பில் இருந்த நித்யாவின் பார்வையோடு ராகுலின் ஆழ்ந்த பார்வை, நேசத்தோடு மோதும் போது.. அவள் உடலில் ரசாயன மாற்றம் நிகழும்! கட்டுப்படுத்திக் கொள்வாள், நித்யா!

அவன் பார்வை அவளை ஊடுருவும் போது அவளின் நெஞ்சம் கட்டுத்தறியை பிய்த்துக்கொண்டு தாயிடம் தஞ்சமடையும் கன்றாய்... அவனிடம் ஓடப்பார்க்கும்? அவள் பலமான கயிறு கொண்டு கட்டிப்போடுவாள், மனதை!

ராகுலுக்கு நித்யாவின் ஒதுக்கம் கஷ்டத்தைக் கொடுத்தது! தன் மனதில் உள்ள அவள் மேலான காதலைச் சொல்ல தருணம் பார்த்துக் கொண்டிருந்தான்.

அன்று நித்யாவின் பெற்றோர்களுக்கு இறந்தநாள்.

காலையில் எழுந்தவுடன் இன்று வேலைக்கு போக வேண்டாம் என்று நினைத்தாள். நேரம் ஆக ஆக ஒருநாள் கூலி போய்விடுமே என்று மனசு அடித்துக்கொள்ள... சமையலை விரைவில் முடித்து.. படையல் போட்டு கும்பிட்டு விட்டு... ஒரு பத்து மணி வாக்கில் போய் தோட்டத்தில் நின்றாள்.

வேலைக்கு ஒன்பது மணிக்கு சென்று விட வேண்டும். அவர்களுக் கான பாத்தியில் உள்ள மல்லிகை, முல்லை, மொட்டுக்களை பறித்து கொடுத்துவிட்டு நேரத்திலேயே கூட சிலர் வீட்டிற்கு திரும்பிவிடுவர், எப்படி விரைவாய் பறித்தாலும் மாலை 5 மணியாகும் வேலையை முடித்துவிட்டு அனைவரும் கிளம்புவதற்கு!

அவளுக்கு இருந்த மனநிலையில் அவளால் வேகமாய் வேலை செய்ய முடியவில்லை, எல்லோரும் வேலை முடிந்து சென்றுவிட்ட னர். அவள் தோழி செவ்வந்தி கூட வீட்டில் ' அம்மா சீக்கிரம் வரச் சொன்னாள்' என்று கிளம்பிவிட்டாள் .

அவள் பாத்தியில் உள்ள மொட்டுக்களை பறித்து கொடுத்துவிட்டு... கடைசி ஆளாய் போய் நின்று ராகுலிடம் கூலியை வாங்கிக் கொண்டு நடந்தாள்.

ராகுல் எதிர்பார்த்த தருணம் வர...

''நித்யா...'' என்று அழைத்துக் கொண்டு பின்னாடி செல்ல... அவள் அவன் அழைப்பை லட்சியம் செய்யாமல் வேகவேகமாய் நடந்தாள்.

அவன் அவளை முந்திக்கொண்டு போய் வழியை மறித்து நின்றான்.

''ஏய் நித்யா... நான் கூப்பிடறது காதுல விழலையா? நின்னு என் னன்னு கேட்டால் குறைஞ்சிடுவியா?''

''கூலிதான் கொடுத்துட்டீங்களே! அப்புறம் பேச என்ன இருக்கு?''

''நிறைய இருக்கு!''

''எனக்கு உங்களோட பேச எந்த விஷயமும் இல்லே! நான் வரேன்!''

அவள் நடக்க... அவன் சிறிதும் தயங்காமல் அவள் கைப்பற்றினான். அவள் கோபமானாள்.

''கையை விடுங்க, சின்னய்யா! நீங்க செய்யறது கொஞ்சம் கூட சரியில்லை!'' கத்தினாள்.

அவனிடமிருந்த கையை விடுவித்துக் கொள்ள போராடினாள். அவன் பிடி உடும்பு பிடியாய் இருக்க மீள முடியவில்லை!

''ஏய் நித்யா... என்னைக் கொஞ்சம் புரிஞ்சுக்கடி! நான் சொல்ற தைக் கொஞ்சம் கேட்டுட்டுப் போடி!''

''என்ன 'டி' போட்டு பேசறீங்க?'' ஆவேசமாய் கேட்க..

''டி' போட்டா என்ன தப்பு?'' அவன் அலட்சியமாய் கேட்டான்.

''நீங்க யாரு 'டி' போட்டு பேசறதுக்கு? என்ன உரிமையிருக்கு?''



''நாளைக்கு உன்னைக் கட்டிக்க போறவன்,. நான்! அந்த உரிமை யில 'டி' போட்டு பேசறேன்!''

''சின்னய்யா... ஏதும் உளறாதீங்க?'' மிரட்டலாய் கேட்டாள்,.

''உளறலேடி! உண்மையைச் சொல்றேன்டி! நான் உன்னை உயி ருக்குயிரா விரும்பறேன்டி, என் கண்ணே! நீ என்னைக்கு என் காட் டுக்கு மலர் பறிக்க வந்தாயோ அன்னைக்கே என் மனசையும் சேர்த்து பறிச்சுட்டே, நித்யா!

நான் உன்னை நேசிக்கிறேன், நித்யா!

நீ எனக்கு வேண்டும், நித்யா!''

நித்யா மௌனமாய் உறைந்து நின்றாள்..

''நித்யா.. பதில் சொல்லும்மா..? என்னை உனக்கு பிடிச்சிருக்கா?''

நித்யா பட்டென்று சொன்னாள்.

''பிடிக்கலே!'

அவள் பதிலில் அதிர்ந்தவன் கேட்டான்.

''ஏன்? எனக்கென்ன குறை?''

''எந்த குறையும் இல்லை!''

''பின்னே ஏன் பிடிக்கலே!''

''நாங்க ஏழைங்க! நீங்க பணக்காரவங்க!''

''அதனால பயமா...?''

''ஆமா...! சொத்து, சுகம், அந்தஸ்துன்னு எல்லாத்துலயும் நீங்க உயர்ந்தவங்க! ஊர் பெரிய மனிதரோட பிள்ளை, நீங்க! நான் தாய், தகப்பனற்ற அநாதை! என் தகுதிக்கு உங்க மேல எல்லாம் ஆசைப்ப டக்கூடாது!...

நீங்க உயர்ந்த கோபுரத்துல நிற்கறவங்க! நாங்க குப்பை மேட்டுல கிடக்கறவங்க! உங்களுக்கும்,எனக்கும் எந்த விதத்திலேயும் பொருந் தாது.!

உங்க அந்தஸ்துக்கும், கௌரவத்துக்கும் உங்களைக் கட்டிக்க சுற்று வட்டத்து கிராமத்துல இருக்க பெரிய மனிதர் வீட்டு பொண்ணுங்க ளைக் கொடுக்க... நான் நீன்னு கியூவுல நிற்கறதா பேசிக்கறாங்க!

அதுல ஒருத்தரைத் தேர்ந்தெடுத்து கட்டிக்கங்க! சந்தோசமா வாழுங்க! நான் வரேன்!''

அவள் சொல்லிவிட்டு... பெரிய விம்மலோடும்,வெடிப்போடும் அழுது கொண்டு ஓட... ராகுல் அவள் போவதையே வருத்தத்துடன் முறைத்துக் கொண்டிருந்தான்.

**நீ என்னை நினைப்பதேயில்லை**
**யென்றாலும்..**
**எப்போதும் உன் ஞாபக அலைகள்தான்...**

**4**

இரவு தனது ஆட்சியை பூமியில்நிலைநாட்டிக் கொண்டிருந்தது!

காலையில் வடித்த சாதத்தில் கொஞ்சம் மீதியிருக்க... அதை இளங்கோவை உண்ண வைத்துவிட்டு.. நித்யா பட்டினியாய் படுத்துவிட்டாள்.

வயிறு பசியில் எரிந்தது! நெஞ்சம் சோகத்தால் கனத்தது!

அவளுடைய பெற்றோர் இறந்து இன்றோடு மூன்று ஆண்டுகள் முடிந்துவிட்டது. பெற்றோர்களோடு சந்தோசமாய் காலத்தைக் கழித்த நாட்கள் கண்களில் மின்னி கண்ணீரை வரவழைத்தது! ஆறாய் புறப்பட்ட கண்ணீர்... காதோர முடியை நனைத்தது, தலையணையையும் ஈரமாக்கியது!

'படிக்க வேண்டிய வயதில் பள்ளிக்கு செல்லாமல் பண்ணையார் வீட்டு தோட்டத்திற்கு சென்று கூலி வேலை செய்கிறேனே!'

'அப்பாவும், அம்மாவும் இருந்திருந்தால் என் படிப்பு பாழாயிருக்குமா?'

அன்று இருவர் உழைப்பில் பானுமதி படுசிக்கனமாய் இருந்ததால், சுமாராய் குடும்பம் ஓடியது!

ஆனால், இன்று ஒருவர் சம்பாத்தியத்தில் உண்பதற்கும், உடுத்துவதற்கும் கஷ்டமாய் இருந்தது! இளங்கோ வேறு பத்தாம் வகுப்பு படிப்பதால் அவள் கொண்டு வரும் கூலித்தொகையில் பாதிக்கு மேல் அவனுடைய புத்தகம், பேனா, நோட்டு புத்தகம், வரைபடம் ஆகியவற்றிற்கு அதிகமாய் செலவானது!

ஆனால், இவ்வளவு இழப்பிலும், கஷ்டத்திலும் கூட நித்யாவின் மனதில் ஒரு பெரிய சந்தோசம் நிலவியது! தன் தம்பிக்கு தாயுமாய், தகப்பனுமாய் புது ஜனனம் எடுத்து.. தனியொருத்தியாய் தம்பியைக் காப்பாற்றி கொண்டு... தனக்கும், தன் கற்புக்கும் எந்த தீங்கும் ஏற்படாமல் வாழ்வது கூட சுகமாய்தான் இருந்தது.

பண்ணைக்கு வேலைக்கு சென்றதிலிருந்து... அவளை ஆழத்தான் நோக்கினான் ராகுல்,

பதினாறு, பதினேழு வயதில் அவன் பார்வை அவளைப் பாதிக்கவில்லை, காரணம், பெற்றோரின் இழப்பில் இருந்ததால் மனது மரத்திருந்தது,

இப்போது காலம் செல்ல செல்ல.. அவளுள் இருந்த... பெற்றோரை இழந்த ரணம் மெல்லமெல்ல ஆறவும்.. மனம் இயல்பு நிலைக்கு திரும்பவும்.. மனதோடு வயதும் சேர்ந்து...ராகுலின் நேசப் பார்வை அவளின் மெல்லிதயத்தை அசைத்துப் பார்த்தது!

அவன்மேல் ஆசை கொண்டது! நேசம் கொண்டது!



ராகுல் போல நல்லவனாய் பார்க்க முடியாது! அந்தக்கிராமமே அவனை வாயாரப் புகழ்ந்து.. காதால் கேட்டிருக்கிறாள்!

ராகுல்போல நல்ல பிள்ளையை இந்தக்காலத்துல பார்க்கறது கஷ்டம்! எவ்வளவு அன்பு, பாசம், அடக்கம், அமைதி, பேச்சில் பண்பாடு!

''எவ்வளவு வசதியான வீட்டு பிள்ளை! வெய்யில்ல கழனிக்கு வரணும், மேற்பார்வை, கணக்கு வழக்கு பார்க்கணும்னு அவசியமில்லை! ரெண்டு பேரை கணக்கு வழக்கு பார்க்க போட்டுட்டு.. கால்மேல் கால் போட்டு உட்கார்ந்திருக்கலாம்! இந்த இளந்தாரி வயசுல ஊர் சுற்றலாம் ஆனால் ராகுல் இதெல்லாம் செய்யாமல் குடும்பத்தை என்னமா நிர்வகிக்கிறார்'' என்று பெரியவர்களும்.

''சின்னய்யா.. அழகுல மயங்கி போறேன்டி! அவர் உயரத்தைக் கண்டு உருக்குலைஞ்சி போறேன்டி! அவர் உடற்கட்டும், கம்பீரமும் லட்சத்துல ஒருத்தருக்குத்தான் அமையும்! சின்னய்யாவை மயக்கனா மயங்கற ஆள் இல்லேடி! அந்த மன்மதனை மணக்க எந்த சிறுக்கிக்கு அதிர்ஷ்ட மச்சமிருக்கோ!'' என்று இவள் வயது ஒத்த தோழிகள் கூறிக் கேட்டிருக்கிறாள்!

அவன் பார்வை படவே தவமிருக்கும் இளம்பெண்கள் ஏராளம்! இதில் அவனோ நித்யாவை சுற்றி சுற்றி வந்து... இன்று காதலிப்பதாய் சொல்கிறான்!

தோழிகளுக்கு தெரிந்தால் வாயிலும், வயிற்றிலும் அடித்துக்கொள்வார்கள்.

ராகுல் அவளை காதலிக்கிறேன் என்று சொன்னதுகூட அவள் ஜென்மா ஜென்மமாய் இருந்த தவத்தின் வரம் என்று கூட சொல்லலாம்,

'அவன் காதலை ஏற்றுக்கொள்ள அநாதையான எனக்கு என்ன தகுதியிருக்கிறது'

'அந்த பெரிய பளிங்கு மாளிகையில், என் காலடி பட்டால் அந்த மாளிகைக்கு அவமானம் இல்லையா?'

'அநாதையாய் வாழும், கூலிவேலை செய்யும் ஒரு கூலிக்காரப் பெண்ணை சக்திவேல் ஐயா எப்படி மருமகளாய் ஏற்றுக்கொள்வார்?

'அப்படியே மகனுக்காக ஏற்றுக்கொண்டாலும் கௌரவமாய் ' என் மருமகள்' என்று நாலுபேரிடம் சொல்லுவாரா?'

'அவர் சொன்னாலும்.. அவரை நாலுபேர் இகழத்தானே செய்வார்கள்.. சக்திவேல் ஐயா அந்தஸ்துக்கு ஒரு பெண் மருமகளாய் கிடைக்காமல் போனாளே என்றும், அவர் மருமகள் தாய்தகப்பனற்ற அநாதையென்றும் அவர் காதுபடவே இகழமாட்டார்களா?'

''இதுபோன்ற சூழலை சக்திவேல் ஐயாவிற்கு உருவாக்கக்கூடாது''

''அடுத்தாய், ராகுல் இன்று நல்லவனாய் இருக்கலாம்! நாளை மேலும் மேலும் பெரும்வசதியும், பணமும் ஏறும் போது கெட்டவனாய் மாறலாம்''

'இன்று என் தோலின் மினுமினுப்பும், அழகும், அம்சமும் அவனுக்கு பிடிக்கலாம்! நாளை என் அழகும், உடம்பும் அனுபவித்த பின் சலிப்பை ஏற்படுத்தலாம்! அப்போது ஒரு வசதிக்காரியை கட்டியிருந்தால் அவள் கொண்டு வந்த சொத்தும், நம் சொத்தும் சேர்ந்து பல்கி பெருகியிருக்குமோ என்று ராகுல் தன்னை நொந்துகொள்ளலாம்!

அடுத்ததாய், நான் திருமணம் செய்து கொண்டு கணவன், குழந்தை, குடும்பம் என்று சுயநலமாய் என் வாழ்க்கை, என் சந்தோசம் என்று சென்றுவிட்டால்,.. தம்பி இளங்கோவின் கதி என்னாவது? இளங்கோவின் எதிர்கால வாழ்க்கை கேள்விக்குறியாமே!'

எனக்கு இப்போது முக்கியம் என் காதலும், அதையடுத்து வரும் கல்யாணமும் அல்ல! தம்பி இளங்கோவும், அவனுடைய எதிர்கால வாழ்க்கையும் தான்!''என்று நினைத்தவள்

'தன் நெஞ்சில் குடியேறிப்போன ராகுலை எப்படி மறப்பது''

''ராகுல் மேலான தீராத நேசத்தை எவ்வாறு தீயிட்டு கொளுத்துவது?''

''ராகுல் மீண்டும் மீண்டும் காதலை யாசித்தால்... ராகுலுக்கு என்ன பதில் சொல்வது?'' என்றெல்லாம் எண்ணியவளுக்கு அழுகை பீறிட்டது! விம்மி வீறிட்டாள்.

நித்யாவின் அழுகுரல் கேட்டு.. தூங்கிக் கொண்டிருந்த இளங்கோ எழுந்து உட்கார்ந்து கொண்டான்.. பதறி கேட்டான்.

''அக்கா... ஏன் அழறே?''

''ஒண்ணுமில்லே...ஒண்ணுமில்லே.. நீ படுத்துக்கோ, இளங்கோ!'' என்று அவனைப் பிடித்து படுக்க வைக்க முயற்சித்தாள் நித்யா.

''நீ எதுக்கு அழுதேன்னு சொல்லு? யாராவது உன்கிட்ட வம்பு பண்ணினாங்களா...?''

நித்யா எதுவும் சொல்லாமல் அழ...

''சொல்லுக்கா? உன்கிட்ட யார் வம்பு பண்ணினான்னு கை காட்டு போதும்! சின்ன பையன் நம் தம்பின்னு நினைக்காதே! அவன் தலையை சீவி கொண்டுட்டு வந்து... உன் காலடியில போடறேன்!''

''ஐய்யோ.. என்னடா இளங்கோ இப்படி பேசறே? உன் வயசுக்கு தகுந்தாப்போல பேசுடா! என்கிட்டே யாரும் வம்பு பண்ணலே!''

''பொய் சொல்லாதேக்கா! உன்னை நானும் வந்ததிலிருந்தே கவனிச்சுட்டுதான் இருக்கேன்! உன் முகமே சரியில்லை. நான் இதுபோல உன்னை ஒரு நாளும் பார்த்ததில்லே!''

ராகுல் தன்னை நேசிப்பதாய் வழிமறித்து சொன்னதை.. சிறுவன் இளங்கோவிடம் கூற மனம் ஒப்பவில்லை. அதனால்,

''அப்பா,, அம்மா ஞாபகம் வந்துடிச்சி, இளங்கோ! இன்னைக்கு அவங்க நினைவு நாளும் அதுவுமா என்னால் என்னைக் கட்டுப்படுத்த முடியல, இளங்கோ!''என்றவள் இளங்கோவைக் கட்டிக்கொண்டு



அழுதாள்.

''அக்கா.. அழாதேக்கா! ப்ளீஸ்... நீ அழுதால் என்னால் தாங்க முடியலேக்கா!'' என்று கலங்கிய இளங்கோ சொன்னான்.

''எனக்கு அப்பா, அம்மாவோட ஞாபகமெல்லாம் சுத்தமா இல்லக்கா! அவங்களைப்பற்றிநான் சிந்திக்கறதே இல்லை. அவங்களை நினைச்சி நான் ஏங்கறதும் இல்லை!''

''என்ன இளங்கோ இப்படி பேசறே? நம்மை பெத்து, வளர்க்க எவ்வளவு கஷ்டப்பட்டாங்க!அவங்க போதாத காலம் நம்கூட இல்லை! அதுக்காக அவங்களை நினைக்காமல் இருக்கலாமா? தப்பில்லையா? பெரும் பாவமில்லையா?''

''அவங்க நம்மோட வாழ்ந்து மறைஞ்சதும்.. தாயா,, தகப்பனா தாங்கிகிட்ட நீதான் என் தாய்.. என் தகப்பன்..!

உன் உருவில் நம்ம தாயையும், தகப்பனையும் காணறேன், அக்கா!

உன் உருவில் அவங்க மீண்டும் என் எதிர்க்க வாழறாங்க, அக்கா! அப்புறம் எப்படிக்கா எனக்கு அவங்க ஞாபகம் வரும்?''

இளங்கோ சொல்ல சொல்ல நெக்குருகிப் போனாள் நித்யா!

''இளங்கோ.. இளங்கோ...'' என்று அவனைக் கட்டிக் கொண்டு கதறியழுதாள்.

''நீ என் உயிர்...! நீ என் எதிர்காலம்..! நீ என் தெய்வம்...!'' என்று சொல்லிவிட்டு இளங்கோ தமக்கையின் மடியில் படுத்துக்கொண்டு அழுதான்.

ராகுல் மேலான நேசத்தையும், ராகுல் பற்றிய எண்ணத்தையும்.. பொத்தி பொத்தி ரகசியமாய் பாதுகாக்கும் தன் மனதையும்... நெருப்பு கொண்டு பொசுக்க கங்கணம் கட்டிக் கொண்டாள் நித்யா.''

எதிர்காலத்தில் திருமணமே செய்து கொள்ளாமல் கன்னியாக வாழ வேண்டும் என்று எண்ணம் கொண்டாள்.,

அவள் எண்ணம் கண்டு விதிதான் கோரப்பல் காட்டி பயங்கரமாய் சிரித்தது!

என்ன ஆச்சரியம்...
புதைக்குழியில் விழுந்த
நான் மீண்டெழுந்துவிட்டேன்!
ஆனால்,
உன் கன்னக்குழியில் விழுந்த
என்னால் மீண்டெழவே முடியவில்லையே!

5

மறுநாள்... நன்கு விடிந்துவிட்டது!

நித்யா பதறி எழுந்தாள்.. நடக்க முடியாமல் தள்ளாடினாள்.

இரவு முழுக்க அழுத அழுகையில் நித்யாவிற்கு பயங்கர காய்ச்சல்

வந்துவிட்டது

முகம், கண்கள் வீங்கிப்போய் சமையற்கட்டுக்கு தள்ளாடியபடியே சென்ற நித்யாவை, நேரத்திலேயே எழுந்து படித்துக் கொண்டிருந்த இளங்கோ கண்டுவிட்டான்.

"அக்கா.. என்னக்கா செய்யுது?"என்று அருகில் வந்தான்,.

"ஒண்ணுமில்லே இளங்கோ... லேசா காய்ச்சல்! அவ்வளவுதான்! நீ போய் படி! நான் சமைக்கறேன்!"

நித்யாவை தொட்டுப்பார்த்தான், இளங்கோ! உடம்பு அனலாய் கொதித்தது.

"ஐய்யோ... என்னக்கா இவ்வளவு அனலா கொதிக்குதே உடம்பு? நீ போய் இழுத்து போர்த்திட்டு படு! நீ எதுவும் சமைக்க வேண்டாம். நான் கஞ்சி வைக்கறேன்! டாக்டர் காய்ச்சல் இருந்தா கஞ்சிதானே குடிக்கச்சொல்லுவார்! நீயும் குடிச்சிக்கலாம்! அதையே நானும் குடிச் சிக்கிறேன்!"

"நீ கஞ்சியைக் குடிச்சிட்டுப் போய் ஸ்கூல்ல உட்கார்ந்து என்ன படிக்க முடியும்? கஞ்சி சீக்கிரம் செரிச்சிடும்! அப்புறம் பசியெடுத்து டும்! அதனால் நான் சாதம் வச்சி, ஏதாவது குழம்பு வைக்கிறேன், இளங்கோ!"

"நீ சொன்னா கேட்க மாட்டீயாக்கா? நீ போய் படு! நான் வேலை களை முடிச்சிட்டு ஆஸ்பத்திரிக்கு கூட்டிட்டுப்போறேன்!"

"உன் படிப்பு, பள்ளிக்கூடம் என்னாவது?"

"அக்காதான் முக்கியம்! படிப்பு, பள்ளிக்கூடமெல்லாம் அப்புறம் தான்! இன்னைக்கு லீவு போட்டுடறேன்!"

"விளையாடாதே, இளங்கோ! நீ படிக்கறது பத்தாவது! பப்ளிக் தேர்வு எழுதப்போறே! ஒருநாள் போகலேன்னாலும் பாடத்தோட தொடர்ச்சி விட்டுப்போயிடும்! அடுத்தநாள் அந்தப் பாடம் புரியாமல் போகும்! அப்புறம் மார்க் குறைஞ்சிடும்!"

"இப்போ நீ பள்ளிக்கு முதலாவதா வரே! முழு ஆண்டு தேர்வுல நீ மாவட்டத்துக்கு முதலாவதா வந்து என் மனசை குளிர வைப்பேன்னு நம்பிக்கையோட இருக்கேன்! அந்த நம்பிக்கையை பொய் ஆக்கி டாதே இளங்கோ...!"

"நீ பள்ளிக்கு போ!.. ஆஸ்பத்திரிக்கு மருதாயி பாட்டியை துணைக் கழைச்சிட்டு டாக்டரிடம் போறேன்! நீ லீவெல்லாம் போட அனும திக்கமாட்டேன் இளங்கோ!"

நித்யா இவ்வாறு சொல்ல..

"சரி, நான் பள்ளிக்கு போறேன். ஆனால், கஞ்சியை நான்தான் வைப்பேன்!"

"படிக்கிறபிள்ளை,, உனக்கெதுக்கு இதுபோல வேலையெல்லாம்? மெல்ல மெல்ல உட்கார்ந்துட்டு நான் கஞ்சியை காய்ச்சிடறேன்டா?"

"பேச்சை கேளுக்கா! போ.. போய் படு!" என்று இளங்கோ பாச மாய் அதட்டவும் போய் படுத்துக் கொண்டாள்.

வேலைகளை முடி[illegible]விட்டு.. இளங்கோ பள்ளிக்கு புறப்பட்டுவிட்



டான்.

நித்யா எழுந்து சுடுநீரில் முகம் கழுவி.. தலையை ஒதுக்கிக் கொண்டு.. வேறு உடை அணிந்து.. மருதாயி பாட்டியை அழைத்துக் கொண்டு,.. பக்கத்தில் உள்ள அரசு பொது மருத்துவமனைக்கு சென் றாள்.

மருதாயி பாட்டி வயதானவர்! அவர்கள் இருவருக்கும் பொருள் கொடுத்து உதவவில்லை என்றாலும், பாதுகாப்பு கொடுத்தார்!

வம்புக்கு வரும் இளந்தாரி பயல்களை கை காட்டிவிட்டால், மரு தாயி பாட்டி வார்த்தைகளாலேயே சாடி, ஏசி அனுப்பிவிடுவார்.,

மருதாயி பாட்டியின் வாய்க்கு அந்த கிராமத்தில் யாரும் பயப்படு வார்கள்!

வேலைக்கு வந்த பெண்களில், நித்யாவைக் காணாதது கண்டு.. ராகுல் சோகமானான்.

கடும் வெயிலினாலும், குளிரினாலும் பெரும் மழையினாலும் நிற் காமல் வேலைக்கு வருபவள் நித்யா!

நேற்று காதலைச் சொன்னதும் மறுத்துவிட்டு ஓடியவள். இனி என் வீட்டு தோட்டத்திற்கு வேலைக்கு வரமாட்டாளா?

அல்லது உடம்பு ஏதும் சரியில்லையா...?

என்று பல கேள்விகளைத் தனக்குள் கேட்டுக்கொண்டு குழம்பிப் போனான், ராகுல்.

"நித்யா.. நீ என்னைப் புரிந்து கொள்ள மாட்டாயா...?"

"நித்யா.. நீ என் அளவுக்கதிகமான நேசத்தை அறிந்து கொள்ளமாட் டாயா...?"

'என் முகம் பார்த்து என்னைப்பிடிக்கவில்லை என்றாயே! அந்த ஒரு சொல் என்னை இரவு முழுவதும் தூங்கவிடவில்லையே!'

எல்லோருக்கும் கூலி கொடுக்கும் போது கடைசியாய் வந்தவள் நித்யாவின் தோழி, செவ்வந்தி, அவளிடம் கேட்டான்.

"செவ்வந்தி.. நித்யா ஏன் வேலைக்கு வர்லே?"

"அவளுக்கு காய்ச்சல்ங்க, சின்னய்யா!"

செவ்வந்தி சொல்ல... முகத்தில் பதற்றம் ஏற்பட்டாலும்... அதை அவ்விடம் காட்டிக் கொள்ளாமல் மெல்ல கேட்டான்.

"காய்ச்சலா...? நேற்று நல்லாதானே இருந்தாள். எப்படி திடீர்னு காய்ச்சல் வந்தது?"

"ரொம்ப முடியல போல! ஆஸ்பத்திரிக்கு போய் ஊசி போட்டு, மருந்து மாத்திரை வாங்கிட்டு வந்து... வீட்டுல படுத்திருக்கா! காலை யில பார்த்துட்டுதான் வந்தேன், சின்னய்யா!"

செவ்வந்தி செய்தியைச் சொல்லிவிட்டு போய்விட்டாள்.

ராகுலுக்கு உடனே நித்யாவைப் பார்க்க வேண்டும் என்று தோன் றியது. ஆனால், அவள் குடிசைக்கு சென்றால் அவளின் வரவேற்பு எப் படி இருக்குமோ...? அவனைக் கண்டதும் கோபத்தில் ஏதாவது கத்தி மானத்தைக் வாங்கி விடுவாளோ என்று அஞ்சினான்.

தூரத்தில் நின்றாவது... ஏதாவது வேலையாய் வெளியே வரும் நித்

யாவைப் பார்த்துவிட்டு வரலாம் என்று வண்டியை எடுத்துக் கொண்டு கிளம்பினான், ராகுல்.

நித்யாவின் வீட்டு வாசல் திண்ணையில் மருதாயி பாட்டி அமர்ந்திருந்தது அவனுக்கு வசதியாய்ப் போய்விட்டது. வண்டியை நிறுத்திவிட்டு பாட்டியின் அருகே சென்றான்.

''பாட்டி நல்லாயிருக்கீங்களா..?'' என்று கேட்க..

பாட்டி கண்களுக்கு மேலே கை வைத்து கூர்ந்து நோக்கி...

''யாரு ராகுல் ராசாவா..? நல்லாயிருக்கேன், ராசா! நீ, உன் தங்கை பெரியய்யா எல்லாரும் சௌக்கியமா?'' என்று கேட்க...

''சௌக்கியமா இருக்கோம். பாட்டி!''

உள்ளிருந்த நித்யா பேச்சுக்குரல் கேட்டு வாசலுக்கு வந்தவள் ராகுலைப் பார்த்து அதிர்ந்தாள்.

''ஒரு வேலையா வந்தேன், பாட்டி! இடையில உங்களைப் பார்த்ததும்... எப்படி இருக்கீங்கன்னு நலம் விசாரிச்சுட்டு போகலாம்ன்னு நின்னுட்டேன்!''

ராகுல், நித்யாவை ஆழ்ந்து பார்த்துக் கொண்டு சொல்ல... நித்யா அவன் பார்வையின் வீரியம் தாங்காமல் தலைகவிழ்ந்து கொண்டாள்.

''நீங்கதான் வேலைக்கு வரதில்லையே!''

''பாட்டிக்கு வயசாச்சியில்லையா.. கண்ணும் தெரியலே, மண்ணும் தெரியலே! பூ எது? இலை எது? மொட்டு எது? ன்னு தெரிய மாட்டேங்குது, ராசா! அதான் வேலைக்கு வரதில்லே! ஏதோ என் மவன் கஞ்சிக்கு காசுதர்றான்! அதை வாங்கி, பொங்கி குடிச்சிட்டு காலத்தை ஓட்டிட்டு இருக்கேன்!'' என்று சலிப்புடன் மருதாயி பாட்டி சொன்னார்.

''நித்யா.. நீ ஏன் வேலைக்கு வர்லே?''

நித்யாவைப் பார்த்து ராகுல் கேட்க...

நித்யா பதில் சொல்லாமல் நிற்க.. மருதாயி பாட்டி தான் பதில் சொன்னாள்.

''ராத்திரி எதைக் கண்டு பயந்தாளோ தெரியலே ராசா! திடீர்ன்னு காய்ச்சல் கண்டு படுத்துட்டா! நான் தான் நம்மூர் தர்மாஸ்பத்தரிக்கு அழைச்சிட்டு போய் வந்தேன்!''

''நித்யா.. உன் உடம்பைப் பார்த்துக்கோ!

உடம்பு நல்லான பிறகு மெதுவா வேலைக்கு வா! ஏதாவது பணம் தேவைப்பட்டா சொல்லும்மா? கொடுத்துட்டுப் போறேன்!''

''ஐய்யோ.. அதெல்லாம் வேண்டாம் சின்னய்யா!'' என்று அவசரமாய் மறுக்க.. அவளிடம் ராகுல் ஒரு அழகான புன்னகையைச் சிந்திவிட்டு...

''நான் வரேன், பாட்டி! பை நித்யா!'' என்று கையாட்டி எழுந்து போனான்.

செவ்வந்தி கொஞ்ச நேரத்திற்கு முன்பு ராகுல் அவளைப் பற்றி விசாரித்ததை சொல்லிவிட்டு சென்றாள். அவனை மறக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருப்பவனுக்கு... அவனின் அக்கறையான விசா



ரிப்பு.. மனதில் கலக்கத்தைக் கொடுத்தது.

அவளைக் காண உடனே ஓடியும் வந்துவிட்டான். மருதாயி பாட்டியைச் சாக்கு வைத்து.. நலம் விசாரித்து விட்டு சென்ற ராகுல் பின்னாடியே அவள் மனமும் செல்ல... நித்யா. அவன் போவதையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள், கண்களில் பூத்த நீரோடு!

அடுத்த நாள் நித்யா வேலைக்கு வருவாள் என்று ராகுல் நினைத்தும் கூட பார்க்கவில்லை!

அவளைக் கண்ட நொடி.... அவன் மனம் சந்தோஷ வானில் சிறகடித்து பறந்து திரிந்தது!

அதற்கும் அடுத்த நிமிடம் 'ஐய்யோ... உடம்பு சரியில்லாதவள் எப்படி வேலை செய்வாள்?' என்ற நினைப்பில் நெஞ்சம் கனத்தது.

நித்யா தன் பாத்தியில் மெல்ல மெல்லதான் மல்லிகை மொட்டுக்களைப் பறித்து கொண்டு வந்தாள்.

மதியத்திற்கு பிறகு வானம் இருண்டது! குளிர்காற்று வீசியது!

ராகுல் ஆள்விட்டு அனைவரையும் அழைக்க.. அருகில் இருந்த பண்ணை வீட்டிற்கு சென்றனர்.

''மழை வரும்போல இருக்கு! கூலி வாங்கிகிட்டு போயிடுங்க!'' என்றான்.

''மொட்டு வீணாயிடுமே! மழை கோட்டை கொடுங்க சின்னய்யா.. போட்டுட்டு மீதியைப் பறிச்சிடறோம்!'' என்று ஒருத்தி சொல்ல..

''அது வீணானால் போகுது! மழை வலுக்கும் போல இருக்கு! நீங்க வீடு போய் சேருங்க!''

மழைத் தூறினாலும் மழை கோட் போட்டுக் கொண்டு மொட்டுக்களைப் பறிப்பார்கள். இன்று மழை வலுக்கும் போல தெரியவும்... அவனின் உள்ளம் கவர்ந்த கள்ளி நனைந்துவிடக் கூடாதென... நித்யாவின் உடல்நிலைக் கருதி கிளம்பச் சொன்னான்.

கூலியை எண்ணி கொடுக்க.. ஒவ்வொருவராய் வாங்கிக் கொண்டு கிளம்பினர்.

கடைசியாய் நித்யாவிற்கு கூலியைக் கொடுத்தவன்

''நித்யா.. உனக்கு காய்ச்சல் இல்லே!

மருந்து, மாத்திரை இருக்கு! இரு எடுத்துட்டுவரேன்!'' என்றவன் செவ்வந்தி நித்யாவுக்காக நிற்பதைக் கண்டு

''செவ்வந்தி... நீ கிளம்பேன்! மருந்து மாடியில இருக்கு தேடி எடுத்துட்டு வரணும்! நேரமாகலாம்! அடுத்ததா நித்யா காய்ச்சல் வந்துபடுத்தவ. மழையில மாட்டிட்டா வம்பு! தங்கி வரட்டும்!''

நித்யா செவ்வந்தியைப் பார்க்க.. அவளையே பார்த்துக் கொண்டு நின்றாள் செவ்வந்தி.

''செவ்வந்தி.. இங்கே சிங்கம், புலி, சிறுத்தைன்னு எதுவுமில்லே! உன் பிரண்ட் நித்யாவை எதுவும் கடிச்சி தின்னுடாமல் பாதுகாப்பா அனுப்பிவிடறேன். அஞ்சலையம்மாவை வீடுவரை கொண்டு வந்து விடச் சொல்றேன்! நீ கிளம்பு!!'' என்றவன் வீட்டிற்குள் சென்றுவிட்

டான்.

அங்கே கரும்பு, நெல், தென்னை, மா, வயல்களுக்கு தண்ணீர் பாய்ச்ச என்று கணவன், மனைவி, குழந்தைகள் சகிதமாய் உள்ளே வசிக்கின்றனர். அவர்களுக்கான வீடு பண்ணை வீட்டை ஒட்டியே உள்ளது. அதனால் செவ்வந்தி பயம் இன்றி கிளம்ப...

''செவ்வந்தி நில்லுடி... நானும் வரேன்!''

நித்யா கூற..

''சின்னய்யா... நான் இங்கே நின்னேன்னால் கழுத்தைப் பிடிச்சி வெளியே தள்ளிடுவார்! அவர் உங்கிட்ட ஏதோ தனியா பேசப் பிரியப் படறாப் போல தெரியுது! இருந்து மெதுவா பேசிட்டு வாடி!''

நித்யாவின் மனநிலைப் புரியாமல் செவ்வந்தி கண்சிமிட்டி சொல்ல... நித்யாவோ பயந்து நடுங்கிக் கொண்டு நின்றாள்.

**என் இதயம்**
**பொசுங்கும் வாசம்**
**உன் நாசியைத் தாக்கவில்லையா...?**
**என் உள்ளம்**
**சில்லு சில்லாய்**
**உடைந்து நொறுங்கும் சப்தம்**
**உன் செவியை எட்டவில்லையா...?**
**கொஞ்ச நேரத்தில்....**

## 6

''ஏய் நித்யா... உள்ளே வா...!'' என்று ராகுல் உள்ளிருந்து குரல் கொடுக்க.. அவள் அசையாமல் மரமாய் நின்றாள்.

''நித்யா.. வரப்போறியா...? இல்லையா...? நான் அங்கே வந்தால் உன் கைப் பிடிச்சி தரதரன்னு இழுத்துட்டு வந்து உள்ளே போடுவேன்! இல்ல அலாக்கா உன்னைத் தூக்கி தோளில் போட்டுட்டு...''

அவன் அந்தச் சொற்களை முடிக்கும் முன் கோபமாய் உள்ளே சென்றாள்.

''வா நித்யா... உன் வரவு நல்வரவாகட்டும்!

அப்படி உட்கார்!'' என்று ராகுல் ஒரு நாற்காலியைக் கைக்காட்ட....

''சின்னய்யா.. நீங்க செய்யறது சரியில்லே!''

''எது?''

''வேலையைப் பாதியிலே கலைச்சது!''

''வானம் இருண்டு கிடக்குது! மழை பொத்திட்டு எந்த நேரமும் கொட்டலாம்! நீ ஒருத்தி நனையக் கூடாதுன்னுதான் சுமார் ரெண்டு மூணாயிரம் ரூபாய் மதிப்புள்ள மொட்டு வீணாப் போனாலும் பரவாயில்லேன்னு எல்லோரையும் போகச் சொன்னேன்!''

''ரொம்பந்தான் அக்கறை! அப்படின்னா கூலியைக் கொடுத்து என்னையும் அனுப்பி இருக்கணுமில்லே?''



''நீ போயிட்டு இருக்கும்போது, பாதி வழியில மழை வந்துட்டதுன்னா.. தோ பார் மழை தூறுது!''

என்று அவன் வாய் மூடுவதற்குள் இடியும், மின்னலும் காதைப் பிளந்தது! மழை வலுவாய் பெய்தது!

''நித்யா.. நீ போயிருந்தா மழையில தெப்பமா நனைஞ்சிருப்பே! உன்னைக் காப்பாத்திட்டேன்!'' என்று ராகுல் சந்தோசப்பட்டான்.

''உட்கார், நித்யா!''

''நிற்கறேன்!''

''எவ்வளவு நேரம் நிற்பே! உட்கார், நித்யாம்மா!'' என்று அவன் உருகலோடு சொல்ல... மந்திரத்திற்கு கட்டுப்பட்டவள் போல உட்கார்ந்தாள்.

அவள் எதிரே ஒரு நாற்காலியைப் போட்டு அவனும் அமர்ந்தான்.

அவள் கை, கால்களில் சிறுநடுக்கம் ஏற்படுவதைக் கண்டவன்...

'' நித்யா.. உனக்கு என்னைக் கண்டால் பயமா இருக்கா? நான் ஆபத்தானவன் இல்லை! நான் நல்லவன்! உனக்கு ஒரு சிறுதீங்கும் இழைக்க மாட்டேன்! நான் உன்கிட்ட பேசணும்! பேசலாமா?''

''என்ன பேசணும்!''

''என் வாழ்க்கையைப் பத்தி!''

''உங்க வாழ்க்கையைப் பத்தி என்கிட்ட எதுக்கு பேசணும்? சொல்லுங்க?'' என்று முறைப்போடு கேட்க..

''என் வாழ்க்கை உன் வாழ்க்கையோடு இணைந்து இருப்பதால்!''

''ஒரு வயசு பொண்ணு மனசை கெடுக்கறாப் போல பேசறது தப்பு!''

''அப்போ நான் உன் மனசைக் கெடுத்துட்டேனா? அவன் இன்பமாய் புன்னகைத்தான்.

''சின்னய்யா.. நான் சொல்றதைப் புரிஞ்சிக்கங்க! நான் தாய் தகப்பனற்ற அநாதை! அடுத்ததா, அடுத்தவேளை சோற்றுக்கே வழியில்லாமல் திண்டாடும் ஏழை நான்! உங்க கழனிக்கு வந்து உழைச்சாதான் நானும் என் தம்பியும் சாப்பிட முடியும்! அப்படிப்பட்ட என்னை நிம்மதியா விடுங்கய்யா! காதல் அதுஇதுன்னு பேசி... என் மனசை கலைச்சி.. என்னை நிம்மதியிழக்க வச்சிடாதீங்க! ப்ளீஸ்...'' என்று அவள் அழ...

''ஏய் நித்யா.. எதுக்கு அழறே?''

''நானும் பெண்தானே! ரத்தமும் சதையாலும் ஆன ஆசாபாசங்கள் நிறைந்த பெண்தானே! அழகான நீங்க வந்து காதல். கல்யாணம்ன்னு பேசினால் என் மனசும் நெகிழுது!...

மனசுக்கு பெரிய கயிறு போட்டு கட்டினாலும்... கட்டுத்தறியை பாய்ச்சிட்டு ஓடி தாய் மடியில தஞ்சமடையற கன்றா என் மனசும் உங்க காலடியில் தஞ்சமடையுதுய்யா!

கட்டுப்படுத்த நான் ரொம்ப கஷ்டப்படறேன், சின்னய்யா!...

உங்களைப் பார்க்காமல் இருக்கும் வரை மனசு என் வசப்படுது! என் பேச்சு கேட்குது! உங்களைப் பார்த்த விநாடி முடியலே!''

நித்யா சொல்லிவிட்டு விம்மினாள்!

''இவ்வளவு ஆசையை என்மேல் வச்சிருக்க நீ, ஏன் நேற்று முதல் நாள் என்னைப் பிடிக்கலேன்னு சொன்னே?

''பயம்!''

''யார் மேல்?''

''உங்க மேல் தான்?''

''காதலிச்சி கைவிடற கயவன் இல்லே, நான்! நான் நல்லவன்! நல்ல வம்சா வழியில் வந்தவன்! என்மேல் உனக்கு சிறுதுளிகூட பயம் வேண்டாம்!''

''அப்புறம் உங்க வசதி, பணத்துமேல் பயம்!''

''பணம் கிடக்குது குப்பை! பணம் இன்னைக்கி என்கிட்ட இருக்கும்! நாளைக்கு வேற யார்கிட்டயாவது போயிடும்! அடுத்த நபர்... அடுத்த நபர்ன்னு நிலையில்லாமல் தாவிட்டு போற பணம், சொத்துக்கு நான் மதிப்பு கொடுக்கறவன் இல்லே!'' என்று அவன் அலட்சியமாய் பேசவும் கேட்டாள்.

''உங்கப்பா இதுக்கு சம்மதிப்பாரா...?''

''சம்மதிக்காமல்?''

''தன் ஒரே மகனுக்கு... உங்க வசதிக்கு ஏற்றாற்போல... பெரிய இடத்துல இருந்து அந்தஸ்து படிப்பு, பணம்ன்னு வர பெண்ணைத் தானே கட்டி வைக்க விரும்புவார்!''

''அதை நானும் விரும்பணுமில்லையா....?''

'' பெத்தவர் விருப்பத்தை நிறைவேத்தற தானே பிள்ளையோட கடமை!'' நித்யா கேட்க...

''பிள்ளையோட விருப்பத்தை நிறைவேத்தறது தானே ஒரு நல்ல தந்தையோட கடமை!'' அவன் அவளை பேச்சில் மடக்க.. நித்யா அசந்துபோனாள்.

''உங்களுக்கு நல்லவாதத் திறமை இருக்கு! இந்த பேச்சை துணிச்சலை உங்க தந்தையிடம் காட்ட முடியுமா...?''

''ஏன் முடியாது? அப்பா பரந்த உள்ளம் கொண்டவர்! அவர் ஒண்ணும் காதலுக்கு எதிரி இல்லே! அவர் கூட அம்மா கற்பகத்தை விடாமல் துரத்தி துரத்தி, விரட்டி விரட்டி காதல் செய்து கல்யாணம் செய்துட்டதா சொல்லுவார்! அம்மா மேல் உள்ள காதலாலும்.. எங்க மேல் உள்ள அன்பாலும் தான் அப்பா மறுமணம் செய்துக்கல.! அப்படிப்பட்டவர் எப்படி என் காதலை எதிர்ப்பார்? ஏற்றுக் கொள்ளத் தயங்குவார்?''

''ஆனாலும் எனக்கு பயமா இருக்கு!''

''ஏன்? எதனால், நித்யா?''

''பணக்காரவங்கன்னாலே எனக்கு கொஞ்சம் பயம்! அதுபோல பணக்காரவங்க வீட்டு பசங்க கொஞ்சம் சொல்லும்படியா இருக்க மாட்டாங்க!''

அவள் சொல்ல... சட்டென்று கோபமானான்.

''அப்போ என்னைப் பார்த்தா ஏமாற்றுக்காரனா தெரியுதா?''



''இல்ல.. இல்ல.. கோபிக்காதீங்க.. சின்னய்யா! என்னை மன்னிச்சிடுங்க. சின்னய்யா!''அவள் கெஞ்சினாள்.

''உன்னை எனக்கு ரொம்ப பிடிக்க காரணம், உன் குணம் தான்! தெரியுமா? உன் பெற்றோர்கள் இறந்து நீ கலங்கி நின்னப்போ.. அப்பா நான் உதவறேன். நீ படிம்மான்னு சொன்னதுக்கு இல்லய்யா! என்னைப் பெற்றவர்கள்... திருடக்கூடாது! பொய்ச் சொல்லக் கூடாது!யார்க்கிட்டேயும் கொடுக்காங்கன்னு இனாமா வாங்கக் கூடாது! உழைச்சி தான் சாப்பிடணும்! அது தான் உடம்புல ஒட்டுன்னு சொல்லி என்னை வளர்ந்திருக்காங்க!

நான் படிச்சி பெரியாளா வரதைவிட... என் தம்பியை படிக்க வச்சி பெரியாளா ஆக்கி பார்க்கணும்ன்னு ஆசைப்படறேன்! என்னைச் சின்னபிள்ளை என்று நிராகரிக்காமல், உங்க பண்ணையில பூப்பறிக்கற வேலை மட்டும் கொடுங்கய்யான்னு சொன்னீயே! அன்னைக்கே என் மனசுல நீ காதல் விதையை ஊன்றிட்டே!.... என் மனசுல நீ உயர்ந்து நின்னுட்டே! கட்டினா இவளைத்தான் கட்டணும்ன்னு சபதம் கொண்டேன்! என் மனைவின்னால் இந்த ஜென்மத்துல நீ தான்னு அன்னைக்கே உறுதி செய்துட்டேன்.

எனக்கும் ஒரு தங்கச்சி இருக்கா! தாயில்லாத பொண்ணு! தாயா மாறி உன் தம்பியைப் பார்த்துகற நீ... என் தங்கச்சியையும் தாயா மாறி கவனிச்சுக்குவேன்னு உன்மேல் நல்ல நம்பிக்கை வந்தது!

எனக்கொரு நல்ல மனைவியா இருக்கறதைவிடவும். என் மதிவதனாவிற்கு ஒரு நல்ல தாயா மாறி அவளை கவனிச்சிக்குற பெண் தான் எனக்கு மனைவியா வேணும்!...

அடுத்து உன் தம்பி இளங்கோவை மைத்துனனா பார்க்க மாட்டேன்! என் மகனா பார்த்துப்பேன்! அவனுக்கு வேண்டிய பாதுகாப்பு, கல்வி எல்லாம் செய்து கொடுப்பேன்! உன் தம்பியை காலமெல்லாம் நம்மோடவே வச்சிக்கலாம். நித்யா! நீ இந்தத் திருமணத்தால் உன் தம்பியை பிரியவேண்டி வராதும்மா!''

அவன் பேசப்பேச அவள் கண்கள் பொத்துக் கொண்டது!

''தெய்வமே.. என் தெய்வமே..'' என்று அவன் காலடியில் சரிந்தாள்!

அவளைத் தூக்கி நெஞ்சோடு சேர்த்து... இதமாய் இறுக்கிக்கொண்டான், ராகுல்!

**இரண்டு கற்களின்**
**சங்கமத்தால் உருவாவது தீ!**
**இரண்டு இதயங்களின்**
**சங்கமத்தால் பிறப்பது, காதல்!**

## 7

அதன்பிறகு வந்த நாட்கள்.. ராகுலையும், நித்யா

வையும் காதல் இனிய தென்றலாய் தாலாட்டியது! நிலவின் குளிர்ச்சி யோடு கட்டி தழுவியது!

இருவர் இதயமும் காதலால் இணைந்து மகிழ்ச்சி வானில் சிறக டித்துப் பறந்தது!

இருவர் இதயமும் நேசத்தையே சுவாசமாய் கொண்டன!

ஒருவர் மனதில் மற்றொருவர் வாடகையில்லாமலே குடியிருந்த னர்!

வேலை நேரத்தில் ஒருவரை ஒருவர் ஆழ்ந்த பார்வையால் ஸ்பரி சித்துக் கொள்வர்!

எல்லோரும் வேலை முடிந்து சீக்கிரம் சென்றுவிட நித்யா கடைசி ஆளாய் கரை ஏறுவாள்! ராகுல் அவளுக்காக காத்திருப்பான்.

பின் இருவரும் தனிமையில் பேசி, சிரித்து மகிழ்வர்!

முல்லை, மல்லிகை, ரோஜா தோட்டம் என்று கை கோர்த்து திரிந் தனர்!

"ஐயா.. நம்ம சின்னய்யா சண்முக மக நித்யா பின்னாடி சுத்துறுங்க! நம்ம அந்தஸ்து கௌரவத்துக்கு அந்தப் பொண்ணு சரிப்படுமா? நீங்க கொஞ்சம் சின்னய்யாவை கண்டிங்க!"

இப்படி பலர் செய்தியை சக்திவேல் ஐயாவின் காதிற்கு கொண்டு போக.. சக்திவேல் ஐயா கோபம் கொண்டார்.

மகன் ராகுலை அழைத்தார்.

"ராகுல்.. எல்லோரும் சொல்றது நிஜமா?"

"எல்லோரும் என்ன சொல்றாங்கன்னு சொன்னாத்தானே அது நிஜமா? பொய்யான்னு சொல்ல முடியும்?"

ராகுல் கேட்க.. சக்திவேல் முறைப்போடு கேட்டார்.

"நீ அந்த சண்முகம் பொண்ணு பின்னாடி சுத்திட்டு இருப்பதா ஜனங்க சொல்றாங்க! நான் அதை முதல்ல நம்பலே! தினம் ஒருத் தர்ன்னு இந்த விஷயத்தைச் சொல்ல நம்பாமல் இருக்கவும் முடியலே! சொல்லு ராகுல்? நீ நித்யா பின்னாடி சுத்திட்டு இருக்கியா...?"

"அப்பா... நீங்க நினைக்கறாப்போல வேலையை விட்டுட்டு நாள் முழுக்க காடு, கழனின்னு அவள் பின்னாடி சுத்தி திரியலே! ஏதோ மாலை கொஞ்ச நேரம் பேசிட்டு இருப்போம்!"

"ஒரு வயசு பொண்ணோட தனியா பேசினால் என்ன அர்த்தம்?"

"உங்ககிட்ட நான் உண்மையை மறைக்க விரும்பலேப்பா! எனக்கு நித்யாவை ரொம்ப பிடிச்சிருக்கு! நான் நித்யாவை உயிருக்குயிரா விரும் பறேம்ப்பா! அவளையே எனக்கு கட்டி வையுங்கப்பா!

"நித்யாவைப் போய் விரும்பறேன்னு சொல்றீயே.. இது உனக்கே சரியாப்படுதா?"

"நித்யாவுக்கு என்னப்பா குறை?"

"நித்யா யார்? தாய் தகப்பனற்ற அநாதை! நம்ம பூந்தோட்டத்துல பூப்பறிக்கற வேலை செய்யற பெண்! அவளைப் போய் காதலிக்க றேன்.. கல்யாணம் செய்து வையுங்கன்னு சொல்றீயே, ராகுல்? நம்ம

அந்தஸ்து என்ன? அவ அந்தஸ்து என்ன? நாம் மலைன்னா அவள் மடு! அந்த நித்யாவுக்கு, நம்ம வீட்டுக்கு மருமகளாகற தகுதின்னு ஒண்ணு கூட இல்லே! அந்த நித்யா வேண்டாம்!''

''ஒரு பெண்ணின் தகுதியைப் பணத்தால் நிர்ணயிக்கக் கூடாதுப்பா! நல்ல குணம் கண்டு நிர்ணயிக்கணும்ப்பா! நித்யா ரொம்ப நல்ல பொண்ணுப்பா! மாசு, மருவற்ற தூய்மையான அன்பு அவளிடத்திலே கொட்டிக்கிடக்குது! அந்த அன்பைக் கண்டுதான் நான் நெகிழ்ந்து போனேன்!...

நம்ம வீட்டுக்கு மருமகளாகற தகுதி நித்யா ஒருத்திக்குத்தான் இருக்கு!''

''நித்யா.. உன் காதலியாயிட்ட ஒரே காரணத்துக்காக நீ இந்த அளவு அவளைத் தூக்கி வச்சி புகழறது எனக்கு பிடிக்கலே! நான் சொல்வதைக் கேள், ராகுல்! வேற நல்ல இடத்துல இருந்து நல்லப் பெண்ணாப் பார்த்து உனக்கு கட்டி வைக்கிறேன்!''

''அப்பா... என் அம்மா கற்பகத்தை நீங்க முதல்முதலா எங்க பார்த்தீங்க?''

''நம்ம கழனிக்கு வேலைக்கு வந்தப்போ பார்த்தேன்!''

''அம்மா.. பணக்காரியா...?''

''இல்லை! ஏழை!''

''அம்மா... நிறைய படிச்சவளா...?''

ம்கூம்!''

''அம்மா கற்பகத்தை.. உங்க அப்பா பார்த்து கட்டிக்கச் சொன்னாரா...?''

''ம்கூம்! அவளை எனக்கு பிடிச்சிருந்தது! காதலிச்சேன்! அப்பா கிட்ட அவளைக் கட்டி வைக்க சொன்னேன்! அப்பா அவளைப்பற்றி விசாரிச்சார்! திருப்தியான தகவல் கிடைக்க எனக்கு கட்டி வச்சிட்டார்!''

''அப்போ உங்க மேரேஜ் லவ் மேரேஜ்?''.

''ஆமா!''

''நம்ம கழனியில வேலை செய்த பெண்ணை விரும்பினீங்க! கட்டிட்டீங்க!''

''ம்!''

''அப்போ உங்களுக்கொரு நியாயம்.. எனக்கொரு நியாயமா..? உங்க இதயம் போலத்தான் என் இதயமும் ரத்தத்தாலும், சதையாலும் ஆனது! உங்க இதய விருப்பத்தை பூஜித்த நீங்க.. என் இதயத்தின் ஆசைகளை விருப்பங்களை புரிஞ்சிக்கங்கப்பா!''

ராகுல் கொஞ்சம் வேகமாய் சொல்ல.... அவர் முகம் யோசனையில் மூழ்க.. அவனே மீண்டும் தொடர்ந்தான்.

'' அடுத்ததா... தாயில்லா நம் தங்கை மதிவதனாவை ஒரு தாய் ஸ்தானத்துல இருந்து கவனிச்சிப்பாள்!''

''அது தம்பி இளங்கோவுக்கு தாயா, தகப்பனா மாறி காப்பாற்றிட்டு வராள்! அதைக் கண்டு தான் சொல்றேன்'' இந்தக் காலத்துல எத்தனை



பொண்ணுங்க இப்படி பொறுப்பா இருக்காங்க?....

அவளை முதல்முதலாப் பார்த்தும்... எனக்கு ஒரு நல்ல மனைவியா இருப்பான்னு நான் யோசிக்கலே! என் தங்கைக்கு ஒரு நல்ல அண்ணியா இருந்து வழி நடத்துவான்னு தான் முதல்ல தோணிச்சி! அதன் காரணமாத்தான் அவளை எனக்கு நிரம்ப பிடிச்சது! இந்த வார்த்தைகள் அனைத்தும் சத்தியமான வார்த்தைகள் அப்பா!''

''......''

''அப்பா... அவள் நல்லவள்! அன்பானவள்! அறிவானவள்! அடக்கமானவள்! பண்பானவள்! பாசமானவள்! ஒரு பெண்ணுக்கு இதைவிட வேற என்ன நல்லபல தகுதிகள் வேண்டும்!''

''.....''

''நித்யாகிட்ட குறைன்னால் ஏழைன்னு சொல்லலாம்! ஆனால், இன்று ஏழையா இருப்பவள் நாளைக்கு பணக்காரனாகலாம்! இன்று பணக்காரனா இருக்க நாம் நாளைக்கு ஏதாவது சூழ்நிலைக் கெட்டால் ஏழையாகலாம்!'' என்று ராகுல் கூற..

''நீ பேசறது எல்லாம் சரிதான், ராகுல்! ஆனால் உனக்கு மாமனார், மாமியார்ன்னு சொல்லிக்க சொந்தமில்லையே! மாமியார் வீடுன்னு போய் அக்கடான்னு ரெண்டு நாள் உட்கார்ந்து நிம்மதியா சாப்பிட ஒரு இடம் இல்லாமல் போகுமே!'' என்று தன் ஆதங்கத்தை சக்திவேல் ஐயா வெளிப்படுத்தினார்.

''அப்பா... நித்யா தாய், தகப்பனை இழந்து அநாதையானது கடவுள் செய்த சதி! இதையெல்லாம் ஒரு குறையா நினைக்கக் கூடாது!...

நாளைக்கு நம் மதிவதனாவை பார்க்க வரும் மாப்பிள்ளைகள்... பெண் தாயற்ற அநாதைன்னு நிராகரிச்சா உங்களால் தாங்க முடியுமா...?'' என்று கேட்டதும் சக்திவேல் ஐயா சட்டென்று கோபமானார்!

''ஏய் ராகுல்... என்ன பேசறே? நம்ம மதிவதனாவை கட்டிக்க மாட்டேன்னு நிராகரிக்கறவன் ஒருவன் இருப்பானா?''

''நீங்க பார்க்கற கோணத்துல இருந்து பார்த்தால் மதிவதனாவுக்கும் இது குறைதான்!''

அவன் சொல்ல... சக்திவேல் ஐயா வாயடைத்து உட்கார்ந்து விட்டார்.

பின் கேட்டார்.

''உனக்கு அந்த நித்யாவைப் பிடிச்சிருக்கா?''

''ரொம்ப ரொம்ப பிடிச்சிருக்குப்பா!''

''நாளை ஒரு காலத்துல வந்து என்னைக் குறைச் சொல்லக் கூடாது!''

''என்னவென்று?''

''நான் தான் மடத்தனமா ஏழைப் பெண்ணை விரும்பினேன்னால்... நீங்க புத்தி சொல்லி தடுத்து.. நம்ம அந்தஸ்துக்கு, வசதிக்கு தக்க போல ஒரு பெண்ணைப் பார்த்து கட்டி வச்சிருக்க கூடாதான்னு தான்!''

''ஏம்ப்பா இப்படியெல்லாம் யோசிக்கறீங்க?''

''நாளை உனக்கு ஒரு கஷ்டம்ன்னாலோ, பணப்பிரச்சனைன்னாலோ நித்யா பக்கமிருந்து உனக்கு உதவி கிடைக்காதில்லையா? இப்படி கேட்க வேண்டியது என் கடமை! அதுக்கு பதில் சொல்ல வேண்டியது உன் கடமை!''

''நித்யாவை வச்சி எந்த ஒரு குறையோ, பிரச்சனையோ எனக்கு ஏற்பட்டாலும்.. நான் உங்களைக் குறை சொல்லமாட்டேன்!''

''உன்னை நான் நம்பலாமா...?''

''நூறு சதவீதம், அப்பா!''என்றவன் தந்தையைப் பார்த்துக் கேட்டான்.

''அப்பா.. உங்களுக்கு நித்யாவைப் பிடிக்கலையா?''

''எனக்குச் சொல்லத் தெரியலே, ராகுல்!''

''ஏம்ப்பா... ஒண்ணு நித்யாவைப் பிடிச்சிருக்குன்னு சொல்லணும்! இல்ல பிடிக்கலன்னு சொல்லணும்!''

''நம்ம வீட்டு மருமகளா அவள் வந்து... அவள் உன் தங்கை மதிவதனாவை, என்னைப் பார்த்துக்கிறதை கொண்டும்... உன்னோடு அன்பா, நல்லபடியா குடும்பம் நடத்தறதைக் கண்டும் தான் எனக்கு அவளைப் பிடிக்கும்... பிடிக்காதுன்னு சொல்ல முடியும்!''

''நீங்க பயப்பட வேண்டாம்! அவள் உங்களையும், என் தங்கையையும் நல்லாப்பார்த்துக்குவா! அவள் குணம் கண்டு நீங்களே அவளைத் தூக்கி வச்சி கொண்டாடுவீங்க! இப்படி ஒரு நல்ல மருமகள் கிடைக்க என்ன புண்ணியம் பண்ணினேனோன்னு எல்லார்க்கிட்டேயும் பெருமையா சொல்லிப்பீங்க! அந்த நாள் கூடிய சீக்கிரமே வரும்!''

ராகுல் நித்யாவை நம்பினான்!

நித்யா ராகுலின் நம்பிக்கையைக் காப்பாற்றினாளா..? அல்லது பொய்க்க வைத்தாளா...?

**8**

உன் நிழல் மீது கல்லெடுத்து வீசினாலும்...
உன் மேனி மீது காற்று மோதினாலும்...
துடிதுடித்துப் போய்விடும்
உன்னைச் சுவாசிக்கும் என் இதயம்!

**ச**க்திவேல் ஐயா திருமணத்திற்கு ஒத்துக் கொண்டார் என்ற செய்தியை ராகுல் சொன்னதும்.. நித்யாவிற்கு அந்தச் செய்தி தேனாய்த் தித்தித்தது! தென்றலாயத் தீண்டியது!

நித்யாவிற்கு இவ்வளவு பெரிய பேரதிஷ்டமா என்று ஊரே வியப்பில் ஆழ்ந்தது!

''கஷ்டப்பட்ட மகராசிக்கு கடவுள் கண் தொறந்துட்டார்! இனியாவது சந்தோசமா இருக்கட்டும், அந்த நித்யா பொண்ணு!'' என்று சிலர் வாழ்த்தினர்.



''நம்மோட ஐயா வீட்டு பண்ணையில கூலிவேலை செய்தவளுக்கு அதே வீட்டுக்கு மருமகளாகற அதிர்ஷ்டம் வந்துடிச்சே! இனி அந்தக் கழுதை நம்மையெல்லாம் விரட்டி வேலை வாங்கும்! இனி அவள் முன்னாடி கைக்கட்டி, வாய்பொத்தி 'சொல்லுங்க சின்னம்மா?'ன்னு கேட்க வேண்டிவரும்!'' என்று சிலர் பொறாமையில் வயிறு எரிந்தனர்.

மணநாளும் வந்தது!

சுற்று வட்டத்து கிராம மக்கள் பெரிய வீட்டு திருமணத்திற்கு திரண்டு வந்து விட்டனர்.

காதில் சிறு பொட்டு தங்கத்தோடு வளைய வந்த நித்யா... சக்திவேல் ஐயா வீட்டு பரம்பரை தங்க, வைர நகைகளை அணிந்துக் கொண்டு தேவதையாய்ச் ஜொலித்தாள்!

அவளின் அழகு பன்மடங்கு பெருகி.. சந்தன சிற்பமாய்.. குளிர்நிலவாய் ஜொலித்த... அவளையே வைத்தவிழி எடுக்காமல் நோக்கிக் கொண்டிருந்தான், ராகுல்!

''ஊரெல்லாம் ஜல்லடைப்போட்டு தேடினாலும் இப்படி ஒரு அழகானப் பெண்ணை ராகுலுக்கு கட்டி வைத்திருக்க முடியுமா...?'' என்று சக்திவேல் ஐயா கூட நினைத்தார்.

மதிவதனா 'அண்ணி, அண்ணி...' என்று நித்யாவை விடாமல் அட்டையாய் ஒட்டிக் கொண்டு... மணவறையிலும் அவள் மடிமேல் அமர்ந்து கொண்டாள்!

கெட்டி மேளம் கொட்ட.... ராகுல் அவளின் அழகு கழுத்தில் மங்கல நாணைப் பூட்டினான்!

அந்த நொடி... 'இந்தக் காட்சியைக் காண தன்னைப் பெற்றவர்கள் இல்லையே' என நித்யா நினைக்க... 'மளுக்' என்று கண்கள் பொத்துக் கொண்டது!

''ஏய் நித்யா... எதுக்கு அழறே? நான் உன்னை என் கண்ணின் கருவிழியாய் காப்பேன், நித்யா! இனி இந்தக் கண்களில் நான் கண்ணீரைப் பார்க்கவே கூடாது! துடைச்சிக்கடா!'' என்று ராகுல் லேசாய் அவள் தோளில்இடித்து... அவளுக்கு மட்டும் கேட்கும்படி சொல்ல... அவனின் அன்பான வார்த்தைகள் அவளின் இதயத்தில் இறங்கி அவளை ஆறுதல் படுத்தியது! கண்களைத் துடைத்துக் கொண்டாள், நித்யா!

அவளின் கண்ணீர் சக்திவேல் ஐயாவின் நெஞ்சையும் லேசாய் ஆட்டிப்பார்த்து!

முதலிரவு அறை!

பால்சொம்போடு உள்ளே நுழைந்தாள், நித்யா!

ஸ்டூல் மீது பால் சொம்பை வைத்துவிட்டு... ராகுலின் கால்களில் பொத்தென்று விழ.. அவள் கண்களில் இருந்து வழிந்த கண்ணீர் அவன் கால்களை நனைத்தது!

ராகுல் பதற, அவளைத் தூக்கியணைத்து, கட்டிலில் அமர வைத்தான்.

''ஏய் எதுக்கு அழறே?''

''நான் சக்திவேல் ஐயாவிற்கு மருமகளாகவும்.... உங்களுக்கு மனைவியாகவும் ஆவேன் என்று கனவுலகூட நினைச்சதில்லேங்க!

இத்தனை பெரிய வீட்டில் வாழ்வேன்னு கற்பனைக்கூட செய்ததில்லீங்க! நான் எந்த பிறவியில் செய்த புண்ணியமோ இந்த பிறவியில் எனக்கு இந்த வாழ்வு கிடைச்சிருக்கு'' என்று உதடு பிதுக்கி அழுதவளின் கண்களை ராகுல் துடைத்துவிட்டான்.

''நித்யா...''

''ம்...''

''இப்படியொரு பேரழகி கிடைக்க நான் தான் முற்பிறவியில் தவம் செய்திருக்கேன்!''

''ஐய்யோ... என்ன பேசறீங்க!'' என்று அவன் மடியில் அழுகையோடு கவிழ்ந்தாள்!

நித்யாவைத் தூக்கிக் கண்ணீர் வழியும் கண்களில் முத்தமிட்ட ராகுல் சொன்னான்.

''நித்யா... நீ என் தந்தையிடம் நல்லபேர் எடுக்கணும்!''

''சரி!''

''நான் அவரிடம் போராடித்தான் சம்மதம் வாங்கினேன்! என் தந்தை இந்தத் திருமணத்திற்கு சட்டுன்னு ஒத்துக்கலன்னு உனக்கும் தெரியும்!

நீ அவரைக் கவனிச்சிகிறதை, வீட்டை நிர்வகிக்கறதைப் பொறுத்துதான் அவருக்கு உன்னைப் பிடிக்கும்!''

''......''

''அடுத்ததா என் தங்கை மதிவதனான்னா அவருக்கு உயிர்! அவளை நீ காப்பதைப் பொறுத்துதான்... என் தந்தை மனசுல இடம் பிடிக்க முடியும்!''

''சரிங்க!''

''மதிவதனாவை உனக்கு பிடிச்சிருக்கா...?''

''ம்.. ரொம்ப ரொம்ப பிடிச்சிருக்கு!''

''உங்களுக்கு என் தம்பி இளங்கோவைப் பிடிச்சிருக்கா...?'' என்று நித்யா கேட்க...

''நித்யாம்மா... இளங்கோ என் மூத்த பிள்ளை! மதிவதனா நம்ம இரண்டாவது பிள்ளை! அடுத்தா உன் வயிற்றுல பிறக்கறது மூன்றாவது பிள்ளை தான்!''

அவ்வாறு பேசிய கணவனின் கைகளை எடுத்து கண்களில் ஒற்றிக் கொண்ட நித்யா கேட்டாள்.

''ராகுல்... நான் ஆபரேசன் செய்துக்கட்டுமா?''

''என்ன ஆபரேசன்?''

''குடும்பக்கட்டுப்பாடு ஆபரேசன்!''

''எதுக்கு நித்யா?''

''நமக்கு தான் இளங்கோ, மதிவதனான்னு ஆண் ஒன்று, பெண் ஒன்றுன்னு இரண்டு குழந்தைகள் இருக்கே! பிறகு மூன்றாவதா எதுக்கு குழந்தை?'' என்று கேட்க...



''நித்யா...நித்யா... என் தேவதையே.. என் உயிரே... என் உயிர் நேசமே... இப்படி ஒரு நல்ல பக்குவப்பட்ட பெண்ணா நீ? உன்னை என் மனைவியா கொடுத்த இறைவனுக்கு கோடான கோடி நன்றி!''

சொன்ன ராகுல் நித்யாவை இழுத்து ஆசையாசையாய் இறுக்கியணைத்துக் கொண்டான். பின் சொன்னான்.

''என் சந்ததி என்னோடு முடிந்துவிடக் கூடாது, நித்யா! நமக்காக இல்லேன்னாலும்.. என் சந்ததி வளரவேணும் நாம ஒரு குழந்தையாவது பெத்துக்கணும்! சரியா?'' ''சரி.. அடுத்ததா...'' என்று பேசப்போனவளை ''இனி பேச்சு போதும், நித்யா!'' என்றவன் விளக்கை அணைத்தான். அவளை அணைத்தவன் அவள் இதழோடு இழத் பொருத்தினான்!

அவர்களின் அனுமதி கேட்காமல்... ஜன்னல் வழியே மலர்களின் நறுமணத்தோடு... கல்வராயன் மலையின் சாரலும் பின்னி பிணைந்து... அவர்களின் காதல் அரங்கேற்றத்தை கள்ளத்தனமாக ரசித்துக் கொண்டு... அவர்கள் மேனிதொட்டு... மெய்சிலிர்க்க வைத்து கடந்த போனது!

## 9

**என் இதயத்தில் இரும்புக்குண்டை**
**ஏற்றி வைத்தும் துளிகூட வலிக்கவில்லை!**
**காரணம்...?**
**அந்தச் செயலை மகிழ்ச்சியோடு செய்தது**
**நீயென்பதால்!**

நித்யா... அந்த வீட்டிற்கு வாழ வந்த கொஞ்ச நாட்களிலேயே... அவளின் மனம், பண்பாடு, பாசம், நேசம், அன்பு, அடக்கம் கண்டு மாமானர் சக்திவேல் ஐயாவிற்கு நிரம்ப பிடித்துவிட்டது!

நித்யாவின் பேச்சில் இருந்த கனிவு, பண்பு அவரை அசைத்துப் பார்த்தது!

நித்யா போடும் கோலத்தின் அழகில் மயங்கிப் போனார்! சதா வாசலுக்கு சென்று அவள் போட்ட கோலத்தை ரசிப்பது... அவருக்கு ஒரு பொழுது போக்காய் இருந்தது!

நித்யா ஒவ்வொருவருக்கும் என பார்த்துப் பார்த்து சமைத்து பரிமாறினாள்.

அவரின் வயதிற்கு, உடம்பிற்கு எளிதாய் செரிமானமாகும் உணவைத் தேர்ந்தெடுத்து, ருசியாய் சமைத்து மாமனாருக்கு பரிமாற அவரின் வயிறும். மனமும் குளிர்ந்து போனது!

வீட்டின், பண்ணையில் வரவு செலவு கணக்கைப் பங்கிட்டுக் கொள்ள... ராகுலுக்கு பெரும் சுமையில் பாதியை இறக்கி வைத்த உணர்வு!

அந்த பெரிய பங்களாவையே அழகான கோயிலாய் மாற்றினாள்.

அடுத்ததாய், பத்து வயது மதிவதனாவைக் குளிக்க வைத்து, உடையுடுத்தி உணவு ஊட்டிவிட்டு பள்ளிக்கு அனுப்பியதைப் பார்க்க.. ஒரு தாய் தன் குழந்தையைப் பராமரிப்பது போல் இருந்தது! .

''மதிவதனாவும், இளங்கோவும் நம் குழந்தைகள்! நமக்கெதுக்கு குழந்தை? குழந்தையே வேண்டாம்! குடும்பக்கட்டுப்பாடு ஆபரேசன் செய்துக் கொள்கிறேன்!'' என்று முதலிரவு அன்று நித்யா சொன்னதை.. ஒருநாள் பேச்சுவாக்கில் சக்திவேலிடம் ராகுல் சொல்ல... நித்யாவின் மேல் பெரிதாய் மதிப்பு கூடிப் போனது.

அன்று நித்யாவிடம் சென்றார், சக்திவேல்!

''நித்யா... நீ என்னை மன்னிக்கணும்மா!'' என்று கண்கள் கலங்கி... கையெடுத்து கும்பிட...

''அய்யோ மாமா... என்ன காரியம் செய்றீங்க? எதுக்கு நான் உங்களை மன்னிக்கணும்? என்ன தப்பு செய்ததீங்க, நீங்க?'' என்று பதற்றத்துடன் நித்யா கேட்டாள்.

''நான் உன்னை ரொம்ப மட்டமா நினைச்சிட்டு இருந்தேன்மா! தாய் தகப்பனற்ற அநாதை! ஏழைப் பெண்ணான உன்னை என் மகனுக்கு மனைவியா ஆக்கிக்க.. நான் தயங்கினேன்! உன்னை ராகுல் விரும்பினது பிடிக்கலே! ராகுல்கிட்ட எதிர்ப்பு தெரிவித்தேன்! ராகுல் வற்புறுத்தலின் பேரில் தான் மனசே இல்லாமல் உன்னை என் மருமகளாக்கிக்கிட்டேன்! என் கணிப்பு தப்புங்றதை இப்போதாம்மா புரிஞ்சிகிட்டேன்!'' என்று கூறி நிறுத்தவும்...

''என்ன பேசறீங்க, மாமா? ஏன் இப்படியெல்லாம் உங்களைத் தாழ்த்திக்கிறீங்க?''

''என்னைப் பேச விடும்மா! என் மனதில் உள்ளதை சொல்லிவிட்டால் எனக்கு ஆறிடும்! நீ என் மகன்மேல் வைத்த நேசம்... என் மேல், என் மகள் மேல் காட்டும் அன்பு, பாசம் அத்தனையும் கண்டு மெய்சிலிர்க்கிறேன்மா!...

நீ இப்படி பாந்தமா, பொறுப்பா குடும்பம் நடத்தறதைப் பார்க்க... செத்துப்போன என் தாயே மீண்டும்... உன் உருவில் உயிர்பெற்று காட்சி தருவது போல இருக்கும்மா!

உன் ருசியான சமையல்... நீ பூஜையறையில பக்தியோட பாடிட்டு செய்யற பூஜை... நீ போடற கோலம்... நீ பார்க்கற கணக்கு வழக்கு அத்தனையிலும் என் தாயைக் காணறேன்மா! மீண்டும் ஒரு ஜென்மம் எடுத்து... என் தாய், எனக்கு கிடைத்த திருப்தி... என் மனசுக்குள் நிலவுதும்மா!...

மதிவதனாவைப் பற்றிதான் பெருங்கவலை, என் மனசுக்குள்ள! அந்த கவலை இப்போ சுத்தமா தீர்ந்துடுச்சி!...

மதிவதனாவும் உன்னோட ரொம்ப நெருக்கமாயிட்டா! நீயும், அவளும் பழகறதைப் பார்க்க தாயும், பிள்ளையும் பழகறாப் போல இருக்கு!''

நீண்டதாய் பேசிமுடித்து நித்யாவின் முகத்தை சக்திவேல் ஐயா பார்க்க.. அவள் தொடர்ந்தாள்.



''சமீபமாதான் என் தாயும் தகப்பனும் இறந்துவிட்டாங்க! அதையே என்னால ஜீரணிக்க முடியலே! பிறந்த நாள் முதல் தாய் இல்லாமல் வளர்வது எவ்வளவு கொடுமை, சிரமமுன்னு எனக்கு தெரியும், மாமா! மதிவதனா பற்றி இனி எந்த நாலும் கவலைக் கொள்ள வேண்டாம்! மதிவதனா என் மூத்த குழந்தை!''

''தாயே... தெய்வமே.. என் குலவிளக்கே... நான் ஊரெல்லாம் ஜல்லடைப் போட்டு தேடியிருந்தாலும்... உன்னைப் போல ஒரு நல்லப் பெண்ணை என் மருமகளக்கி இருக்க முடியாது!'' என்று கையெடுத்து கும்பிட்டார், சக்திவேல் ஐயா!

பதினைந்து வயது இளங்கோவும்... பத்து வயது மதிவதனாவும் நல்ல நண்பர்கள் ஆனார்கள்!

இளங்கோவிற்கு மதிவதனாவைக் கண்ட நாள் முதல் ரொம்பவே பிடித்துப் போனது!

அவனுக்கு அவள்மேல் அதீத அன்பு உண்டு! அளவுக்கதிமான அக்கறை உண்டு!

பள்ளியில் மதிவதனாவை யாராவது திட்டினாலோ, அடித்துவிட்டாலோ... அவர்கள் தொலைந்தார்கள்! இளங்கோ அவர்களை அடித்து, உதைத்து காயப்படுத்திவிடுவான்!

எட்டாத உயரத்தில் இருக்கும் மரத்தில் உள்ள பூவையோ, கனியையோ கைக்காட்டி கேட்டால்கூட... தாமதிக்காமல் உச்சி ஏறி வளைத்து பறித்து கொடுத்துவிடுவான்!

மதிவதனா வயதிற்கு வந்த பின் கொஞ்சம் வெட்கப்பட்டுக் கொண்டு தூரமா விலகி நின்றான்.

தான் அணியும் உடையின் நிறத்தில் உள்ள ரோஜா மலரை காதோரம் சொருகிக் கொள்வது என்றால் மதிவதனாவிற்கு பிடிக்கும்! அவளின் உடையில் நிறத்தில் தோட்டத்திற்கு சென்று பூவை பறித்துவந்து அவளிடம் கொடுத்துவிடுவான், இளங்கோ!

அவள் மேல் அவன் வைத்த அன்பும், பாசமும், அக்கறையும் நாளடைவில் பெரும் காதலாய் மாறி அவளை அலைக்கழித்தது!

இளங்கோ பி.எஸ்ஸி அக்ரி முடித்து. அத்தான் வீட்டு பண்ணைத் தோட்டத்தையே நிர்வாகம் செய்து கொண்டிருந்தான்!

மதிவதனாதான் அவனுடைய உயிர்! மதிவதனாதான் அவனுடைய சுவாசம்!

அவள் காலில் முள் தைத்தால் அவன் இதயத்தில் வலிக்கும்!

அவள் கண்களில் நீர் வழிந்தால் அவன் நெஞ்சில் குருதி வழியும்!

மதிவதனாவின் மேலான நேசத்தையே உண்டு, சுவாசித்து, உயிர்பித்து வாழ்பவன், இளங்கோ!

அவள் அவனை நேசிக்கிறாளா என்று அவனுக்கு தெரியாது!

சில செயல்களை வைத்து பார்க்கும் போது அவளும் அவனை நேசிக்கிறாள் என்று உறுதி செய்து கொண்டான்.

''இளங்கோ... உங்க கண்கள் உங்களுக்கு கூடுதல் அழகு! அடுத்ததா, உங்க அடர்ந்த மீசை அதைவிட பேரழகு! தெரியுமா?''

மதிவதனா சிலாகித்து ரசிப்போடு சொல்ல... அவன் மனம் நெகிழும்!

இளங்கோ படித்து முடித்து பண்ணையை நிர்வாகம் செய்ய ஆரம்பித்ததிலிருந்து ராகுல் போல கதரில் வெள்ளை சட்டை, வெள்ளை வேட்டி அணிந்து கொண்டான்.

''இளங்கோ... உங்களுக்கு என்ன வயசாயிடிச்சு... ஏன் இப்படி வெள்ளை வேட்டி, சட்டை அணியிறீங்க?'' என்று ஒரு நாள் கேட்க...

''இது நல்லாயில்லையா, மதிவதனா...?''

''சூப்பராதான் இருக்கு! கம்பீரமாத்தான் இருக்கு! பேரழகாத்தான் இருக்கு! ஆனாலும் நீங்க ஜீன்ஸ் பேண்ட், டீ சர்ட் போட்டால் கலக்கலா இருப்பீங்கங்கிறது என் எண்ணம்! நாளைக்கு கள்ளக்குறிச்சி போறேன்! 'கவுதம் ஜென்ட்ஸ் பேலஸ்'ன்னு புதுசா கடைதிறந்திருக்கு! அங்கு நல்ல உடைகள் இருப்பதா என் பிரண்ட்ஸ் சொல்றாங்க! உங்களுக்கு உடை எடுத்துட்டு வரேன்!''

மாலையே ஐந்து செட் உடையோடு வந்து நின்றாள்.

கருநீலம், ஆகாய நீலம், வெளிர் சாம்பல், கருப்பு, சாக்லேட் நிறம் என்று ஜீன்ஸ் பேண்டும், அதற்கு மேட்சாய் டீ சர்ட்டும் கொண்டு வந்து நீட்ட... அவன் அதை ஆசையோடு வாங்கி... அணிந்து காட்ட...

''சூப்பர்...சூப்பர்... இளங்கோ!'' என்று புகழ... அவன் உச்சி வானில் சந்தோசத்தில் மிதந்தான்.

மதிவதனா தனது தந்தையிடம் 'படிப்பு முடிந்து திருமணம் செய்து வையுங்கள்! என்று கேட்ட போது... இளங்கோ 'பங்களாவிற்குள் நுழைய இருந்தவன் வாயிறபடியிலேயே நின்றான்.

மதிவதனா, சக்திவேல் ஐயா, ராகுல், நித்யாவின் பேச்சை கேட்டான்.

கடைசியாய் மதிவதனா...

''என்னை வெளியிடத்துக்கு அனுப்பாமல் வீட்டோட மாப்பிள்ளையாவே பார்த்து கட்டி வையுங்க! உங்களை, அண்ணா, அண்ணியைப் பிரியாமல் இங்கேயே, இதே வீட்டில் இருந்துவிடுகிறேன்!' என்று கூறி வார்த்தைகள் அவனுள் பனிமலையின் குளிர்ச்சியைத் தர மகிழ்ந்துப் போனான்!

அதன் காரணமாய் அவன் ஒரு செயலைச் செய்தான்! அந்தச் செயல் பெரும் விபரீதத்தை ஏற்படுத்தப் போகிறது எனத் தெரியாமல்!

**10**

**பாழும் கிணற்றில் விழுந்து..,**
**கை,கால் உடைந்து...**
**உயிர்போகும் தருணத்திலும்...**
**ஒரு மென்மையான புன்னகை**
**என் உதடுகளில்...!**
**ஏனென்றால்,**
**என்னைத் தள்ளிவிட்டது**



**உன் தளிர்கரம் என்பதால்...!**

**அன்று...**

மதிவதனாவும், கயல்விழியும் அவர்கள் வீட்டு மாந்தோப்பு, தென்னந்தோப்பு, நெல், சோள வயல், கரும்புத் தோட்டம், மலர் வனம் எல்லாம் கடந்து... வெள்ளியை உருக்கி வார்த்தால் போல் நீண்டு, சலசலத்து ஓடும் கோமுகி நதிக்கு வந்தார்கள்.

படித்துறை பெரிதாய், பெரும் ரம்யமாய் காட்சியளித்தது!

மாற்றுடையை கரையில் வைத்துவிட்டு, அணிந்திருந்த ஆடைகளை துவைத்து, அலசி, மணலில் காய போட்டு விட்டு வந்து... நீரில் இறங்கி... மீன் குஞ்சுகளாய் இருவரும் நீத்தினர்! ஒருவர் மீது ஒருவர் நீரை அள்ளி வீசிக் கொண்டு மகிழ்ந்தனர்.

பின்னர் கரையேறி உடுத்திக் கொண்டு, காய்ந்த துணிகளை மடித்து எடுத்துக் கொண்டு வீட்டிற்கு திரும்பினர்.

மாந்தோப்பில் நடக்கும் போது இளங்கோ ஓரிடத்தில் நின்று கொண்டு... அவர்களை எதிர்கொண்டான்.

''மதிவதனா... நான் உன்னிடம் தனியே பேசணும்!'' என்றவன் கயல்விழியைப் பார்க்க...

''ஏய் மதிவதனா.. நீ இருந்து பேசிட்டு வாடி! நான் போறேன்!'' என்று கயல்விழி நடந்தாள்.

''என்ன பேசணும் இளங்கோ...? ஒரே வீட்டுல இருக்கோம்! அங்கே வீட்டுல பேசலாம் இல்லையா?''

''இது பர்சனல் மதிவதனா! அங்கே மாமா, அத்தான், அக்கான்னு இருப்பாங்க!''

மதிவதனா ஆச்சரியத்துடன் கேட்டாள்.

''பர்சனலா...? சரி சொல்லுங்க?''

''எனக்கு எப்படி கோர்வையா சொல்றதுன்னு தெரியாததால... இந்த லட்டர்ல விளக்கமா எழுதியிருக்கேன்! இதை நீ படிக்கணும், மதிவதனா!''

''என்ன லட்டர், இது?''

''அது...அது...'' அவன் தடுமாற...

''லவ் லட்டரா...?''

''ஆமா...''

''யாருக்கு எழுதியிருக்கீங்க... கயலுக்கா...?''

''ச்சே...ச்சே... நான் உனக்கு எழுதியது!''

''சரி கொடுங்க!''

கொடுத்தான்.

''இதை நான் இப்பவே படிக்கணுமா...?''

''உன் விருப்பம், மதிவதனா!''

''சுவாரசியம் தாங்கல, இளங்கோ! நான் இங்கேயே படிச்சிடறேன்!'' என்றவள் கடிதத்தை விரித்துப் படித்தாள்.

அன்பே வதனா...

உன்னைக் கண்ட நாள்முதலாய்... உன்னை என் நெஞ்சில் வைத்து பூஜிக்கிறேன்!

நீ என் உயிர்...!

நீ என் சுவாசம்...! நீ என் உணர்வு...!

என் இதயத்தில் காதல் வித்தைப் போட்டவள், நீ!

அந்த வித்து இன்று முளைத்து, கிளைத்து, மொட்டுவிட்டு, விண்ணுக்கும், மண்ணுக்கும் ஓங்கி உயர்ந்து நிற்கிறது!

அந்தக் காதல் மரத்தில் ஒய்யாரமாய் 'காதல் பூ' மலர்ந்து, மணம் பரப்பி நிற்கிறது, உன் வரவிற்காக!

நீ அந்த பூவை பறித்து சூடிக்கொள்ள வேண்டும் வதனா!

என் உயிரினுக்கு மேலாய்... என் உணர்வினுக்கு மேலாய்.. உன்னை என் நெஞ்சார நேசிக்கிறேன், என் தேவதையே!

ஆரம்பத்தில் இருந்த உன் மேலான அன்பும், பாசமும், அக்கறையும்... வயதும் வாலிபமும் வரவர அது காதலாய் குழைந்து, உருகி, திரண்டு போனது, என் இதயத்தில்!

மதிவதனம்மா... உனக்கு என்னைப் பிடிக்கும், தானே? நீ என்னை நேசிக்கிறாய், தானே?

உன் நேசத்தைத் தெரிந்து கொண்டு... மாமா, அத்தானிடம் உன்னைப் பெண் கேட்கலாம் என்று இருக்கிறேன்!

உன் பதிலுக்காய் காத்திருக்கிறேன்! இளங்கோ.

படித்து முடித்தவள்... லட்டரை அவனிடம் கொடுத்தாள்.

அவளின் கண்களிரண்டும் சிவந்து விட்டது!

அது கோபத்தாலா...? அல்ல வெட்கத்தாலா?

இன்னதென்று இளங்கோவால் இனம் பிரித்து பார்க்க முடியவில்லை!

தேர்வு எழுதிவிட்டு... ரிசல்ட்டுக்காக காத்திருக்கும் மாணவனைப் போல கைக்கட்டி காத்திருந்தான்.

இளங்கோ அழககானவன்! கம்பீரமானவன்! அத்தனைக் காம்பீரமான உடம்பு அவன் உண்ட இயற்கை உணவால் கிடைத்தது!

அந்த நெடு நெடு உயரமும் கட்டுடலும் காணும் பெண்களை வாரி சுருட்டிக் கட்டிப்போட்டு மயக்கும்!

அவனின் சிறு குறை கறுப்புகஅகும் மாநிறத்துக்கும் இடைப்பட்ட நிறம் தான்! அந்த கறுப்பு நிறம் கூட அவனுக்கு பேரம்சத்தை அள்ளித் தந்தது!

'' வதனா எதுவும் சொல்லாமல் மௌனமா இருக்கியேம்மா? உன் மௌனத்தை சம்மதமா எடுத்துக் கொள்ளவா? '' என்று கேட்டான்.

'' இல்ல இளங்கோ! இந்த மௌனம் உங்கள் மேல் எனக்கு காதல் இல்லை என்பதால் ஏற்பட்டது! எனக்கு உங்களைப் பிடிக்கலை '' அவள் பட்டென்று கூற...

'' வதனா நீ என்ன சொல்றே? '' என்று கேட்டு இளங்கோ அதிர்ந்தான்.

'' நான் உங்களை ஒரு நாளும் காதலனாகவோ, கணவனாகவோ



எண்ணிப் பார்த்ததில்லை. ''

'' வதனா ''

'' உங்க மேல் ஒரு நாளும் எனக்கு நேசம் ஏற்பட்டதில்லை ''

'' வதனா வதனா நீ என்ன சொல்றே? அப்போ நீ இவ்வளவு நாளும் காட்டின பிரியம், அன்பு, அக்கறைக்கெல்லாம் என்ன அர்த்தம்? ''

'' என்னைத் தாயா தாங்கிக்கிட்ட அண்ணியோட தம்பின்னு பிரியமா நடந்துக்கிட்டேன்! கிட்டத்தட்ட பத்து வருஷமா ஒரே வீட்டுல சேர்ந்து வளர்கிறோம்! தினம் பார்த்து பழகற உங்க மேல நானும், என் மேல் நீங்களும் அன்பு செலுத்துறதுல என்ன அதிசயம்? ஏன் இளங்கோ உங்களுக்கு நட்புக்கும், காதலுக்கும் வித்தியாசம் தெரியாதா? ''

'' வதனா ''

'' இதுநாள் வரை உங்க மனம் சலனப்படறாப்போல என்றாவது நடந்துட்டு இருப்பேனா? உங்களிடம் என் முறைப்பையன்னு சீண்டி விளையாடியிருப்பேனா? வரம்பு மீறி பழகியிருக்கேனா? எதை வச்சி நானும் உங்களை காதலிக்குறேன்னு அர்த்தம் எடுத்துட்டு கடிதம் எழுதிட்டு வந்திருக்கீங்க? ''

மதிவதனா கோபமாய் கேட்க...

'' நான் சாப்பிடலேன்னா நீயும் சாப்பிடாமல் இருந்ததும், நான் அழுதால் நீ அழுததும், நான் சிரித்தால் நீயும் சிரித்ததும் என் உடைமேல் அக்கறை எடுத்துக் கொண்டதும் என் அழகை, கம்பீரத்தை பாராட்டினதும் எல்லாம் எதனால் வதனா? காதலாய் இல்லையா? ''

'' ஒரே வீட்டுல அண்ணியோட பிள்ளைகளா அண்ணன், தங்கைப் போல வளர்றமோ! அதனால் ஏற்பட்ட மிதமிஞ்சிய பாசம் தான் நான் உங்களிடம் நடந்து கொண்ட விதம்''

'' வதனா என் மேல் உனக்கு நேசம் ஏற்படாததற்கு காரணம் ஒரே வீட்டில் வளர்ந்ததாலா? ''

'' முழுக்க முழுக்க அப்படின்னும் சொல்ல முடியாது. இளங்கோ! இதுநாள் வரை எந்த ஆண்மகனைப் பார்த்தும் நான் சலனப்பட்டதில்லை! சஞ்சலப்பட்டதில்லை. என் மனம் எந்த ஆணையும் கைகாட்டி இவன் தான் உன் இணை... உன் துணைன்னு கைகாட்டினது இல்லை! இதுவரைக்கும் யார் மேலும் நேசம் வந்ததில்லை ''

'' வதனா நீ தான் என் மனைவின்னு இத்தனை நாளும் கனவிலேயும் கற்பனையிலேயும் உன்னோடு வாழ்ந்துக்கிட்டு இருக்கேன்! நமக்கு அழகா ஆண் ஒன்று, பெண் ஒன்று என்று குழந்தைங்க! அதுல ஆண் குழந்தையோட பேர் கௌதம். பெண் குழந்தையோட பேர் கௌசல்யான்னு வச்சி கொஞ்சி மகிழ்ந்து வாழ்ந்துட்டு வரேனே...''

இளங்கோ சொல்லி விட்டு கண்கள் கலங்க மதிவதனாவை நோக்கினான்.

'' தான் நேசிக்கிற பெண்ணோட மனசுல என்ன இருக்குன்னு தெரியாமல் இப்படி கனவு காண்றதும், கற்பனை செய்கிறதும் பெரிய முட்டாள் தனம்னு உங்களுக்கு தெரியாதா இளங்கோ? '' மதிவதனா ஆத்திரத்தோடு கேட்க,

'' எனக்கு என்ன குறை வதனா? ''
'' அன்பானவர், பண்பானவர், படிச்சவர் தான் குறைன்னு சொன்
னால் மாநிறத்தை சொல்லலாம்! நீங்க நல்ல கலரா இருந்திருந்தால்
உங்களை எனக்கு பிடிச்சிருக்குமோன்னு என் உள் மனசுல சின்னதா
ஒரு கேள்வி எழுகிறது இளங்கோ! நானும் கலர் குறைச்சலில்லையா?
அதனால் சிவப்பு கலர் மேல் மோகம்! எல்லா அம்சங்களும் இருந்தா
லும் எனக்கு நல்ல கலரா இருக்கிற மாப்பிள்ளை தான் வேண்டும்!
அந்த மாப்பிள்ளையும் என் மனசை கவரணும். அவரைத்தான் கட்டிப்
பேன் இளங்கோ ''
'' காதல், கல்யாணம் மனம் பார்த்து வருவது! கலர் பார்த்து வரு
வது இல்லை வதனா
வதனா ஒரு ஆண் பெண்ணால் நிராகரிக்கப்படுதல் வேதனையான,
கொடுமையான விஷயம்! வதனா நீ என்னை மணந்தால் உன்னை என்
நெஞ்சுக்குள்ளே பொத்தி பொத்தி வச்சி பாதுகாப்பேன்! வதனா நீயில்
லாமல் என்னால் வாழவே முடியாதும்மா என் வாழ்க்கையில வதனா
ஒருத்தி மட்டும் தான்! வதனா கிடைக்கலைன்னா காலமெல்லாம் நான்
இப்படியே சந்நியாசியா வாழ்ந்துடுவேன்''
இளங்கோ நெஞ்சம் விம்ம கூறி முடிக்க மதிவதனா கோபமானாள்!
'' நீங்க இப்படி பேசறது கொஞ்சம் கூட நல்லாயில்லை
இளங்கோ! நீயில்லைன்னா என்னால் வாழவே முடியாதுன்னு சொல்
றது கூட மறைமுகமா மிரட்டல் விடற போலத்தான்! என்னை நீ
மணந்து தான் ஆகணும்னு சொல்றது கூட கட்டாயப்படுத்தறது போலத்
தான்''
'' வதனா கோபப்படாதேம்மா! உன்னை மிரட்டவோ, கட்டாயப்
படுத்தவோ இல்லை! உன்னிடம் நான் காதலை யாசிக்கிறேன் ''
'' அய்யோ காதலைப் போய் பிச்சையாக் கேட்கறீங்களே! காதல்
பொன்னா... பொருளா... இந்தாங்கன்னு தூக்கி பிச்சை போட!
இரண்டு மனம் சங்கமிக்கிற விஷயம் காதல்னு உங்களுக்கு தெரியாதா?
இவ்வளவை மனதில் வச்சட்டு பேசுவீங்கன்னு நான் உங்களை நினைச்
சுக்கூடப் பார்க்கலை. இனி இது விஷயமா என்னிடம் பேசாதீங்க இத்
தனை நாளும் என்னோட பழகினது பேசினது எல்லாம் இப்படி ஒரு
தப்பான நினைப்பில் தானா? நான் என் மனசில எதுவும் இல்லாமல்
பேச நீங்க... ச்சே! நான் வரேன் ''
அவள் சொல்லி விட்டு புயலாய் போக... கண்களில் துளிர்த்த
நீரோடு அவள் போகும் பாதையையே வெறித்துக் கொண்டு நின்றான்
இளங்கோ.

என் இதயத்தை பார்வையென்ற
கலப்பையால் பண்படுத்தி
காதல் விதையை விதைத்தாய்!
இன்று முளைவிட்டு கிளைவிட்டு...

11

பூத்து காய்த்து கம்பீரமாய்...
விண்ணுக்கும் மண்ணுக்கும்
ஓங்கி உயர்ந்து நிற்கிறது!

ஆனால் விதை போட்டவளே
வேரோடு வெட்டிச் சாய்க்க
கோடாரி கொண்டு வரலாமா?

இளங்கோவும் மதிவதனாவும் அதன் பிறகு வந்த நாட்களில் பேசிக் கொள்ளவில்லை!

எதிர்பாராமல் இருவரும் எதிர் எதிரே சந்தித்துக் கொள்ள நேரும் போது... மதிவதனா அவனை முறைத்துக் கொண்டு செல்வாள்!

இளங்கோ கனத்த இதயத்துடன் சோகமே உருவாய் நடமாட அது நித்யாவின் கண்களில் பட தம்பியை கேட்டாள்.

" இளங்கோ உனக்கு என்னடா ஆச்சு? ஏன் உன் முகம் சரியில்லை? சரியா சாப்பிடறதில்லை! தூங்குறதில்லை! உடம்பு எதுனா சரியில்லையாப்பா? வீட்டில தங்கறதில்லை! பாதி நாட்கள் பண்ணை வீட்டுலேயே படுத்துடறே! என்ன காரணம் இளங்கோ? " பாசமாய் கேட்டாள் நித்யா.

" அதெல்லாம் ஒண்ணுமில்லைக்கா! நான் எப்போதும் போலத் தான் இருக்கேன். இங்க விட பண்ணை வீடு எனக்கும் வசதியா இருக்காப்போல தெரிவதால் அங்கேயே தங்கி விடுறேன் "

" நீ எது சொன்னாலும் நம்ப மாட்டேன்! உனக்கு எதுவோ நடந்திருக்கு! சொல்லு? "

நித்யா கேட்க... அவன் பதில் சொல்லாமல் நழுவினான்.

மதிவதனாவிடமும் மாற்றத்தை கண்டாள் நித்யா!

" மதிவதனா அந்த இளங்கோவின் நடவடிக்கையில தான் மாற்றம் தெரியுதுன்னால், நீயும் ஏண்டி இப்படி இருக்கே? சதா எரிச்சல் பட்டுட்டு கோபமா நடந்துட்டு திரியறே "

" உனக்கும், இளங்கோவுக்கும் என்ன பிரச்சனை? " அண்ணன் ராகுல் கேட்க,

" அதெல்லாம் ஒண்ணுமில்லேண்ணா! "

" ம்கூம்! நான் நம்பமாட்டேன்! உனக்கும் இளங்கோவுக்கும் ஏதாவது சண்டையா? " நித்யா கேட்க,

" இல்லைன்னு சொல்றேன் இல்லை அப்புறமும் ஏன் தொண தொணக்கிறீங்க?"

மதிவதனா எரிச்சல்பட, இதையெல்லாம் கண்ட சக்திவேல் அய்யா அருகில் சென்று அமர்ந்து அவள் தலையை தடவி,

" சொல்லும்மா உனக்கும், இளங்கோவுக்கும் என்ன பிரச்சனை? " என்று பாசமாய் கேட்க,

" அப்பா இளங்கோ " என்று ஆரம்பித்தவள், அவன் லவ் லெட்டர் கொடுத்ததையும், அவள் மறுத்ததையும் இரண்டு பேருக்கும் நடந்த உரையாடல்களையும் கூறினாள். ராகுல், நித்யா இருவரும் அவளையே பார்த்துக் கொண்டு இருந்தனர்.

இளங்கோவுக்கு என்ன குறை, வதனா? உன்னைப் பூப்போல வச்சி பார்த்துக்குவார்மா! உனக்கு மாமனார், மாமியார், நாத்தனார்ன்னு எதுவும் கொடுமை இருக்காது "

அடுத்ததா இளங்கோ இங்கே வந்த நாள்ல இருந்து... அவருக்குத் தான் உன்னைக் கட்டி வைக்கணும்னு இங்க எல்லாரும் நினைச்சிட்டு இருக்கோம்மா இது எங்க நெடுநாளைய விருப்பம்மா

உன்னை தூரத்துல கட்டிக் கொடுத்துட்டு அவங்க உன்னை எப்படி வச்சிருக்காங்களோன்னு கலங்கி இருக்கிறதை விட இளங்கோவுக்கு கட்டிவச்சா நாங்க நிம்மதியா இருப்போம்? " என்று சக்திவேல் ஐயா தன் விருப்பத்தை வெளிப்படுத்தினார்.

" மதிவதனா நீ இளங்கோவை கட்டிக்கிட்டால் நாம் எல்லாரும் ஒண்ணா வாழலாம். " ராகுல் சொன்னான். நித்யா எதுவும் சொல்லாமல் மதிவதனாவையே சோகமாக பார்த்துக் கொண்டிருந்தாள்.

" இளங்கோ எனக்கு வேண்டாம்ண்ணா "

" நீ தானே சொன்னே வீட்டோட இருக்க மாப்பிள்ளைக்கு கட்டி வைங்கன்னு"

" வீட்டோட இருக்கிற மாப்பிள்ளைன்னால் இளங்கோவை கட்டி வைங்கன்னு அர்த்தமா? "

" மதிவதனா என் தம்பி இளங்கோவுக்கு என்ன குறை? ஏன் பிடிக்கலை அவனை" நித்யா கேட்க,

" பிடிக்கலைன்னு சொன்னால் விட்டுடணும் அண்ணி! அதை விட்டுட்டு என்ன குறை? ஏது குறைன்னு கேட்டுட்டு இருக்கக்கூடாது."மதிவதனா எரிந்து விழுந்தாள்.

" என் தம்பி உன் மேல மிதமிஞ்சிய அன்பு வச்சிட்டாண்டி. அதன் காரணமாத்தான் உன்கிட்ட கேட்டுட்டு இருக்கேன்! உன்னைத் தன் மனைவியா நினைச்சி வாழறவனை வேண்டாம்னு சொன்னால் அவனால் தாங்க முடியுமா? படிச்ச படிப்புக்கு வெளியில் ஏன் வேலைக்குப் போகலை தெரியுமா? உன்னைப் பிரிஞ்சு இருக்க முடியாததால் தான்! இங்கே காட்டுலயும், கழனியிலேயும் வேலை செய்துட்டு இருக்கான்! இளங்கோவை புரிஞ்சுக்கோ! மதிவதனா நீ மறுத்த காரணமாய் ரொம்ப உடைஞ்சி போய் இருக்கான்! என்கிட்ட இதுதான் காரணம்னு சொல்லி உன்னை இக்கட்டுல மாட்டி வைக்காத நல்ல உள்ளத்துக்கு சொந்தக்காரண்டி என் தம்பி

அவனை நீ கட்டிட்டா உன்னை நல்லா பார்த்துப்பான்! உன் வாழ்க்கையும், நாம் எல்லோர் வாழ்க்கை போல சொர்க்கமா இருக்கும் "

" இது என் வாழ்க்கைப் பிரச்சனை! யாரும் வற்புறுத்த வேண்டாம்! இதுல முடிவெடுக்கற அத்தனை உரிமையும் எனக்கு மட்டும் தான் இருக்கு" என்று நித்யாவை பார்த்து எரிச்சலோடு சொன்னாள்.

" மதிவதனா நீ இப்படி பிடிவாதம் பிடிக்கிறது நல்லதில்லைம்மா! பெரியவங்க உனக்கு கெடுதல் செய்ய மாட்டாங்க! பெரியவங்க சொன்

னால் கேட்கணும் '' சக்திவேல் சொன்னார்.

'' அப்பா என்னைப் புரிஞ்சுக்கோங்க! எனக்கு இளங்கோவைப் பிடிச்சிருக்கு! ஆனால் கணவனா பிடிக்கலை என்னை சாக சொல்லுங்க செத்துடறேன்! ஆனால் இளங்கோவை மட்டும் கட்டிக்கன்னு சொல்லாதீங்க என் திருமணத்தை என் விருப்பம் போல் நடத்துங்க ப்ளீஸ்ப்பா ''

மதிவதனா சொல்லிவிட்டு குலுங்கி குலுங்கி அழுதாள்.

ராகுல் நித்யா இவளை வற்புறுத்த வேண்டாம். இவள் விருப்பத்துக்கு விட்டுடுவோம். அழாதே! மதிவதனா! சொல்லு உனக்கு எப்படிப்பட்ட மாப்பிள்ளை வேண்டும்? '' என்றான் சக்திவேல்.

அவள் கண்களை துடைத்துக் கொண்டு சொன்னாள்.

'' நல்ல அழகு... நல்ல படிப்பு... நல்ல கலர்ல.... நீங்க மாப்பிள்ளையை வரவழையுங்க அதில் யாரைப் புடிக்குதோ கைக்காட்டுறேன்! ஒரு ஏழையைப் புடிச்சிருந்தாலும் அவரைத் தான் எனக்கு கட்டி வைக்கணும் ''

தந்தையிடம் சொல்லி விட்டு அங்கிருந்து எழுந்து போய் தன்னறைக்குள் நுழைந்து கொண்டாள் மதிவதனா.

சக்திவேல், ராகுல் இருவரும் தங்கள் வேலையை பார்க்க புறப்பட்டனர்.

நித்யாவிற்கு நெஞ்சம் எரிந்தது.

தன் தம்பியை கட்டிக் கொள்ள மறுப்பாள் என்று கனவிலும் நினைக்கவில்லை நித்யா.

மதிவதனாவை இளங்கோவிற்கு கட்டி வைத்து தன் தம்பியை காலமெல்லாம் பிரியாமல் இருக்கலாம் என்று நினைத்துக் கொண்டிருந்தவளின் நினைப்பில் மதிவதனா ஒரு கைப்பிடி மண் அள்ளிப்போட கலங்கி விட்டாள்.

இளங்கோவின் நிலையை நினைத்து அழுது அழுது கண்கள் வீங்கி விட்டன!

கணவன் இரவு பங்களாவிற்கு வர அவனிடம் கேட்டாள்.

'' என் தம்பிக்கு என்ன குறைங்க? மதிவதனா இப்படி மடத்தனமா மறுக்கிறாளே! எனக்கு ரொம்ப கஷ்டமா இருக்குங்க''

'' அவளுக்கு இளங்கோவைப் பிடிக்கலை நித்யா. அதுக்கு நாம என்ன செய்ய முடியும்? ''

'' எப்படி பிடிக்காமல் போகும்? என் தம்பி நல்லவன்! சொந்தத்துக்கு சொந்தம் வேற. நம்ம சொத்தும் வெளியிடத்துக்குப் போகாது! எல்லாம் தெரிஞ்ச நீங்க அவளுக்கு புத்தி சொல்லி புரிய வைக்கக் கூடாதா? '' என்று கண்களில் கண்ணீர் மின்ன கேட்டாள்.

'' கல்யாணம் அவள் விருப்பம்! இதில் புத்தி சொன்னான்... உன் தம்பியை அவளுக்கு பிடிக்குமா? கட்டாயப்படுத்தி கட்டி வச்சால்... அவள் அவனோடு மனம் ஒன்றி வாழ்வாளா? அவள் வாழ்க்கையையும் அழிச்சிக்கிறது இல்லாமல்... உன் தம்பி வாழ்க்கையையும் இதில் நரகமாயிடும் இல்லையா நித்யா? அவளுக்கு யாரைப் பிடிக்குதோ அவ



னையே கட்டி வைப்போம். உன் தம்பிக்கு வேற நல்ல இடத்துல பொண்ணு பார்த்து கட்டி வைக்கலாம்''

'' என் தம்பி உங்க தங்கச்சியை உயிருக்குயிரா நேசிக்கிறான் ''

'' என் தங்கை உன் தம்பியை நேசிக்க வேண்டாமா? ''

'' என்னங்க இப்படி பல்டி அடிக்கிறீங்க? உங்க தங்கச்சி பக்கம் பேசறீங்க?''

'' நிஜம் பேசறேண்டி! உன் தம்பி என் தங்கையை ஒருதலையா காதலிச்சுருக்கான். கைக்கிளை காதலால் என்ன பயன்?

நேசம் ஒரு வழிப்பாதையில்லை! இரண்டு மனங்களும் ஒன்றோடு ஒன்று பிணைவது தான் காதல்'' என்று ராகுல் சொல்ல,

'' நீங்க என்னை விரட்டி விரட்டி காதலிச்சீங்க. நான் உங்களுக்கு கழுத்தை நீட்டலையா?''

'' உனக்கும் பிடிச்சிருந்தது. நீ நேசிச்சே! எனக்கு கழுத்தை நீட்டினே! உனக்கு என்னை பிடிக்கலைன்னால் கட்டிட்டு இருப்பியா? '' என்று ராகுல் வேகமாய் கேட்க, நித்யா மௌனமாய் இருக்க...

'' பதில் சொல்ல முடியலையா? ''

'' தாயிக்கு தாயா... என் பிள்ளையா பாவிச்சி அவளை வளர்த்தேனே! என் பேச்சு கேட்க மாட்டேங்கிறாளே? என் தம்பியை கட்டிக்க மறுக்கிறாளே'' என்று நித்யா அழுதாள்.

'' தாயில்லாத நாத்தனாரை தாயாய் இருந்து கவனிக்க வேண்டியது உன் கடமை! உன் கடமைக்கும், என் தங்கை விருப்பத்துக்கும் முடிச்சுப் போட்டு பேசாதே! திருமணம் அவள் விருப்பம் ''

'' என் தம்பி உங்க தங்கை மேல அளவுக்கு அதிகமா ஆசை வச்சிட்டான்! மதிவதனா கிட்ட கொஞ்சம் பேசுங்க ப்ளீஸ் '' என்று நித்யா கெஞ்சினாள்.

'' ஏய் நித்யா உன் தம்பியை கட்டிக்க சொல்லியெல்லாம் மதிவதனாவை கட்டாயப்படுத்த மாட்டேன். அவ வாழ்க்கையை அவள் முடிவு செய்யட்டும். என் தங்கையும், அவள் விருப்பமும் தான் அவள் வாழ்க்கைக்கு முக்கியம் ''

'' அப்போ நான் என் தம்பியெல்லாம் முக்கியமில்லையா? வேண்டாம் அப்படித்தானே? '' என்று நித்யா குலுங்கி குலுங்கி அழுதாள்.

'' நான் சொல்றதைக் கேளு நித்யா! இளங்கோவுக்கு நல்ல பொண்ணாப் பார்த்து கட்டி வைக்கிறேன்! அவனுக்குன்னு தொழில் ஒண்ணையும் ஏற்படுத்தி தர்றேன். இல்ல விவசாயம் பிடிக்குதுன்னால் கொஞ்சம் நிலத்தை அவன் பேர்ல எழுதி வைக்கிறேன். விவசாயம் செய்து பிழைச்சிக்கிடட்டும். வீடும் கட்டித்தர்றேன். வேற இன்னும் என்னவெல்லாம் செய்யணும்னு சொல்லு? அத்தனையும் செய்துடலாம் ''

'' அவன் உங்க கிட்ட விரும்பி கேட்கிறது உங்க தங்கையை. அவனுக்கு இந்த பாழாய்ப் போன சொத்தோ, சுகமோ, வீடோ தேவையில்லை. அடுத்தவங்க சொத்துக்கு ஆசைப்படறவன் என் தம்பி இல்லை! அவனுக்கு உழைச்சி முன்னேறிக்கத் தெரியும். உங்க கிட்ட நாயா உழைச்சதுக்கு நன்றி காட்டிட்டீங்க இல்லை.

நான் பதினெட்டு வயசுலேயும் என் தம்பி பதினைந்து வயசுலேயும் உங்களை நம்பி வந்தோம்! "

" வந்ததுக்கு என்ன குறை வந்திருச்சு? இங்கே என்ன குறை? உன் தம்பியை வேற்று ஆளா பார்த்திருப்பேனா? நீ எப்படி என் தங்கைக்கு தாயா மாறிப்போனாயோ... அதுபோல நானும் உன் தம்பிக்கு தகப்பனாத்தானே மாறி பாதுகாத்தேன் படிக்க வச்சேன் "

" அதான் பொத்தி பொத்தி பாதுகாத்து பெரிய மனக்குறையை ஏற்படுத்திட்டீங்களே! தூக்கி தலையில வச்சி கொண்டாடிட்டு... கடைசியில தூக்கி தொப்புன்னு போட்டுட்டீங்களே! என் தம்பி சின்ன குழந்தை போல அழுறான். அவனை எப்படி தேத்தறதுன்னுனு தெரியலை"

நித்யா விம்மியழுதாள்.

" நித்யா நீயும், உன் தம்பியும் கேட்கிறது... என் உயிருக்குயிரான தங்கையின் எதிர்காலத்தை சந்தோசத்தை

காதல் கேட்டு பெறுவதல்ல,

கல்யாணம் நிர்பந்தத்தால் அமையக்கூடாது!

இயல்பாய் இயற்கை பேரூற்றாய் ஒருவர் மேல் மற்றொருவருக்கு காதல் பிறக்க வேண்டும். கல்யாணத்தில் இணைய வேண்டும். அப்படி இணைந்தால் தான் கடைசி வரை உனக்கு நான்... எனக்கு நீ என்று இன்பமாய் வாழ்க்கையை நடத்த முடியும். இளங்கோவுக்கு புத்தி சொல்லி தேற்று. சரியா? மீண்டும் இதைப் பத்தி பேசாதே! போ...போய் படு" என்று ராகுல் அதட்டினான்.

கணவரின் பேச்சுக்கு மறுவார்த்தை பேசமுடியாமல் அவனை இரு கூர்விழிகளால் முறைத்தாள்.

அவள் முறைப்பை ராகுல் அலட்சியம் செய்ய... அவள் மனதில் கோபம் பெரிய பந்தாய் சுற்றி சுழன்று சுடர்விட்டு எரிந்தது.

**என் அன்பே**
**வாளெடுத்து என்னைக் காயப்படுத்தி**
**யிருந்தாலும்**
**இந்த அளவு வலிக்காது!**
**ஆனால் 'பிடிக்கவில்லை'என்ற**
**உனது ஒரு வார்த்தை**
**என்னைக் கொன்றுகூறுபோட்டு விட்டது**

## 12

தரகர்கள் வரவழைக்கப்பட்டனர்

அவர்களிடம் எந்த மாதிரி,என்ன தகுதியுள்ள மாப்பிள்ளை வேண்டும் என்று சொல்லப்பட்டது.

அவர்கள் கட்டாய் போட்டோவைக் கொண்டு வந்து காட்டினர். தினமும் மதிவதனாவிற்கு யாரையுமே பிடிக்கவில்லை.



மீண்டும் வருவதாய் கூறிவிட்டு தரகர்கள் சென்றார்கள் இளங்கோவிற்கு

அங்கு நடப்பதைக் கண்கொண்டு காண முடியவில்லை

'மதிவதனா... என் உயிரே... நீ எனக்காக பிறந்தவள் இல்லையா?

நீயில்லாமல் நான் எப்படி உயிர் வாழ்வேன்? என் மனம் உனக்கு புரியாமல் போனேன்?

என் சின்ன இதயத்தைச் சில்லு சில்லாய் உடைத்து, உருக்குலைய வைத்து விட்டாயே?

'என்னவள் நீ என்று உருகி உருகி... மருகி மருகி காதலிக்கிறேனே... என் நெஞ்சில் எழுந்த நேசத்தை எவ்வாறு நெருப்பு கொண்டு பொசுக்குவேன்?'

'இளங்கோவிற்கு வாழ்க்கையே வெறுத்து விட்டது!

தினம் தினம் அவன் கண்ணீரை சுமக்கும் தலையணைக்குதான் தெரியும்.. அவன் மனதின் வலி!

நித்யா எவ்வளவு ஆறுதல் சொல்லியும் சிறுபிள்ளை போல் ... அவளின் மடியில் விழுந்து அழும் இளங்கோவிற்கு ஆறுதல் சொல்லி தேற்ற முடியாமல் தவித்தாள்.

இதுநாள்வரை மதிவதனாவை வெறுக்காதவள்... இன்று இமயம் அளவு வெறுத்தாள்!

மீண்டும், மீண்டும் சக்திவேல், ராகுலிடம் பேச... அவர்கள் செவி சாய்க்க வில்லை.!

சேலத்திலிருந்து ஒரு தரகர் வந்தார். அவர் கொடுத்த போட்டோவில் இருந்த இளைஞன் ஒருவன் அவளைக் கவர்ந்தான்.

பாலையும், சந்தனத்தையும், மஞ்சளையும் ஒன்றாக கொட்டி குழைத்த கலரில்.. ஒளி வீசும் கண்களோடு,... வில்லாய் வளைந்த புருவத்தோடு... புன்னகையை சிந்து உதடுகளோடு.. அடர்ந்த கேசத்தில்... அடர்ந்த மீசையில்... அம்சமாய் இருந்த... அந்த அழகு மன்மதனை மதிவதனாவிற்கு பிடித்து விட்டது!

தந்தையிடம் காட்டினாள்.

"உங்க வீட்டுக்கு வந்து ட்ரீட்மென்ட் பண்ணியிருக்கிறேன் பாதி பீஸ் தான் தறீங்க...?"

"கூட நர்சைக் கூட்டிக்கிட்டு வரலையே...?"



''அய்யா இந்த மாப்பிள்ளை பெயர், மதன்! சொந்த ஊர் நாகர்கோயில்! இப்போ வசிப்பது சேலத்தில்! சேலம் இரும்பு எகு ஆலையில் சாதாரண கிளார்க் வேலைப் பார்த்துட்டு இருந்தவர் ... இப்போ அதை விட்டுட்டு வேலை தேடிட்டு இருக்கார்.! படிப்பு எம்.எஸ்ஸி! தந்தை இல்லை! தாய் சிவகாமிகூட நாகர்கோயில்ல இருப்பதா கேள்வி! வயது இருப்பத்தொன்பது! பார்க்கத்தான் அழகன்! ஆனால்..?'' என்று தாகர் இழுக்க..

''என்ன தரகரே... சொல்லுங்க?'' சக்திவேல் அய்யா கேட்க..

''வசதி இல்லேங்க! வாடகை வீட்டுலதான் இருக்கார்! இவர் வேண்டாம்! வேற மாப்பிள்ளைப் பார்க்கலாங்க!'' என்று சொல்ல..

''எனக்கு இந்த மதனைத்தான் பிடிச்சிருக்கு!' என்று மதிவதனா சொன்னாள்.

''வசிக்க கூட வீடு இல்லை! நல்ல வேலை இல்லை! இந்த மாப்பிள்ளை வேண்டாமே, மதிவதனா!''

''நீங்க வீடு வாங்கி கொடுத்து, அவர் விரும்பற தொழில் வச்சி கொடுத்தால்.. அவர் உழைக்க மாட்டாரா? நம்ம அளவு உச்சிக்கு வர மாட்டாரா?''

''நம்ம ஊரு ஜனங்க... நம்மை என்ன நினைப்பாங்க, மதிவதனா?''

''அப்பா... என் மகிழ்ச்சி, சந்தோசம் முக்கியம்ன்னால் இந்த மாப்பிள்ளளயை வரவழையுங்க?'' கோபமாய் சொன்னாள்.

''அம்மா... மதிவதனா... எதுக்கும் கொஞ்சம் யோசிம்மா! நம் இளங்கோவுக்கு என்ன குறை? நல்ல மாப்பிள்ளையை கையில வச்சிட்டு அயல்ல தேடணுமா? நீ எனக்கிருக்கறது ஒரே மகள்! உன்னை வெளியில் கட்டி குடுத்துட்டு கலங்கிட்டு இருப்பதைவிட இளங்கோவே உன் மாப்பிள்ளையா வந்தால் பெட்டரா இருக்கும்னு நினைக்கிறேன்.!''

சக்திவேலின் சொல் நித்யாவிற்கு இனித்தது! மதிவதனாவிற்கு கசந்தது!

''எனக்கு இந்த மதன்தான் வேண்டும்!'' என்று சொன்ன மதிவதனாவின் கண்களில் மதன் உடனான வாழ்க்கையை எண்ணி கனவு விரிந்தது!

மதிவதனாவிற்கு மதன் உடனான வாழ்க்கை இனிக்குமா? கசக்குமா? அது தெய்வத்திற்குதான் தெரியும்!

தரகர் ஒரு நல்லநாளில் மதனோடு வந்துசேர்ந்தார், அவனுடைய தாய் சிவகாமி, தரகர் என மூவரும் பூம்பொழில் கிராமத்துக்கு வர... மதிவதனா மகிழ்ந்து போனாள்.

மதன் கறுப்பு பேன்டும், ஆகாய வண்ண சட்டையும் அணிந்து வந்திருந்தான்! அந்த உடை அவனுக்கு மேலும் பொலிவை, கம்பீரத்தைத் தந்தது!

பரம்பரா பட்டுடுத்தி... தங்க, வைர நகைகள் அணிந்து... தேவதையாய் ஜொலித்த மதிவதனா ஜன்னல் வழியே ஹாலில் அமர்ந்திருந்த மதனை நோக்கியவள்... மயங்கிப் போனாள்!



தோழி கயல்வழியிடம் கேட்டாள்!

''அவருக்கு என்னைப் பிடிக்குமாடி?''

''உனக்கென்ன குறை...? அவர் மன்மதன்னா நீ ரதிதேவியின் அழகைக் கொண்டிருக்கே! உன்னைப் போய் யாராவது பிடிக்கலேன்னு சொல்லுவாங்களா?''

''நான் அழகுதான்! ஆனால், அவர் கலர் என்ன? என் கலர் என்ன? என் கலருக்காக என்னை நிராகரிச்சிடுவாரோன்னு பயமா இருக்கு, கயல்!'' என்று சோகமாய் மதிவதனா சொல்ல...

''அவர்கிட்ட நல்ல கலரும், அழகு மட்டும்தான் இருக்கு! உன்கிட்ட பணம், பங்களா, சொத்துன்னு நிறைய இருக்கு. அதுக்காவது உன்னை அவருக்கு பிடிக்கும்! நம்பாமல் பார்க்கறீயே! நான் சொல்வது நிஜமாய் நடக்கும்! மதிவதனா... நான் ஒண்ணு சொன்னால் தப்பா எடுத்துக்க மாட்டீயே?''

''சொல்லு? நினைக்கமாட்டேன்''

''நம்ம இளங்கோவை நீ நிராகரிச்சது எனக்கு பிடிக்கலேடி! உருகி உருகி உன்னைக் காதலிக்கறவர்... உன்மேல் உயிரையே வச்சிருப்பவர்... அப்படிப்பட்டவரை நிராகரிச்சுட்டு காலமெல்லாம் கண்கலங்காமல் வச்சிக்காப்பாரான்னு தெரியாது!

இப்படிப்பட்ட ஒருத்தர்மேல இப்படி நிறைய பிரியம் வச்சிருக்கியே! இது தப்புன்னு உனக்கு தோணலையா?''

''மதனை என் மனசுக்கு பிடிச்சிருக்கு! இளங்கோவை என் மனசுக்கு பிடிக்கலே!''

''நீ செய்யறது சரியில்லே, மதிவதனா! இளங்கோ பாவம்! உன்னை உயிர்சுவாசமா நேசிச்சதைத் தவிர பெரிய தண்டனையைத் தந்திருக்க கூடாது!'' என்று கயல்விழி கோபமாய் சொன்னாள்.

''ஏய்.. நீ என்ன என்னைக் குற்றவாளியாக்கறே? அவரை நான் நேசிச்சி ஏமாத்தினேனா? மடையன் மாதிரி அவரை ஒருதலையா என்னைக் காதலிக்கச் சொன்னது? மனசுல ஆசையை வளர்த்துக்க சொன்னது?ம்?'' என்று மதிவதனாவுமு எகிறினாள்.

''நீ தனக்கு கிடைக்கலேன்னு தெரிஞ்சதும்... ஆள் ரொம்ப டல்லாயிட்டார்! பைத்தியம் மாதிரி தாடி, மீசையோட அலையறார்! பார்க்கவே பாவமா இருக்குடி!'

''நல்ல நேரத்துல இளங்கோவைப் பத்திபேசி... என்னை ஏன் வெறுப்பேத்தறே, கயல்?''

என்று மதிவதனா சுள்ளென்று சொல்ல... கயல்விழி வாயை மூடிக் கொண்டாள்!

கயல்விழியோடு ஹாலுக்கு போனாள். மதனிடம் காபியை நீட்ட... அவன் பெற்றுக் கொண்டான்.

மதிவதனா அவனை ஆசையோடு நோக்க... அதே நேரம் மதனும் அவளை நோக்க... இருவர் பார்வைகளும் ஸ்பரிசத்துக் கொண்டன.

அவனின் ஆழ்ந்தப் பார்வை அவளுக்கு மோகத்தை மூட்டியது!

போட்டோவை விட... நேரில் இன்னும் அழகனாய் தெரிய... அவ

னையே வைத்தவிழி எடுக்காமல் வழிகள் நோக நோக நோக்கிக் கொண்டிருந்தாள், மதிவதனா.!

அவன் தாய் சிவகாமி ரொம்ப நோஞ்சானாய் தெரிந்தாள்! மதன் அவளின் பிள்ளையென்றால் யாருமே நம்ப மாட்டார்கள்! அதை சக்திவேல்அய்யா நேரே காட்டி தரகர்தான் பதில் சொன்னார்.

''அய்யா... மதன் அப்பாவுக்கு இவங்க இரண்டாவது தாரம்! மதன் அம்மா... மதனைப்போல் நல்ல அழகு, நிறம்! அவங்க இறந்துபோக... ரெண்டாவதா இவங்களைக் கட்டிட்டார்! கட்டின மறுமாசமே மனைவியோடவே அவரும் மேலே போய் சேர... இந்த அம்மாதான் மதனை சின்ன வயசுல இருந்து கஷ்டப்பட்டு வளர்த்தது, படிக்க வச்சதெல்லாம்!''

''சந்தோசம்மா...'' என்று சக்திவேல் அய்யா வணங்க... அந்த அம்மாள் மருண்ட பார்வையோடு பதிலுக்கு கையெழுத்து கும்பிட்டாள்.

ராகுல் அருகில் நித்யா 'சிவனே' என்று உட்கார்ந்திருந்தாள்! இளங்கோ ஹாலின் ஒரு மூலையில் சோகமே நின்றிருந்தான்!

''உங்களுக்கு எங்க மதிவதனாவைப் பிடிச்சிருக்கா?'' என்று மதனைப்பார்த்து சக்திவேல் ஐயா கேட்க...

''ரொம்ப ரொம்ப பிடிச்சிருக்கு அங்கிள்! அவங்களுக்கு என்னைப் பிடிச்சிருக்கான்னு கேளுங்க!''

''மதிவதனாவிற்கு பிடிச்ச காரணமாத்தான் உங்களை வரச்சொன்னது! ஒரு ஐந்நூறு போட்டோ வையாவது பார்த்திருப்பா! அதில் உங்களைத்தான் நேர்த்தெடுத்தா?'' அவர் சொல்லிக் கொண்டிருந்தபோது..

''அப்படியா...'' என்று அழகான புருவ சுழிப்பில் மதன் மதிவதனாவைப் பார்த்து கேட்க.. அவள் அந்தப் புருவச் சுழிப்பின் அழகில் பொட்டென்று விழுந்துவிட்டாள், எழவே முடியாத அளவு!

'' எனக்கிருப்பது ஒரே தங்கை உங்க கிட்ட சில கேள்விகள் கேட்கணும்!'' ராகுல் மதனைப் பார்த்து சொல்ல..

''தாராளமா கேளுங்க!'' என்றான், மதன்.

''உங்களுக்கு பீடி, சிகரெட்ன்னு பழக்க மிருக்கா.?''

''ச்சே...ச்சே... அந்தக் கருமத்தை கையாலக் கூட தொட்டதில்லே!''

''மது பழக்கம்..?''

''சுத்தமா இல்லை!''

''மாது பழக்கம்...?''

''படிக்கற காலத்துல நான் பெண்கள் பக்கமே திரும்பிக்கூட பார்த்தில்லே! நான் பொண்ணுன்னு முதன்முதலா பார்க்க வந்தது உங்க தங்கையைத்தான்! என் படிப்புக்கு தகுந்த வேலை கிடைக்கலை! நல்ல வேலை தேடிட்டு பெண் பார்க்கலாம்ன்னு இருந்தேன்! தரகர் கிட்ட சமீபமாதான் போட்டோவைக் கொடுத்தேன்! தரகர் வந்து வற்புறுத்தினதால்தான் வந்தேன்!''

ராகுலுக்கு அவன் பதில் திருப்தியாய் இருக்க நிம்மதியானான்!

''தரகர்கிட்ட முக்கியமா ஒண்ணு சொன்னோம்!''



சக்திவேல் அய்யா சொல்ல...

''வீட்டோட மாப்பிள்ளையா வரணும்ன்னு சொன்னீங்களாம்! அதுக்கு சம்மதிச்சிதான் வந்தேன்! ஆனால் இந்த கிராமத்தில் என்ன தொழில் செய்து... சுயமா சம்பாதித்து என் மனைவி, குழந்தைகளைக் காப்பதுன்னு ஒருகேள்வி எழுது!''

''நீங்க உட்கார்ந்து சாப்பிட்டால் போதும்! எங்க மதிவதனாவோட சந்தோசமா குடும்பம் நடத்தினால் போதும்! சொத்து, பணம்ன்னு இங்கே ஏகப்பட்டது குவிஞ்சி கிடக்குது!''

''ஒரு ஆணுக்கு அழகு அவன் செய்யும் வேலைதான்!''

''நீங்க பேசறது சந்தோசமா இருக்கு என்றவர் ''நீங்க விரும்பற தொழிலைக் கள்ளக்குறிச்சியிலே ஏற்படுத்திதரோம்! என்று சொன்னார்.

''மதி கூட நான் கொஞ்சம் தனியா பேசணும், அங்கிள்!'' என்று கூற பெரியவர் சம்மதிக்க மாடியறைக்கு மதனைக் கூட்டிப்போனாள். மதிவதனா.

கட்டியில் அமர்ந்தவன்... அவள் வெட்கத்தோடு நிற்பதைக் கண்டு...

''மதி... ஏன் நிற்கறே! உட்காரேன்! என்னிடம் என்ன வெட்கம்? ம்? அடடா... இவ்வளவு அழகான ரோஜாக்களை நான் இதுவரைப் பார்த்ததில்லையே!'' என்று அவள் முகம் பார்த்து சொல்ல...

''தோட்டத்துல மலர்ந்திருக்க மலரைத்தானே சொல்றீங்க?''

''ம் கூம்!''

''பின்னே?''

''உன் கன்னத்தில் பூத்திருக்க ' வெட்க ரோஜாக்களைத்தான் சொல்றேன்!''

''நீங்க ரொம்ப மோசம்!'' என்று அவள் நாணமுடன் கூற...

''எவ்வளவு மோசம்? இவ்வளவு இருக்குமா?'' அவன் இரு கைகளையும் விரித்து, கண்ணடித்து கேட்டான்! பின்..

''சும்மா இப்படி உட்கார் மதி!'' என்று தளிர்கரம் பற்றி அவன் எதிரில் அமர்த்த... அவனின் தீண்டலில் நெகிழ்ந்து போனாள்!

''உனக்கு என்னைப் பிடிச்சிருக்கா...?''

''ஆன்ட்டி னு ஒரு படம் எடுத்தாரு''

'இப்ப'...

'ஆண்டி"யாயிட்டாரு''

-எம்.அசோக்ராஜா, திருச்சி.



''ரொம்ப ரொம்ப பிடிச்சிருக்கு!'' என்றவள் கேட்டாள், ''உங்களுக்கு''

''என் உயிரினும் மேலாய் பிடிச்சிருக்கு, மதி செல்லம்!''

மதன் உருகலோடு கூற... மதிவதனா பனிக்கட்டியாய் கரைந்தாள்.

''உன்னை திருமணம் வரை எப்படி பிரிஞ்சிருப்பதோன்னு கவலையா இருக்கு மதி! இந்த நேரமே... இந்த நிமிஷமே... உன் கழுத்தில் தாலிகட்டி மனைவியாக்கிக்க... உன் வீட்டார்கள் அனுமதி கொடுத்தால்... எவ்வளவு நல்லாயிருக்கும்! நினைப்பே தேனாய் தித்திக்குது, கண்ணம்மா!''

என்று அவள் முகத்தை இரு கைகளால் தாங்கி... கண்ணோடு கண் வைத்து நோக்கி சொல்ல... அப்படியே மதிவதனா சொக்கிப்போய் விழிமூட..

அவளின் இரு நீண்ட கூர் விழிகளில் மாறி மாறி முத்தமிட்டான், மதன்!

அவள் இதை எதிர்பாராததால் அச்சமுடன் விழிதிறந்து... அவனிடமிருந்து விடுபட நினைக்க... அவனோ சட்டென்று அவளை இழுத்து இறுக்கி... இதழ்களில் இதழ் பதிக்க.. அந்த முத்தத்தின் தித்திப்பில் அவளால் எதிர்ப்பு காட்ட முடியாமல் போனது!

'' உன்னைப் பிரிந்திருக்கும் நாட்களில்.. உன் ஞாபகம் எந்நேரமும் இருப்பது போல ஏதாவது பரிசு கொடேன் மதி!'' அவன் மோகனப் புன்னகையைச் சிந்தியவாறு கேட்க..

அவள் நடுவிரலில் போட்டிருந்த அழகான மோதிரத்தைக் கழற்றி.. அவன் விரலில் போட்டாள்!

''உன் வசதி, தகுதிக்கு இந்தப் பரிசு தகுதியாகுமா, மதி?'' என்று மதன் கொஞ்சலோடு அவளின் கழுத்துச் செயினைப் பார்த்து சொல்ல..

அவள் உடனே கழுத்தில் அணிந்திருந்த ஏழுபவுன் சங்கிலியை அவிழ்த்து அவன் கழுத்தில் அணிவித்தாள்!

''உனக்கு ஏதாவது பரிசு வாங்கி தரணும்ன்னா கையில காசில்லே!''

மதிவதனா நொடி கூட தாமதிக்காமல் அண்ணன் கொடுத்த பாக்கெட் மணியில் சேமித்து வைத்திருந்த.. பத்தாயிரத்தை கொண்டு வந்து நீட்டினாள்.

''என் மதின்னா மதிதான்!'' என்று மதன் அவளை இழுத்து முத்தமிட்டான்.

அவள் கொடுத்த பத்தாயிரத்தைவிட... அவன் கொடுத்த அந்த முத்தம் பெரிதாய் தெரிந்தது, மதிவதனாவிற்கு!

பிறகு உணவு உண்டுவிட்டு தரகரோடு, ராகுலோடு மதன் பண்ணையைச் சுற்றிப் பார்க்க சென்றான்.

அவன் தாய் காட்டிய அறையில் சுருண்டு படுத்துவிட... நித்யாவிற்கு அந்த அம்மாவைப் புரிந்து கொள்ள முடியவில்லை!

சிவகாமியம்மாளின் முகத்தில் மலர்ச்சியில்லாமல் போனதற்கு என்ன காரணமாய் இருக்கும்?

மூத்த தாரத்து பிள்ளைக்கு இப்படி ஒரு பேரதிர்ஷ்டமா என்று



பொறாமையால் அந்த அம்மாள் இப்படி வாடி, வதங்கி, சுரத்தில்லாமல் இருக்கிறாளா? என்றெல்லாம் நித்யாவின் மனதில் கேள்வி எழுந்தது!

கதவு தட்டப்பட.. மதிவதனா வந்து கதவைத் திறக்க... சோகமே உருவாய் இளங்கோ நின்றிருந்தான்!

மதன் கொடுத்துவிட்டுப் போன முத்தத்தில் சொக்கிப்போயிருந்த மதிவதனா... இளங்கோவைக் கண்டதும் நிகழ் உலகத்திற்கு வந்தாள்.

''என்ன இளங்கோ?'' என்று கேட்டாள்

''மதனைத்தான் திருமணம் செய்துக்கப்போறீயா?'' என்று கேட்டான்.

''ஆமா!''

''மதன் வேண்டாம், மதிவனதா! மதனைப் பார்த்தால் நல்லவனாய் தெரியலே!''

''காமாலைக் கண்ணனுக்கு கண்டதெல்லாம் மஞ்சளாத் தெரியுமாம்! அதுபோல இருக்கு நீங்க சொல்றது!

''இல்ல மதனா! அவரைப் பார்த்தால் கெட்டவனா, அயோக்கியனா இருப்பார்ன்னு தோணுது! அவர் முகத்துல கள்ளம், கபடு, சூது, வாதுன்னு நிறைஞ்சிருக்கு! பேச்சில பொய் இருக்கு! செயற்கைத்தனம் நிறைஞ்சிருக்கு, அவர்கிட்ட! எனக்கு மனிதர்களைப் பார்த்தவுடன், அவர்களின் பேச்சு, நடத்தையைக் கொண்டு கணிக்க முடியும்''

உங்களை நிராகரிச்சுட்டு.. அவரைக் கட்டிக்கப் போறேங்கிற பொறாமையில அவரைப் பற்றி இல்லாததும், பொல்லாததும் சொல்றீங்களா? பெரிய மண்ணாங்கட்டி கணிப்பு கணிக்கறீங்களா? மரியாதையா உங்க வேலையைப் பார்த்துட்டுப் போங்க!'' என்று மதிவதனா சீறினாள்.

''மதன் வேண்டாம்! வேற நல்ல மாப்பிள்ளையைக் கட்டி நீ வாழணும்! உன் மகிழ்ச்சிதான்... என் காதல் தோல்வியை மறக்க செய்யும் மருந்து, வதனாநான் சொல்றதைக் கேளு, வதனாம்மா! பிளீஸ்..!''

அவளுக்கு அவன் பேச்சு ஆத்திரத்தைக் கொடுக்க... அவன் முகத்தில் அறைவதற்கு பதிலாய்.. கதவை அறைந்து சாத்தினாள்.!

மூடிய கதவையே வெகு நேரம் கனத்த இதயத்துடன் நோக்கிக் கொண்டிருந்தான், இளங்கோ!

13

நான் நல்லவனாய் இருப்பது
உனக்கு பிடிக்கவில்லையென்றால்
கெட்டவனாய்...
கொடும் கொலைகாரனாய்..
மாறக்கூடத் தயார்!
ஏனென்றால்,
உன் சொல்லே எனக்கு வேதம்!

அன்று இரவு மதன், அவன் தாய் தரகர் மூவரும் பங்களாவிலேயே

தங்கிவிட்டனர்.

நித்யா, இளங்கோவைத் தவிர மற்றவர்கள் மதனைத் தூக்கி வைத்து கொண்டாடினர்.

அதைப் பார்க்க பார்க்க இளங்கோவிற்கு உள்ளம் குமுறியது! கொந்தளித்தது! இதயத்தை யாரோ கத்திகொண்டு அறுத்து, தூக்கி தூரே வீசியதுபோன்று உள்ளுக்குள்ளே வீறிட்டழுதான்!

அந்த வீடு அவனுக்கு நரகமாய் தோன்றியது! அந்த வீட்டு உணவு விஷமாய் உள்ளுக்குள்ளே இறங்க மறுத்தது! அந்த வீட்டு படுக்கை முள்படுக்கையாய் குத்தியது!

மதனை அனைவரும் தேவனாய், ராஜகுமாரனாய் தூக்கி வைத்து கொண்டாட... இளங்கோவிற்கு சாத்தானைப்பார்ப்பதுபோல தோன்றியது!

'மதன் சரியாவன் அல்ல' என்று அவன் உள்ளுணர்வு எச்சரித்ததை... மதிவதனாவிடம் வெளிப்படுத்தியதை பெறாமை அது இது என்று அவனையே குற்றம் சாட்டி... கூர்ஈட்டி வார்த்தைகளை உபயோகப்படுத்த பெரிதளவு உடைந்து விட்டான் இளங்கோ!

நித்யா... அவன் அறைக்கு வரும் ஓசைக்கேட்டு கண்களை இறுக மூடிக்கொண்டு தூங்குவதுபோல பாவனைச் செய்தான்!

''இளங்கோ... தூங்கிட்டியா என்ன?'' என்று அவன் அருகில் அமர்ந்து உலுக்க...

''என்ன விஷயம், சொல்லுக்க?''

''நன்றி மறந்த ஜனங்கடா, இந்த வீட்டு மக்கள்! இந்த அளவு மதிவதனா பேச்சைக் கேட்டுட்டு மதனை தாங்கு தாங்கென்று தாங்குவாங்கன்னு நான் நினைக்கலே! அவன் என்னவோ ரொம்பநாள் பழகினவன் போல மாமாவை அங்கிள்ன்னு சொல்றான்! என் வீட்டுக்காரரை மச்சான்னு கூப்பிடறான்!..

அந்த மதிவதனா குட்டியை தனியே தள்ளிட்டு போய் என்ன மாயம் செய்தானோ... அவ அந்த அளவு மயங்கிப்போய் கிடக்கறாள்..!...

மதன் நல்லவன் போல தெரியலே, இளங்கோ! அதை நாம சொல்லப்போனால்... உன் தம்பிக்கு கட்டிக்குடுக்கலேன்னு கட்டுக்கதை கட்டறியாடின்னு அந்த மனுசன் கத்துவார்! எகிறுவார்!..

நமக்கேன் இளங்கோ வம்பு! அதான் வாயை மூடிட்டு இருக்கேன்! நான் பேசறதைக் கேட்கறீயாடா....?''

''ம்...ம்... சொல்லு?'' என்று அரத்தே இல்லாமல் சொல்ல நித்யா தொடர்ந்தாள்!

''மதியானம் என்னடான்னா ராஜா நகர்வலம் போறாப்போல காடு, கழினி, பண்ணைன்னு சுத்திப்பார்க்க

கிளம்பிட்டன்! இன்னும் என்னென்ன, எங்கெங்கே சொத்து இருக்குன்னு சி.பி.ஐ. மாதிரி விசாரிக்கிறான்!...

இவங்களது வெள்ளிமலையில் தோட்டத்தோடு கூடிய பங்களா...கள்ளக்குறிஞ்சியில் வாடகைக்கு விட்டிருக்கும் காம்பளக்சுன்னு இருக்குற அத்தனையையும் ஒப்பிக்கறங்க! பொண்ணு



பார்க்க வந்தோமா...

திரும்பி கிளம்பினோமான்னு இல்லமால்... எவன்டா பொண்ணு வீட்டில் நீட்டி முழுக்க ராத்திரி தங்கவா...? எனக்கு எதுவுமே பிடிக்கலே, இளங்கோ! என்று நித்யா பொறுமினாள்.

''அக்கா... எனக்கு தூக்கம் வருது!''

''பொய் செல்லாதே, இளங்கோ! உன்னாலே துங்க முடியாது! உன் மனசு உடைஞ்சுபோய் கிடக்குது!''

''என் மனசு நல்லாதான் இருக்கு! உடையவும் இல்லை...!'' வெளிக்காட்டி கொள்ளாமால் பேசினான்.

''நான் இப்போ சொல்றதை நீ கேட்கணும், இளங்கோ! சீக்கிரமே கல்யாணம் பண்ணிக்கணும்!''

''மதிவதனா மேல நான் வச்ச நேசம் இன்னும் மறையலே! அவள் ஏற்படுத்தின ரணம் இன்னும் காயலே! அதுக்குள்ள கல்யாணமா? என்ன விளையாடறியா,,,?'' என்று இளங்கோ சீறினான்.

'' அவளைவிட நல்ல பெண்ணா பார்க்கணும், இளங்கோ!''

''வாயை மூடு!''

''அவள் கழுத்துல தாலி ஏறுவதற்கு முந்தி...நீ வேற பெண்ணோட கழத்துல தாலிகட்டிடணும், இளங்கோ! உன் மனைவியுடன் கைகோர்த்துட்டு நடக்கணும்! அவ முன்னாடி நீ சந்தோசமா வாழணும்! அதைகண்டு இந்தக் குடும்பம் மொத்தமும் பொறமையால் வெந்து பெருமூச்சி விடணும்!''

''ஏன் அரக்கி மாதிரி கத்திட்டு இருக்கே! நீ போகப் போறீயா, இல்லையா?'' இளங்கோ பெரும் கோபத்தில் கத்தினான்.

நாளைக்கே உனக்கு பெண் தேடப்போறேன்!

மதிவதனாவை நினைச்ச மனசை சுத்தமா கழுவி துடைச்சி... என்னோட நீ புறப்பட்டு வரணும்! அக்கா பிரவாதக்காரி நினைச்சதை நடத்தி பழகினவன்னு உனக்கு தெரியும்! நீ தூங்கு... நான் வரேன்!''

நித்யா வேக வேகமாய் வெளியேறினாள்.!

''ஒன்றே செய்-நன்றே செய்-இன்றே செய் னு சொன்னதுக்குத் தலைவர் டென்ஷன் ஆயிட்டார்... ஏன்?''

''தேர்தலில் தோற்றால் அரசியலுக்கு முழுக்குப் போட்டுடுவேன்"னு தலைவர் சொன்னப்ப இப்படிச் சொன்னால் டென்ஷன் ஆக மாட்டாராக்கும்?''

-எம்.அசோக்ராஜா, திருச்சி.



நித்யா பிடிவாதக்காரி! பெண்ணைக் கொண்டு வந்து நிறுத்தி கட்டுடா தாலியை என்று சொன்னாலும் சொல்லுவாள்!

தாயாய் தாங்கிக் கொண்ட இந்த தேவதையின் பேச்சை மீறி நடக்க முடியாது! அப்படியே மீறினாலும் அவள் உயிரோடு இருக்க மாட்டாள்!

இந்த இக்கட்டான சூழ்நிலையில் இருந்து தப்பிக்க வேண்டுமானால்... இந்த வீட்டில் இருக்கக் கூடாது!

அடுத்ததாய் மதிவதனாவை கல்யாண கோலத்தில் அடுத்தவன் மனைவியாக பார்த்தால் ஒருவேளை அவன் உயிர் நின்று போனாலும் போகும்!

இந்த வீட்டை விட்டு புறப்பட வேண்டிய நேரம் வந்துவிட்டது!

மணி பதினொன்று இருக்கும்! இளங்கோ புறப்பட்டு விட்டான். தோட்டத்தில் யாரோ பேசும் குரல் கேட்டது. குரல் வந்த திசையை நோக்கிப் போனான். மதன் தான் யாரிடமோ போனில் பேசிக் கொண்டிருந்தான்.

''மச்சி... தரகர் சொன்னப்போ நான் நம்பலே. ஏதோ சுமாரான குடும்பம்னு நினைச்சி வந்தேன். மலையடிவாரத்தில் பெரிய கொழுத்த பணக்கார குடும்பம் மதிவதனா வீடு.

சுமார் ஐந்து ஏக்கர் நிலப்பரப்பை வளைச்சி போட்டு, காம்பவுண்ட் சுவர் எழுப்பி, உள்ளே பிரமாண்டமான பங்களா கட்டியிருக்காங்க!...

மதிவதனா காபி எடுத்துட்டு வந்தா பார்... ஏதோ தேரோட்டத்துல போன அலங்கரிச்ச அம்மன் தான் வழி தவறி வந்திடிச்சோன்னு நினைச்சேன். அந்த அளவு தங்க, வைர நகைகளை உடல் முழுக்க அள்ளி போட்டுட்டு வராள்.

பெண்ணு எப்படியா? அழகுதான்! லட்சணம் தான்! கோயில்ல இருக்கிற சிலை போல பெருத்த மார்பும், சிறுத்த இடையும்னு சும்மா சும்மா டாப்பா இருக்கா. ஆனால் பெரிய குறை, என் நிறத்துல பத்து பர்சன்ட் தேறமாட்டா. மாநிறம் தான்.

அந்த கருப்பிக்கு என்னை ரொம்ப பிடிச்சி போச்சுடா.

தனியா அழைச்சிட்டுப் போய், அய்யாவோட மன்மதக்கலைகளை ஒவ்வொன்றா காட்ட... அப்படியே மயங்கி என் கால்ல விழுந்து கிடக்கா! நான் காலால் சொல்லும் வேலையைத் தலையால் செய்வாள். நான் உட்காருன்னா உட்காருவா. நில்லுன்னா நிப்பா.

எனக்கு ஏதாவது பரிசு குடுன்னு கேட்க... மோதிரத்தை தந்தாள். உன் வசதிக்கு இந்தப் பரிசு தகுமான்னு கேட்க... ஏழு பவுன் தங்கச்சங்கிலியை கழற்றி என் கழுத்துல போட்டுட்டாள். அப்புறம் பத்தாயிரம் பணத்தையும் நைசா பேசி வாங்கிட்டேன். அந்த அளவு என் மேல் மோகம்... மயக்கம்... காதல்!...

செம பெரிய இடம், மச்சி! தொழில் வச்சி தரேன்னு சொல்லிட்டாங்க! இனி உங்ககிட்ட எல்லாம் ஐந்துக்கும், பத்துக்கும் நான் பிச்சை எடுக்கத் தேவையில்லை...

''சப்ப பிகரை' எல்லாம் நீ ரொம்ப அழகு! தேவதைப் போல



இருக்கே. உன்னை உயிருக்குயிரா விரும்பறேன்னு பொய் சொல்லி... அவளுங்க செய்யற செலவுக்காக நாயா பேயா அலையத் தேவையில்லை.

மச்சி... நான் வீடு, தொழில், மனைவின்னு பெரிசா செட்டில் ஆகப் போறேன்! நான் எங்கே இருந்து பேசறேனா... என் மாமனார் வீட்டு பங்களாவுல இரவு தங்கிட்டேம்ப்பா...

மாமனாரும், மச்சானும் என்னை மகாராஜா போல பார்க்கறாங்க. கவனிக்கிறாங்க. எனக்கு எங்கோ அதிர்ஷ்ட மச்சம் இருக்குடா! அதான் இதுபோல பெரிய இடம் விழுந்து... சரணம் செய்துட்டு பொன், பொருள், சொத்தோட பெண் கொடுக்க வராங்க.

மச்சி... நாளை பேசலாம்டா. பகல்ல பக்கம் பார்த்து பேசு. ராத்திரியில் அது கூட பேசாதேன்னு ஒரு பழமொழி இருக்கு. நான் இப்படி பேசறதை யாராவது கேட்க நேர்ந்தால் என் கதி... அதோ கதி தான்! நான் போனை வச்சிடறேன், மாப்ளே'' என்று போனை வைத்தவனின் எதிரில் இளங்கோ நிற்க... மதன் விதிர் விதிர்த்துப் போனான்.

''ஏய் பொறம்போக்கு. பொறுக்கி, உன்னை இந்த வீடு ரொம்ப நம்புதுடா. எங்க வதனா உன்னை உயிரினும் மேலாய் விரும்பறாடா. இப்படிப் பட்டவங்களை ஏமாற்ற எங்கேயோ இருந்து வந்திருக்கியே. உன்னை விட மாட்டேன்டா. இருடா... இப்பவே எல்லோரையும் எழுப்பி உன் சாயத்தை வெளுக்க வைக்கறேன்'' என்று ஆக்ரோஷத்தோடு நடந்த இளங்கோவன் வழியை மறித்து நின்றான், மதன்.

''போடா... போய் சொல். நீயும் சொல்லு. நானும் சொல்றேன். அவங்கயெல்லாம் யார் பேச்சை நம்பறாங்கன்னு பார்ப்போம்'' என்று மதன் விவகாரமாய் நகைக்க...

''நீ என்னடா சொல்வே?'' என்று இளங்கோ மதனின் சட்டையைப் பிடிக்க...

''அதை நான் சொல்ல வேண்டிய இடத்தில் சொல்லிக்கிறேன். முதல்ல என் சட்டையை விட்டு கையை எடுடா'' என்று கத்த...

அந்த வீடு விழித்துக் கொண்டது. அங்கே அனைவரும் கூடி விட்டனர்.

''இளங்கோ... மாப்பிள்ளை என்ன பிரச்சனை?'' இருவரையும் பார்த்து சக்திவேல் கேட்க...

''மாமா... இவன் அயோக்கியன், கெட்டவன். மதிவதனாவை இந்த ஏமாற்றுக்காரனுக்கு கொடுக்க வேண்டாம். இவனை வெளியே போகச் சொல்லுங்க'' என்று இளங்கோ வெறியோடு கத்த...

''இளங்கோ என்ன உளர்றே? மாப்பிள்ளை என்ன நடந்தது?''

மதனைப் பார்த்து ராகுல் கேட்டான்.

''மச்சான்... இவன் மதிவதனாவை உயிருக்குயிரா காதலிக்கிறானாம். மதிவதனா இவனுக்கு வேண்டுமாம்! எனக்கு சொந்தமான மதிவதனாவை எங்கோ இருந்து வந்த நீ களவாடிட்டு போக பார்க்கறியான்னு கேட்கறான்'' மதன் பொய்யை அவிழ்த்து விட...

''அத்தான் இவன் பொய் சொல்றான். இவன் பேச்சை நம்பா

தீங்க!'' என்று இளங்கோ கத்த...

''இல்ல மச்சான்! நான் சத்தியமா பொய் சொல்லலை. மரியாதையா மதிவதனாவை எனக்கு விட்டு கொடுத்துட்டு திரும்பிப் பார்க்காமல் ஓடுன்னு மிரட்ட... நான் முடியாதுன்னு சொல்ல... உன்னைக் கொன்றால் தான் மதிவதனா எனக்கு கிடைப்பாள் என்றால், அதையும் நான் செய்துடறேன்டான்னு என் கழுத்தை நெரித்து கொல்ல பார்க்க, அதுக்குள்ள நீங்களெல்லாம் வந்ததால் நான் உயிர் பிழைச்சேன்''

நித்யாவைத் தவிர அந்த வீட்டு மக்கள் அத்தனைப் பேரும் அவன் பேச்சை நம்பினர்.

''மதிவதனாவின் திருமணத்தை நிறுத்த... நீ இவ்வளவு மட்டமான செயல்ல ஈடுபடுவேன்னு நான் நினைக்கலே. உன்னை பதினைந்து வயதிலிருந்து காப்பாற்றி, படிக்க வைத்து பராமரிக்கறதுக்கு நீ காட்டற நன்றிக்கடன் இதுதானா?'' என்று சக்திவேல் அய்யா சீறினார்.

''மாமா... மாமா... இல்ல மாமா... என்னை நம்புங்க, மாமா என்று இளங்கோ கெஞ்ச...

''நிறுத்துடா. உனக்கு நாங்க என்னடா கெடுதல் செய்தோம்? என் தங்கைக்கு உன்னைப் பிடிக்கலே! அதனால் அவளுக்கு பிடிச்ச மாப்பிள்ளையை கட்டி வைக்க நினைத்தோம். அது தப்பா? நீ இனி ஒரு நிமிடம் இங்கே இருக்கக்கூடாது. வெளியே போ'' ராகுல் வெளிவாசலை நோக்கி கை காட்ட... இளங்கோ நொறுங்கிப் போனான்.

''என்னங்க பேசறீங்க? இவன் நீங்க வளர்த்த பிள்ளை! பொய் சொல்வானா? அவனை நீங்க புரிஞ்சிகிட்டது, அவ்வளவு தானா?'' என்று நித்யா தலையில் அடித்துக் கொண்டு அழுதாள்.

''உன் நீலிக்கண்ணீரை நிறுத்துடி.. என் தங்கையின் திருமணத்தை நிறுத்த... இது நீ சொல்லிக் கொடுத்த ஐடியாவா? நீ கதை, வசனம் எழுதி நடத்தற நாடகமா?''

''அய்யோ... அய்யோ... என்ன பேசறீங்க? இளங்கோ... இளங்கோ... இவங்க மனசெல்லாம் கல்லாயிடுச்சிடா! இவங்ககிட்ட ஈரத்தை எதிர்பார்க்கறது தப்பு. நீ எங்காவது போயிடு, இளங்கோ! நீ கிளம்புடா. இளங்கோ ''நித்யா விழுந்து புரண்டு அழுதாள்.

''அண்ணா... இளங்கோ மதியம் வந்து...'' என்று மதிவதனா, இளங்கோ அவளைத் தனியே சந்தித்துப் பேசியதை சொல்லி விட்டு...

''அண்ணா... இந்த இளங்கோ இங்கே இருக்கறது என் மதனுக்கு ஆபத்து. இளங்கோவுக்கு இருக்கிற காதல் வெறியில மதனை கொன்றாலும் கொன்றுடுவார்ண்ணா. இவரை அடிச்சி விரட்டுங்கண்ணா. இவர்கிட்ட இருந்து என் மதனைக் காப்பாற்றி கொடுங்கண்ணா!'' என்று மதிவதனா அழுதாள்.

''நாங்க உன் கழுத்தை பிடித்து வெளியே தள்ளறதுக்கு முன்னே நீயே போறீயா, இல்லையா?''

ராகுல் தான் இவ்வாறு சொல்லி கத்தினான். ராகுல் தனது அக்காவை திரும்பி திரும்பி பார்த்துக் கொண்டே வெளியேறினான்.

யாருக்கும் தெரியாமல் இங்கிருந்து வெளியேற நினைத்தவனை...



இப்படி திருடனைப் போல... மாபெரும் குற்றம் செய்வதனைப் போல விதி வெளியேற்றியது.

## 14

**நான் உன் அருகிலிருந்தும்**
**என்னைத் தெரியாமல் போனதேன்?**
**நீ என் அருகில் இல்லையென்றாலும்**
**என் நினைவில்**
**எப்போதும் நீ மட்டும் தான்!**

மதன், மதிவதனா இருவருக்கும் திருமணம் செய்ய மணநாள் குறிக்கப்பட்டது.

பத்திரிகை அடிக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டது.

தாலி, கூரை புடவை எடுக்கப்பட்டது.

மாப்பிள்ளை மதனோ... கைக்கு பெரிய பிரேஸ்லெட், கழுத்துக்கு தடித்த சங்கிலி, ஒவ்வொரு விரல்களுக்கும் தங்க, வைர கற்கள் பதித்த மோதிரம் என கேட்டுக் கூசாமல் வாங்கிக் கொண்டான்.

வீட்டோடு வளர்ந்த நல்ல மாப்பிள்ளையை அடிச்சி துரத்திட்டு... இப்படி ஊர் பேர் தெரியாததால் சொந்தம் பந்தம் யாருமில்லாமல்... சொத்து, சுகம்னு எதுவுமில்லாமல் இருக்க, ஒரு அன்றாடம் காய்ச்சிக்கு கண்ணுக்கு கண்ணாக வளர்த்த பிள்ளையை கட்டி கொடுக்கப் போவே?'' என்று சக்திவேலின் நண்பர்கள் குறைப்பட்டார்கள்.

''உனக்கென்ன அறிவில்லையா...? இல்ல உங்கப்பனுக்கும் நல்லது எது? கெட்டது எது? கவுரவம், மரியாதைன்னா என்னன்னு தெரியாமல் போயிடிச்சா?''

ஒரு சின்ன பெண்ணுக்கு பிடிச்சு போச்சின்னு அந்த மாப்பிள்ளையோட குலம், கோத்திரம், ஜாதி, மதம் ஆராயாமல் பெண் கொடுக்க றீங்களே' என்று ராகுலையும் பார்த்து கேள்வி மேல் கேள்வி கேட்டனர்.

நித்யா தனது தம்பி எங்கோ போனான். என்ன ஆனான்? என்ற செய்தி தெரியாமல் தவித்துப் போனாள்.

தம்பியைப் பற்றிய சோகத்தில் அடிக்கடி உடல் நலக்குறைவு ஏற்பட்டு படுத்து விட்டாள். அவள் முடங்கிப் போனாலும் அங்கே எந்த வேலையும் நிற்காமல் மளமளவென நடந்தேறியது.

மணநாளும் வந்தது!

மதிவதனா ஆயிரம் கனவுகளோடும், கற்பனைகளோடும், ஆசைகளோடும் மதனின் தாலியை வாங்கிக் கொண்டாள்.

ஊரே திரண்டு வந்திருந்தாலும், ஒருவருக்குமே அந்தத் திருமணத்தில் மகிழ்ச்சியில்லை.

ஏனென்றால் இளங்கோ அந்த மக்களுடன் அந்த அளவு இரண்டற கலந்து பழகியிருக்கிறான். அந்த மக்களுக்கு ஆபத்தான காலத்தில் உதவியிருக்கிறான். அவர்களின் சோகத்தை தன் சோகமாய் எண்ணி பங்கிட்டு ஆறுதல் கூறியிருக்கிறான்.

இரவு! முதலிரவு அறை!

மதன் பட்டு வேட்டி சட்டையில் அமர்ந்திருந்தான்.

எளிய அலங்காரத்தில் மதிவதனா பால் செம்போடு உள்ளே வந்து... ஸ்டூலில் வைத்து விட்டு, அவன் காலில் விழுந்து வணங்க... அவளைத் தூக்கி கட்டிலில் அமர வைத்து, எதிரே அமர்ந்து அவளையே நோக்கி கொண்டிருந்தவன் சொன்னான்.

''நீ அதி பேரழகி. தேவதையை ஒத்த அழகி, நீ! உன்னிடம் ஏராள மான அழகு கொட்டிக் கிடக்குது. ஒரு பேரழகியின் கழுத்தில் நான் தாலி கட்டி, என் மனைவியாக்கியிருக்கிறேன் என்று நினைக்கும்போது, என் உள்ளம் பூரிக்குது, மதி! இவ்வளவு அழகும் எனக்கே எனக்குன்னு எண்ணும் போது ரொம்ப இன்பமா இருக்கு, இதயத்துக்கு!''

அவன் பேசப்பேச... அவன் பேச்சில் மயங்கிப் போனாள் பின் கேட்டாள்.

''நீங்க என் அழகை மிகைப்படுத்தறாப் போல இருக்கு! மதன் நீங்க ரொம்ப சிவந்த நிறம் கொண்டவர்! நான் கலர் குறைவாச்சே! கறுப்பாச்சே!'' என்று மதிவதனா முகம் வாடிச் சொல்ல...

''கறுப்பு தான் எனக்கு பிடிச்ச கலரு...'' என்று ராகத்தோடு பாடி... மதன் அவளை அணைத்துக் கொண்டான்.

அவள் முகமெங்கும் முத்தமிட்டான்!

அந்த மோகன அணைப்பிலும், தித்திப்பான முகத்ததிலும் மதிவதனா நெகிழ்ந்து உருகிப்போனாள்.

மதன் மதிவதனாவை புது உலகிற்கு அழைத்துப் போனான். மதிவதனா மகிழ்ந்து அவனோடு இரண்டற கலந்து கரைந்து போனாள்.

அதற்கு பிறகு வந்த நாட்களில் சாப்பிடுவதும், மதிவதனாவை சந்தோஷப்படுத்துவதுமே தனது வேலை என்பது போல மதன் மதிவதனாவை கொஞ்ச நேரம் கூட விட்டுப் பிரியாமல் இருந்தான்.

மதனின் செயலைக் கண்டு சக்திவேல், ராகுல் மனதில் இருந்த கலக்கம், நெருடல் காணாமல் போனது.

தேனிலவுக்காக வெள்ளி மலைக்கு புறப்பட்டனர். இயற்கை அன்னையின் மடியில், எழில் கொஞ்சும் வெள்ளி மலையின் பசுமையினூடே இருந்த அவர்களின் தோட்டத்தையும், கெஸ்ட்ஹவுஸையும் பார்த்து மலைத்துப் போனான் மதன்!

குளிருக்கு அடக்கமாய் நாள் முழுக்க மதனின் மார்பில் இதமாய் பரவி கிடப்பது பரம சுகமாய் இருந்தது, மதிவதனாவிற்கு!

ஒரு மாலைப் பொழுது தோட்டத்தில் இருந்த ஊஞ்சலில் மதன் அமர்ந்திருக்க, அவன் மடியில் தலை வைத்து நீட்டிப் படுத்திருந்தாள், மதிவதனா!

அவளின் முடியை கோதி விட்டு... கன்னத்தை, உதட்டை நிமிண்டி விளையாடிக் கொண்டிருந்தவன் கேட்டான்.

''மதி... நான் இப்படியே சோம்பேறியா எத்தனை நாட்களுக்கு உட்கார்ந்திருப்பது? நான் ஏதாவது தொழில் செய்து, உழைத்து, நம் வருங் காலத்துக்கு ஏதாவது சேமிக்க வேண்டாமா?



''நீங்க எதுக்கு உழைக்கணும்? வேலை செய்யணும்? நமக்கிருக்கற வசதிக்கு உழைச்சி சாப்பிடணும்னு என்ன அவசியம்?'' என்று மதிவதனா கேட்க...

''நமக்கிருக்கிற வசதியா? என்ன விளையாடறியா? எனக்கிருக்கற ஒரே சொத்து என் மனைவி நீதான்! அப்புறம் என் கை, கால்கள் தான். நாம இப்போ வசிக்கறது ஒண்டு குடுத்தனம்! தின்ற சோறு ஓசி! போட்டுக்கிற உடை உங்கண்ணா வாங்கிக் கொடுத்தது. செலவுக்கு காசு வேணும்னால் உங்கண்ணன், அப்பாகிட்ட கையேந்தறோம். அந்தப் பங்களாவை உன் அண்ணன் வீடுன்னு தான் சொல்வாங்க. உனக்கு திருமணமான மறு நிமிடமே அந்த வீட்டை உரிமை கொண்டாடக் கூடாது. அது உனக்கு இனி பிறந்த வீடு. இனி உனக்கு நிரந்தரம் புகுந்த வீடு தான்!

உனக்கு 'பூம்பொழில்' கிராமம் போரடிக்கலையா? ஒரு சினிமா தியேட்டர், பார்க், ஷாப்பிங்னு எங்காவது பொழுதை கழிக்க முடியுதா? எந்த நேரமும் மரமும், குளமும், ஆறும், காடும், கழனின்னு பார்த்து போரடிக்கலையா?...

நகர வாழ்க்கை நீ வாழ்ந்ததில்லை. நகர வாழ்க்கை நீ வாழ்ந்துப் பார். அது சொர்க்கம்னு தெரிஞ்சுக்குவே! வீட்டோட மாப்பிள்ளையா இருக்க சம்மதிச்சிதான் வந்தேன். ஆனால் இந்தக் கிராமத்துல இருக்கறது போரடிக்குது, மதிம்மா! மூச்சு முட்டறாப்போல இருக்கும்மா. அடுத்ததா இரவல் வீட்டுல உட்கார்ந்து சாப்பிடறதுக்கு கஷ்டமா இருக்கு, கண்ணம்மா!

சேலம் ரொம்ப நல்லாயிருக்கும், மதி குட்டி! நீ மட்டும் சம்மதிச்சி என்னோட புறப்பட்டு வந்தால் உன்னை இன்னும் சந்தோஷமா என் நெஞ்சில் வைத்து தாங்குவேன், மதி!'' அவன் உருகலோடு கூற... மதிவதனா கேட்டாள்.

''அங்கே வாடகை வீட்டுல இல்ல இருக்கணும்?''

''மதிவதனா உங்கப்பா சம்பாதிச்ச சொத்துல பாதி சொத்துக்கு உரிமைக்காரி, நீ! ஆனால் பாகம் பிரிச்சி நாம கேட்க வேண்டாம். நாம குடியிருக்க ஒரு வீடு, கார், சொந்த தொழில் செய்ய கொஞ்சம் பணம்னு வாங்கிட்டு வா, மதி! பிளீஸ்...''

அவன் கெஞ்ச...

''உங்களுக்கு எந்த தொழில் செய்ய விருப்பம்? எதில் முன் அனுபவம் இருக்கு?'' என்று அவள் கேட்க... மதன் உற்சாகமானான்.

''ஜவுளிக்கடையில கொஞ்ச நாள் மேனேஜரா இருந்தேன்! சூரத், பாம்பே, கல்கட்டா போன்ற பெரு நகரங்கள்ல துணியைக் கொள்முதல் செய்துட்டு வந்து, இங்கே பாதிக்கு பாதி விலை வச்சி விற்று, நல்ல லாபம் சம்பாதிக்கறாங்க. ஜவுளி தொழில்ல சீக்கிரம் முன்னேறலாம். நான் சொல்றது உனக்கு பிடிச்சிருக்கா, மதி?''

''எனக்கு 'பிடிச்சிருக்கு' ஆனால் அப்பாவும், அண்ணாவும் ஒத்துக்கமாட்டாங்க! என்னைப் பிரிஞ்சி அவங்களால இருக்க முடியாது. கள்ளக்குறிச்சின்னால் ஒரு இருபது கிலோமீட்டர்ல இருக்கு. அங்கே

நீங்க
நமக்கு பங்களா, ஷாப்பிங் மால் எல்லாம் வாடகைக்கு இருக்கு.
சரின்னு சொன்னால் அதை வேண்டுமானால் எனக்கு எழுதித்தரச் சொல்றேன்!''

''இந்தப் பக்கம் திருமணம் போன்ற நல்ல நிகழ்ச்சிகளுக்கு பெரும் பாலோனோர் ஜவுளி எடுப்பது சேலத்திற்கு வந்து தான், தெரியுமா, மதி? எனக்கு இங்கே சுத்தமா பிடிக்கலே! இங்க இருக்க சில சொத் துக்களை வித்து அங்கே வாங்கித் தரச் சொல். சேலத்துக்கும், பூம்பொ ழிலுக்கும் ரொம்ப தூரமில்லே. ஒரு ரெண்டுமணி நேரத்துல வந்துட லாம். நீ தினம் கூட வந்துட்டு இரவு திரும்ப நான் அனுமதிக்கிறேன். நீ முயற்சித்தால் முடியும், மதிம்மா! செய்யும்மா, பிளீஸ்...''

''முயற்சிக்கிறேன், மதன்!''

''ம்கூம்... நீ முடிச்சிக்காட்டணும்! சரியா?''

''சரி, மதன்! என்ன நம்பாமல் பார்க்கறீங்க? முடிச்சிக்காட்டறேன்! சந்தோஷமா?'' என்று சிரித்தாள் மதிவதனா.

யானைத் தன் தலையில் மண்ணள்ளி போட்டுக் கொள்வது போல... மதிவதனாவும் தன் தலையில் மண்ணள்ளிப் போட்டுக் கொள்ள தயாரானாள்.

15

*அன்பே...*
*ஆயுள் கைதியாய் இருப்பது கூட*
*சுகம் தான்,*
*உன் இதயமென்னும் சிறைச்சாலையில்!*
*உன்னை வாழ் நாள் முழுக்க கூட*
*பிரிந்திருக்க முடியும்...*
*ஆனால், மறந்திருக்க முடியாது!*
*அன்று...*

**கா**லை உணவுக்குப் பின் சக்திவேல் அய்யாவிடம் ராகுல் பண்ணையின் கணக்கு வழக்குகளை சொல்லிக் கொண்டிருந்த போது, மதி வதனா அருகில் வந்தாள்.

''வாம்மா... வந்து உட்கார்! கொஞ்ச நாளா உன் முகத்துல ஏதோ சிந்தனை ரேகை ஓடறாப் போல் இருக்கு. என்ன விஷயம், மதிவத னாம்மா?'' சக்திவேல் அய்யா கேட்க...

''எப்படி விஷயத்தை ஆரம்பிக்கறதுன்னு தெரியலேப்பா!''

''எதுவா இருந்தாலும் தயங்காம சொல்லு, மதிம்மா?'' என்று ராகுல் சொல்ல...''

''அப்பா... அவருக்கு இப்படி சும்மா உட்கார்ந்திருக்க கஷ்டமா இருக்காம். அதனால் தொழில் செய்ய விரும்பறார். ஜவுளி தொழில்ல அவருக்கு முன் அனுபவம் இருக்காம். நீங்க அதை ஏற்பாடு செய்து தந்தால் நல்லாயிருக்கும்''

''உடனே செய்யறேன்! கள்ளக்குறிச்சியில நம்ம இடத்துல வாட

கைக்கு இருக்க "ரம்யா டெக்ஸ்டைல்ஸை காலி பண்ண சொல்லிடறேன்! அந்த இடத்துல ஜவுளிக்கடை வைத்து தரேன்! சரியா?" என்று சக்திவேல் அய்யா கேட்க...

"அப்பா... அவருக்கு இங்கே தொழில் செய்ய விரும்பல! சேலத்துல செய்ய விரும்பறார்" என்று சொன்ன அடுத்த நொடி ராகுல் கோபத்தில் சீறினான்.

"ஏய்... என்ன... என்ன சொன்ன விளையாடறானா, அவன்? உன்னை பிரிச்சிட்டு போக நினைக்கறானா? என்ன தைரியம் இருந்தா அவன் பேச்சை கேட்டுட்டு வந்து அப்பாகிட்ட உளறுவே? ம்?"

"ராகுல் நீ சும்மா இரு! நான் மதிம்மாகிட்ட பேசிக்கிறேன்!" என்று ராகுலைப் பார்த்து சொன்னவர்...

"மதன்... வீட்டோட மாப்பிள்ளையா இருக்க சம்மதிச்சி வந்திருக்கார். இப்போ சேலத்துல தொழில் வச்சி கொடுக்க சொன்னால் என்ன அர்த்தம்? அதெல்லாம் முடியாது, மதிவதனா! கள்ளக்குறிச்சியில அந்த தொழிலை ஏற்படுத்தி தரேன்! செய்யச் சொல்!

"அவருக்கு இங்கே விருப்பம் இல்லை!"

"அவருக்குன்னு தனியான விருப்போ, வெறுப்போ கூடாது, மதிவதனா! எங்க விருப்பம் தான் அவர் விருப்பமா இருக்கணும்!" என்று சக்திவேல் அய்யா கட்டளையாய் சொல்ல...

"என்னப்பா இது பேச்சு?"

"உன்னைப் பிரிந்து எங்களால் இருக்க முடியாது"

"அப்பா... அவர் என்ன உங்கள் அடிமையா? உங்கள் கைப்பாவையா? நீங்கள் சொல்வதற்கெல்லாம் தலையாட்ட!" என்று கோபமாய் மதிவதனா கேட்கவும்...

"எதிர்த்து பேசறியே, மதிவதனா? இதை எப்போ கத்துட்டே?" என்று சக்திவேல் சோகமாயச் முகம் வாடி கேட்க.

அங்கு காபி டிரேயோடு வந்த நித்யா சொன்னாள்.

"இவள் விருப்பத்துக்கு நீங்களெல்லாம் மதிப்பு கொடுத்திங்க. உங்க விருப்பத்துக்கு இவள் மதிப்பு கொடுப்பாள்னு எப்படி எதிர்பார்க்கலாம்! கிளிக்கு ரெக்கை முளைச்சால் பறக்கத்தானே செய்யும்? இவள் இப்படி உங்களை எதிர்த்து பேச காரணம். இவள் கழுத்துல தொங்கிட்டு இருக்க தாலி தான் காரணம். தாலி கட்டியவன் சொல்லிக் கொடுத்தாப்போல பேசறாள்.

மாமா... இவள் மேல் எந்த தப்புமில்லே! அந்த மதன் சொல்லிக் கொடுத்ததை அப்படியே ஒப்புவிக்கிறாள்" என்று நித்யா காரசாரமாய் சொல்ல... மதிவதனாவிற்கு கோபம் வந்து விட்டது.

"அண்ணி... நான் என் அப்பா, அண்ணாகிட்ட பேசிட்டு இருக்கேன். இடையில நீங்க எதுக்கு நுழைஞ்சி கொளுத்தி போடறீங்க? உங்க தம்பியை நான் கட்டிக்க மறுத்துட்டதுக்காக பழிவாங்க நினைக்கறீங்களா?" என்று சீற...

"நான் வளர்த்த பிள்ளை, நீ! உன்னை பழிவாங்கணும்ங்கிற நினைப்பு ஒரு நாளும் என் எண்ணத்துல உதிச்சதில்லை. உன்னைப்



போல ஏறின ஏணியை எட்டி உதைக்கிறவள், நான் இல்லை! தாயா தாங்கிகிட்ட மனுஷியோட இதயத்தை வார்த்தையால நோகடிக்கிறியேடி!" என்று வருத்தமுடன் நித்யா கூற...

"அண்ணி... நீங்க பேசறது சரியில்லே! நீங்க தான் என்னை வார்த்தையால நோகடிக்கறீங்க. என்னைக் கோபப்படுத்தாதீங்க. நீங்க என் விஷயத்துல தலையிடாதீங்க. தூர போங்க" உறுமினாள்.

"நான் ஒண்ணும் சொரணைக் கெட்ட ஜென்மமில்லே. வளர்த்த பாசத்துல இதை மட்டும் சொல்லிட்டு போயிடறேன். அந்த மதன் நல்லவனா தெரியலே! படமெடுக்கற பாம்பைப் பார்க்கறாப்போல... பதுங்கற புலியைப் பார்க்கறாப்போல... தந்திரம் செய்யற காட்டு நரியைப் போல தோற்றமளிக்கிறான்.

நீ இங்கே இருந்தால் உன் அப்பா, அண்ணனுக்காகவாவது பயந்து உன்னை நல்லா வச்சிக்குவான்! அவன் பேச்சைக் கேட்டுட்டு, நீ எங்களையெல்லாம் பகைச்சிகிட்டுப் போனால்... பின்னாடி நீ அனுபவிப்பேடி, மதிவதனா...! இதை நான் உன் மேல உள்ள அக்கறையால சொல்றேன்! கேட்கறதும், கேட்காததும் உன் விருப்பம்"என்று அறிவுறுத்தி,நித்யா அங்கே நிற்காமல் சமையற்கட்டிற்கு சென்று விட்டாள்.

மதிவதனா தொடர்ந்தாள்.

"அப்பா...உங்க மாப்பிள்ளைக்கு இங்கிருக்க பிடிக்கலையாம்! கிராமம் போரடிக்குதா! அதனால்தான் சேலத்துக்கு போகப் பிரியப்படறார்!

"அவர் போக பிரியப்படறார்! நீ என்ன நினைக்கறே?"

"ராமன் இருக்கற இடம் தானே சீதைக்கு அயோத்தி! அவரை பிரிந்து என்னால் இருக்க முடியாதுப்பா!"

"அப்போ நீ எங்களை பிரிந்து போக நினைக்கிறே? அப்படித் தானே?"

"அவர் போக நினைப்பதால்தான்!"

"உன்னைப் பிரிந்து எங்களால் வாழ முடியாது, மதிம்மா!"

"அவரைப் பிரிந்து என்னால் வாழ முடியாது"

"எங்களை விட உனக்கு அவர்தான் முக்கியமா?"

"தாலி கழுத்துல ஏறிய எந்த பெண்ணுக்குமே...அவளுடைய கணவன்தான் முக்கியம்!

முதல்ல! எனக்குமே இந்த ஊர் ரொம்ப போரடிக்குது! பார்த்த இடத்தையே பார்த்து...பார்த்த ஜனங்களோடயே வாழ்ந்து பழகி... எனக்கும் மாற்றம் தேவைப்படுது! அதனால்தான் அவர் சொல்றது எனக்கு சரின்னு படுது!"

"எனக்கு நீங்க உயிரோடு இருக்கும் போதே...திருமணத்தை செய்து வச்சிருங்க! உங்க முன்னாடி நான் கணவன், குழந்தைன்னு சந்தோஷமா வாழ்ந்தால்...அதைக் காணும் உங்களின் ஆயுளும் கூடும்னு கரிசனமா சொன்னதெல்லாம் பொய்யா, மதிவதனா...?

"அதெல்லாம் இல்லப்பா! அது உண்மையா சொன்ன வார்த்தைகள்தான்! இப்போ அவர் பேச்சையும் தட்ட முடியலே! எனக்கு நீங்களும் வேண்டும்! மதனும் வேண்டும்! சேலத்துல குடும்பம் இருந்தா

லும் தினமும் அவர் கடைக்கு போனதும் நான் இங்கே வந்து இரவு வீடு திரும்பறேன்!''

சட்டென்று சக்திவேல் அய்யா சொன்னார்!

''அதையெல்லாம் நம்ப முடியாது! உன்னை மதனோட அனுப்பிட்டு...நீ எப்படி இருக்கியோ...மதன் உன்னை நல்லா வச்சிருக்காரோன்னு கலங்கிட்டு இருக்க முடியாது! நீ தினமும் வந்து போறேன்னு சொல்றதையும் நான் நம்பமாட்டேன்! மதன் வீட்டோட மாப்பிள்ளையா இருக்க சம்மதிச்சதால்தான் அவருக்கே உன்னைக் கொடுத்தேன்! மறுத்து இருந்தால் கொடுத்திருக்க மாட்டேன்!''

''எங்களுக்கு வீடு,கார், தொழில் வைக்க சேலத்துல இடம்னு வாங்கி கொடுக்க முடியுமா? முடியாதா? ''என்று மதிவதனா வேகமாய் கேட்க...அதே வேகத்தோடு சக்திவேல் அய்யாவும் பதில் சொன்னாள்.

''முடியாது!''

''அப்புறம் பெரும் விளைவுகளை சந்திக்க வேண்டி வரும்!''

''என்னன்னு சொல்லுடி?'' என்று ராகுல் கத்த...

''அப்பா சொத்துல எனக்கு பாதி உரிமை இருக்கு! வாங்கி கொடுங்கன்னு நீதிமன்றத்தை நாட வேண்டி வரும்!''

''ஓஹோ...அந்த அளவு உனக்கு துணிச்சல் வந்துடிச்சா...?

''ஆமா!நீங்களா பார்த்து ஏதாவது செய்தால் மரியாதையா போகலாம்னு பார்த்தால விடமாட்டீங்க போல! கோர்ட், கேஸ்ன்னு நாறினால்தான் சரிப்படுவீங்களா?''

''மதிம்மா...இப்படி பேச எப்போ, எங்கே கத்துட்டே?'' என்று சக்திவேல் அய்யா கேட்க...

''எல்லாம் உங்ககிட்டதான்!''

என்று திமிராய் மதிவதனா பதில் சொல்ல...

''ராகுல் போதும்! இவகிட்ட எதுவும் பேச வேண்டாம்! கல்யாணமானதும் நம்ம மேலே இருந்த பாசம் சுத்தமா விட்டுப்போச்சு! இல்லேன்னா இப்படி நம்மை எதிர்த்து பேசமாட்டாள்!'' என்று ராகுலைப் பார்த்து சொன்னவர்...மதிவதனாவைப் பார்த்து கேட்டார்!

''உனக்கு சொத்தாக வேண்டுமா? இல்ல பணமா வேண்டுமா?''

பணம்தான் வேண்டும்! எனக்கு சேர வேண்டிய சொத்துக்களை வித்து மொத்த தொகையா கொடுங்க! இன்றைய விலைவாசியில் சேலத்துல பங்களாவும், தொழில் வைக்க இடமும்னு விலைக்கு வாங்க போனால் பல கோடிகள் ஆகும். அதை நினைவுல வச்சிட்டு கொடுத்தால் சந்தோசம்!''

''ராகுல்...நீ இந்த பங்களாவையும், பண்ணையும் மட்டும் வச்சிக்கோ! இது உனக்கு போதும்! வெள்ளி மலை ஹவுஸ், தோட்டம், கள்ளக்குறிச்சியில இருக்க பிளாட், ஷாப்பிங்மால் அத்தனையும் வித்து இவ மூஞ்சியில சீக்கிரமே பெரிய தொகையை வீசிடு!''

சக்திவேல் ஐயாவின் பேச்சுக்கள் கொடுத்த சந்தோசத்தில் முகம் மலர மதன் அங்கே வர...ராகுல் அவனைப் பார்த்து வயிறெரிய சொன்னான்.



''உன்னைப் பற்றி விசாரிக்காமல் உனக்கு பெண் கொடுத்துட்டோம்! நல்லவன் போல உள்ள நுழைஞ்சி...

என் தங்கை கழுத்துல தாலிகட்டி...கடைசியிலே அவளை எங்ககிட்ட இருந்து பிரிச்சிட்டே இல்லடா!'' என்றான்.

''அவரை மரியாதை குறைவா அவன், இவன்னு பேசறதை நிறுத்துங்க!''

''இந்த அயோக்கியனை நம்பி நீ போகப் போறே? அதற்கான வினையை நீதான் அறுவடை செய்யணும்! பிறகு வந்து கண்ணைக் கசக்கிட்டு வந்து நின்றால்... இந்த வீடு உன்னை ஏத்துக்காதுடி, மதிவதனா!''

ராகுல் கத்திவிட்டு வெளியேற.. சக்திவேல் அய்யா சோகமே உருவாய் அவுர் அறைக்கு சென்றாள்.

மதன் சந்தோச மிகுதியில் மதிவதனாவின் கைகளைப் பற்றிக் கொண்டான்.

தகப்பனின், தமையனின் இதயங்களைக் கத்தி கொண்டு கீறி, காயமாக்கி, வலிக்க செய்த இருக்கிறோமே என்ற ஒரு சின்ன நெருடல் கூட இல்லாமல் மதனின் மார்பில் புன்னகையோட ஒண்டிக் கொண்டாள் மதிவதனா!

**பெண்ணே...**
**அன்பான பார்வை பார்த்துப் பார்த்து**
**உன்னில் என்னைக் கலக்க வைத்தாய்!**
**பாசமாக பேசிப்பேசியே**
**நமக்குள் ஒரு பந்தப்பிணைப்பை**
**ஏற்படுத்திவிட்டாய்!**
**இன்று அந்த அன்பும், பாசமும்**
**கலந்து,குழைந்து நேசமாய் உருவெடுத்த பின்**
**'எனக்கு உன்மேல் காதலில்லை' என்று**
**நெருப்பு கொண்டு பொசுக்கி**
**என்னை உயிரோடு மடித்து விட்டாயே!**

16

ராகுல் புரோக்கர் மூலம் சொத்துக்களை விற்க மும்மரமாய் ஈடுபட்டுக் கொண்டிருந்தான்.

''மதன்...அண்ணா சொத்துக்களை விற்க அலைஞ்சி திரிஞ்சிட்டு இருக்கார்! நீங்க சேலம் போங்க! புரோக்கரைப் பாருங்க! கட்டின பங்களாவும், கடையும் விலைக்கு வருதான்னு புலம் பார்த்துட்டு இருங்க!...

நம்மிடம் யாரும் முகம் கொடுத்து பேசறதில்லே! இன்னும் நீங்க இங்கே தங்கினால் மரியாதை அடியோட தேய்ஞ்சிடும்! நீங்க புறப்படுங்க! நான் பணம் கைக்கு வரும் வரை இருந்து வாங்கிட்டு

வரேன்!''என்று மதிவதனா கூற...

''மதி...நினைச்சதும் சேலம் நகர்ல இடம் வாங்க முடியாது!நான் பைவ் ரோட்ல கடையும், பங்களாவும் வாங்கணும்னு ஆசைப்படறேன்! அதுவரை நாம வசிக்க ஒரு வாடகைக்கு பங்களாவை பார்த்து தேவையான பொருட்களை வாங்கி வைக்கிறேன்! கொஞ்சம் பணம் வாங்கிக் கொடு, மதிம்மா!''என்று மதன் கூறினான்.

''வாடகைக்கு வீடு பார்க்கறீங்களா? எனக்கது பிடிக்கலே!'' என்று மதிவதனா முகம் சுளித்தாள்.

''கொஞ்ச நாளுக்குதான்! நமக்கு பிடிச்சாப் போல பங்களா அமைஞ்சிட்டால் உடனே வாங்கி குடி போயிடலாம், மதி!'' என்று அவன் சொல்ல மவுனமானாள்.

''மதிம்மா...நாளைக்கு கிளம்பறேன். பணத்துக்கு ஏற்பாடு செய்!''

''எவ்வளவு வேண்டும்!''

''அட்வான்சுக்கு எப்படியும் ஒரு லட்சமாவது வேண்டும். வீட்டிற்கு தேவையான பொருட்கள் வாங்க ஒரு லட்சத்திற்கு மேல் வேண்டும்! குறைஞ்சது மூன்று லட்சம் வாங்கிக் கொடு!

ராகுலிடம் போய் நின்றாள், கேட்டாள்.

அவன் தூக்கி மூன்று லட்சத்தை வீசினான். பின் சொன்னான்.

''நல்லா யோசி, மதிவதனா. மதன் மண்குதிரையா இருந்துடப் போறான்! நட்டாத்துல மண்குதிரை கரைஞ்சிட்டால் வெள்ளத்தில் சிக்கி சின்னாபின்னமாகி சாக வேண்டி வரும்! மீண்டும் மீண்டும் யோசி! யோசித்து செயல்பட்டால் பிறகு வருந்த வேண்டி வராது!''

ராகுல் அக்கறையாய் சொல்ல... மதிவதனா பதில் ஏதும் சொல்லாமல் உதட்டைப் பிதுக்கி விட்டு திமிராய் நடந்தாள்.

அத்தனை சொத்துக்களும் விற்றாகி விட்டது!

பத்து கோடி ரூபாய்க்கு மேல் தேறியது!

''மதிவதனா...இடம் பார்த்துட்டானா?'' என்று ராகுல் கேட்க...

''பார்த்துட்டே இருக்கார்!'' என்றாள். மதிவதனா.

''உன் பெயரில் பணத்தை டெபாசிட் பண்ணிடட்டுமா?''

''வேண்டாம்! அது அவருக்கு கவுரவக் குறைச்சல்! அவர் பெயருக்கே டெபாசிட் செய்துருங்க!

''மதிவதனா இதில் ஒன்றுமாவது என் பேச்சைக் கேள்! உன் பெயரில் பணத்தை டெபாசிட் செய்துக்கோ! சொத்து வாங்கினாலும் உன் பெயரிலேயே எழுதிக்கோ! இந்தக் காலத்துல யாரையும் முழுமையாக நம்பக் கூடாது!''

''சொத்து வாங்கினாலும் என் கணவர் பெயரில்தான் ரிஜிஸ்டர் செய்வேன்! என் கணவன் மேல் எனக்கு அபார நம்பிக்கை இருக்கு! அவரை நம்பறேன்,நான்!''

''நம்பி ஏமாந்துடப்போற, மதிவதனா!''

''அப்படியே ஏமாந்தாலும்...திரும்ப வந்து உங்ககிட்ட நிற்க மாட்டேன்!'' மதிவதனா எரிச்சலோடு, திமிராய் பதில் சொன்னாள்.

''அளவுக்கு மீறி அவன் மேல் அன்பும்,பாசமும்,நேசமும் வச்சிருக்கே, மதிவதனா! இதையே உன் பலகீனமா எடுத்துட்டு மதன் உன்னை ஏமாத்திடுவானோன்னு பயமா இருக்கு!''

ராகுல் கவலையோட சொல்ல...

''இது உங்களுக்கு தேவையில்லாத பயம்!''

''பெரியவங்க பேச்சை கேட்கமாட்டாயா?''

''நீங்களெல்லாம் நல்லவங்க! அவர்தான் கெட்டவரா?''

''அவன் உன்னை மூளை சலவை செய்து வச்சிருக்கான்! உனக்கு இப்போ அவன் மயக்கம்! போதை! அது தெளிந்தால் உனக்கு யார் நல்லவங்கன்னுதெரியும்!...

நீ எங்க பேச்சை கேட்க வேண்டாம்!

இந்தா உனக்கு சேர வேண்டிய பணம்!

இனி உனக்கும், இந்த வீட்டுக்கும் உள்ள பந்தம் அறுந்தாச்சி! நெஞ்சில வேல் பாய்ச்சின நீ இனி எங்க முகத்துல முழிக்காதே!'' என்று ராகுல் அளவுக்கு மிஞ்சிய வெறுப்பில் கத்தினான்.

''உங்களுக்கு இருக்கிற அதே ரோசமும், கோபமும் என்கிட்டேயும் இருக்கு! நான் உங்க தங்கச்சி! உங்களில் நான் ஒண்ணும் சளைத்தவள் இல்லே! நான் நல்லா வாழ்ந்தாலும் ,கெட்டுப் போனாலும் இனி இந்த வீட்டுக்கு வரமாட்டேன்! தங்கை வேண்டும்னு நீங்கதான் என்னைத் தேடி கட்டாயம் வருவீங்க! சத்தியமா இது கூடிய சீக்கிரம் நடக்கும்!''

மதிவதனா நம்பினாள்!

மனிதர்கள் நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால் இறைவனும், இறைசக்தியும் எதற்கு?

பணம் கைக்கு வந்தாகிவிட்டது என்று போனில் செய்தியை மதிவதனா சொல்ல... மதன் மகிழ்ச்சியில் துள்ளி வாடகைக் காரோடு ஓடி வந்தான்.

பணப்பெட்டியோடு அவனோடு புறப்பட்டாள். மதிவ்தனா!

மதன் பார்த்து வைத்திருந்த வாடகை பங்களா எல்லா வசதிகளும் அடங்கியதாய் இருந்தது!

மதிவதனாவிற்கு அந்த வீடு ரொம்ப பிடித்துப் போனது!

மறுநாள், இரவு...

பத்துலட்ச ரூபாய்க்கு ஒரு காரை வாங்கி வந்து நிறுத்தினான், மதன்.

அவளிடம் ஒரு வார்த்தை கூட 'கார் வாங்கி வருகிறேன்' என்று சொல்லாமல் கொள்ளாமல்... மதன் காரைக் கொண்டு வந்து நிறுத்த...

மதிவதனாவிற்குள் எதுவோ ஓசையின்றி நொறுங்கியது!

மதிவதனா ஏமாற்றமாய் உணர்ந்தாள். அழுகை முட்டிக் கொண்டு வந்தது. அதை வெளிகாட்டிக் கொள்ளாமல் அவனுக்கு உணவு பரிமாறினாள். பின் எதுவும் பேசாமல் போய் படுக்கையில் அமர்ந்தாள்.

''மதிம்மாவுக்கு என் மேல் கோபமா?'' என்று கேட்டுக் கொண்டே மதன் அவளின் எதிரில் அமர்ந்தான்.

''கார் வாங்கவான்னு என்னை ஏன் ஒரு வார்த்தை கேட்கலே, மதன்?'' என்று தன் கோபத்தை வெளிப்படுத்தினாள்.

"உனக்கு ஒரு இன்ப அதிர்ச்சி கொடுக்கத்தான் மதிம்மா! கோபிச்சிக்காதேடா, மதிம்மா! இனி எது செய்தாலும் உன்னைக் கேட்காமல செய்யமாட்டேன்!

"பிராமிஸ்...?"

"பிராமிஸ்! ஏன்னா அது உன் வீட்டு பணமில்லையா? எனக்கு அதுல உரிமை இல்லே, இல்லையா? என்று அவன் வருத்தமுடன் சொல்ல...

"நான் என் வீட்டு பணம்னு என் பேர்ல போட்டுட்டேனா, மதன்? ஏன் இப்படி பிரிச்சி பேசறிங்க? முழு பணத்தையும் உங்க பேர்ல இல்ல டெபாசிட் செய்து இருக்கேன்! நீங்க காரை என்கிட்ட ஒரு வார்த்தை சொல்லாமல் வாங்கிட்டு வந்ததுதான் பிடிக்கலேன்னேன். காரை பிடிக்கலேன்னு சொல்லல! புரிஞ்சிக்கங்க! என் மனசுக்கும் மதிப்பு கொடுக்க கத்துக்கங்க!"

"மகாராணி உத்தரவு! இனி, என் இதயத்தில் வீற்றிருக்கும் இந்த அழகு தேவதையின் அனுமதி பெறாமல் எதுவுமே செய்யமாட்டேன்! போதுமா?" என்று அவன் பயப்படுகிறவன் போல நடிக்க...

மதிவதனா கலகலவென சிரித்தாள்!

"என்ன...என் மதிவதனா செல்லத்துக்கு கோபம் போயிடுச்சா?" என்று அவளை இழுத்து மோகத்தோடு முத்தமிட்டான்.

அவள் கோபம் எல்லாம் நொடியில் பறந்தோடிப் போனது! ஊடலோடு கூடிய கூடல் தெவிட்டாத அமுதமாய் தித்தித்தது!

இங்கே...பூம்பொழில் கிராமத்தில்...படுக்கையறையில்...

"ஏன் ஒரு மாதிரி டல்லாயிருக்கீங்க? என்று நித்யா பாசத்துடன் கேட்டு...ராகுலின் புறம் திரும்பி...அவன் நெஞ்சை இதமாய் நீவி விட...

"மதிவதானாவை நினைச்சி கஷ்டமா இருக்கு, நித்யா! அந்த ராஸ்கல் நல்லவனா...கெட்டவனா தெரியலை! அவ்வளவ பணத்தோட போயிருக்கா, மதிவதனா! ஏதாவது ஏமாற்றிடுவானோனு பயமா இருக்கு, நித்யா!"

"அவள் தலையை அவளே கொள்ளிக்கட்டையை எடுத்து சொறிஞ்சிக்கிறேன்னு சொறிஞ்சிக்கும் போது தடுக்கலாம்! மீறி செய்துட்டா என்னங்க செய்ய முடியும்?" என்று நித்யா சோகமாய் கூற...

"இந்தக் குறைஞ்ச நாளிலே அவள் மனசை மாத்தி...நம்மகிட்ட இருந்து மதிவதனாவைப் பரிச்சிட்டானே பாவி! அவள் சொன்னாலன்னு அவளிஷ்டத்துக்கு ஆடாமல்...தலையில் ரெண்டு தட்டு தட்டி...இளங்கோவுக்கு கட்டி வச்சிருந்தால்...இந்த மாதிரி கலங்கி கதற வேண்டிய அவசியமே இருந்திருக்காதே, நித்யா!

"நான் எவ்வளவு சொன்னேன், கேட்டீங்களா...? என் தங்கை நிம்மதி, சந்தோசம்,இன்பம், விருப்பம்தான் பெரிசுன்னு சொன்னீங்க? இப்போ என்னானது? ம்?...

இளங்கோ அன்று இரவு மதன் கெட்டவன், அவன் வேண்டாம்னு சொன்னான்! நீங்க கேட்கலே! அவனை விரட்டி அடிச்சிட்டீங்க!"



என்று நித்யா கண்கள் கலங்கினாள்.

"இளங்கோ பாவம், நித்யா! தகப்பனா பாசம் காட்டின நானே வெளியே போடான்னு சொன்னதும் உடைஞ்சி போயிட்டான்! என் தங்கை மதிவதனா மேல் வைத்த பாசம் என் கண்ணை அன்று மறைச்சிட்டது,நித்யா! இளங்கோ எங்கே இருக்கனோ? என்ன செய்யறானோ? தெரியலையே! என்று ராகுல் நிஜமான வருத்தத்துடன் பேசி கண்கள் கலங்கினான்.

"அவன் உயிரோட இருக்கானோ? இல்லையோ?"என்று கதறியவளை இழுத்து மடியில் போட்டுக் கொண்டான், ராகுல்.

"இளங்கோவுக்கு எதுவும் ஆகியிருக்காது! கூடிய சீக்கிரமே வருவான், நித்யா!"

"நிச்சயமா வருவானாங்க?"

"வருவான் நித்யா! என் பேச்சை நம்பும்மா! கண்டிப்பா இளங்கோ திரும்பி வருவான்!"

அவனின் வார்த்தை நிஜமாகுமா? பொய்யாகுமா? கடவுளுக்குதான் தெரியும்!

"என்னங்க... இடம் பார்த்துட்டீங்களா? இரவு தாமதமாய் வந்த மதனைப் பார்த்து கேட்டாள், மதிவதனா.

"வீட்டுக்குள்ளே நுழைஞ்சாவே உன் ரோதனை தாங்கலே! மனுசன் அலுத்து களைச்சு வந்தால் ஒரு சொம்பு தண்ணீர் கொடுப்போம்! காபி கொடுப்போம்! உணவு கொடுப்போம்னு இல்லாமல் வந்ததும் வராததும் ஏன் சதா இடம் அமைஞ்சதான்னு கேட்டு நச்சரிக்கறே? இவ்வளவு பெரிய சிட்டியில இடம் அமையறது கஷ்டமில்லையா? இனி மனுசனை வெறுப்பேத்தாதே!" என்று மதன் கத்தினான்.

"தான் என்ன கேட்டேன்னு இப்படி கத்தறீங்க?"

"இடம் பிடிச்சா...பணம் அதிகமா கேட்கறான்!

இல்லேன்னால் பட்டா இல்லாமல பொறம் போக்குல கட்டிடத்தைக் கட்டிட்டு நம்மை ஏமாத்தப்பார்க்கறான்!

எல்லாத்தையும் பார்த்து தானே வாங்க முடியும்! ஏன்டி அவசரப்படறே? பொறுடி... எப்போ, எப்படி வாங்கணும்னு ஆம்பளைக்கு தெரியும்! உன் திருவாயை தொறந்து, என்னிடம் திட்டு வாங்கி கட்டிக்காதே!"

'என்ன கபாலி இது, மருந்தை 'தண்ணி'ல கலந்து சாப்பிடுறே?"

"எல்லாம் பழக்க தோஷம்தான் டாக்டர்!"

-எம்.அசோக்ராஜா, திருச்சி.



சுள்ளென்று சொல்லிவிட்டு தன்னறைக்குப் போய் பூட்டிக் கொண்ட மதன் மேல் மலையளவு கோபமும், வெறுப்பும் வந்தது! கூடவே சுய இரக்கத்தால் இரவு பிழியப் பிழிய அழுதாள்.

அவளிடம் ஒரு நாள் கூட தகப்பனோ, தமையனோ,அண்ணியோ,இளங்கோவோ முகத்தைக் காட்டியதில்லை! அவள் மேல் கோபம் கொண்டதில்லை. மகாராணியைப் வளைய வந்தவளை...வாழ்ந்தவளை கேவலமாய் மதன் பேசவும், அவளை அலட்சியப்படுத்தவும் அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

மதன்...மதிவதனா மேல் ஆரம்பத்தில் காட்டிய அன்பு,பாசம்,நேசம் அத்தனையும் குறைந்து விட... மதிவதனா கலங்கிப் போனாள்.

அவன் காட்டிய அன்பில்,நேசத்தில்,மோகத்தில் மயங்கியதான் பிறந்த வீட்டையே எதிர்த்துக் கொண்டு அவனோடு புறப்பட்டு வந்தாள். அது நாளடைவில் குறைய குறைய தவித்துப் போனாள்.

''மதன்...எங்கே போறீங்க? என்ன செய்யறீங்க? பணத்தைப் பத்திரமா வச்சிருக்கீங்களா?'' என்று ஒரு நாள் மதிவதனா கேட்க...

மறுநிமிடம் ஓங்கி அறைந்துவிட்டான்.

வலி உயிரே போனது! கன்னத்தில் ஐந்து விரலும் பதிந்துவிட்டது! கண்ணீர் அவளைக் கேளாமலேயே ஆறாய் புறப்பட்டு கன்னத்தில் வழிந்தது.

அவன் நிற்காமல் தள்ளாடியதைக் கண்டவள் அதிர்ந்தாள்.

அவன் மூச்சுக்காற்றில் நிக்கோடின் நாற்றமும், ஆல்கஹாலின் வீச்சமும் போட்டி போட்டுக் கொண்டு அவளின் நாசியைத் தாக்க...மதிவதனா பதறிப்போய் கேட்டாள்.

''நீங்க குடிச்சிருக்கீங்களா?''

''ஆமா...நான் குடிச்சிருக்கேன்!'' சற்றும் தாமதிக்காமல் குழறளாய் அவனிடமிருந்து பதில் வந்தது.

''நீங்க குடிப்பீங்களா?''

''உலகத்துல எந்த ஆம்பளை குடிக்காமல் இருக்கான்? நூற்றுக்கு தொண்ணூறு பேர் குடிக்கத்தான் செய்யறான்! அரசின் பெரும்பாலான வருமானம் ' டாஸ்மாக் கடை' யில இருந்துதான் வருதுன்னு பேப்பர்ல சர்வே சொல்றானே!நீ படிச்சதில்லையா?''

''சிகரெட், பீடி, மது குடிக்க மாட்டேன்னு சொன்னீங்களே?'' அழுகையோடு கேட்க...

''ஒரு கல்யாணம் நடக்க ஆயிரம் பொய் சொல்லலாம்! அதுல இது ஒரு பொய்!'' என்று அசிங்கமான இளிப்போடு சொல்லி...அவள் கைப் பற்ற...அவன் கையை உதறிக் கொண்டு தன்னறைக்குள் நுழைந்து விடிய விடிய அழுதாள்.

அவன் குடிப்பான் என்ற செய்தி அவளைப் பூகம்பமாய், புயலாய் தாக்கிவிட்டது!

மதிவதனாவிற்கு தான் குடிப்பது தெரிந்துவிட்டது என்பதால்...அதன் பிறகு வந்த நாட்களில் பெட்டி பெட்டியாய் மது பாட்டில்களை வாங்கிக் கொண்டு வந்துவீட்டிலேயே குடித்து கும்மாளமிட்டான்.



மதிவதனா தட்டிக் கேட்டால் அவளை அடிப்பான்!

சிகரெட்டால் சுட்டு கொடுமைப்படுத்துவான்.

மதிவதனாவிற்கு சுயகவுரவத்தை விட்டு தந்தை, தமையன் வீட்டிற்கு செல்ல விரும்பவில்லை!

உயிராய் நேசித்த தந்தையையும், அன்பையும்,பாசத்தையும் ஊட்டி வளர்த்த அண்ணனையும்,அண்ணியையும்...என் கண்ணின் கருவிழியாய் காப்பேன் என்று காதலை யாசித்த இளங்கோவையும் நிராகரித்து விட்டு வந்த எனக்கு சரியான தண்டனை இது தான் என்று தினம் தினம் மதனிடம் ஒரு போராட்டமான வாழ்க்கையை நடத்தினாள். மதிவதனா!

ஆறுமாதம் கழிந்தது!

அன்று...

''என்னங்க திருமணமாகி ஆறுமாசமாச்சு! இன்னும் என் வயிற்றுல ஒரு குழந்தை தங்கலையே! டாக்டர் கிட்ட போயிட்டு வரலாமா?''.

''எதுக்குடி, கறுப்பி?''

''நம்ம ரெண்டு பேருக்கும் ஏதாவது குறையிருக்கான்னு தெரிஞ்சி ட்ரீட்மெண்ட் எடுத்துக்கலாமே! எனக்கு குழந்தைங்கன்னா பிடிக்கும்! ரொம்ப பிரியம்! இஷ்டம்!''

மதவதனா மலர்ச்சியோடு சொன்னாள்.

''எவ்வளவு நாளாச்சி? அதுக்குள்ளே ஏன் குழந்தை, குட்டின்னு அலையறே, கறுப்பி? மெதுவா பெத்துக்கலாமே, கறுப்பி?'' என்று அவன் கூற... அவ்விடம் விட்டு அழுகையோடு ஓடினாள்.

''மதி... மதி செல்லம்... மதி குட்டி... மதிகண்ணம்மா... மதி கண்ணே... என் தெய்வமே... என் தேவதையே...'' என்று வார்த்தைக்கு வார்த்தை அழைத்து மதன் இப்போத தொல்லாம் அவளைப் பெரும்பாலும் அழைப்பது 'கறுப்பி' என்று தான்.

அழகு தேவதையாய் அவவுக்கு மாலை சூட்டியவள்... இப்போது கறுத்து, இளைத்து எலும்பும் தோலுமாய் போய் கொண்டிருந்தாள்.

அன்று இரவு ஒரு அழகான பெண்ணோடு வீட்டிற்கு வந்தான். இருவரும் போய் அறைக்குள் பூட்டிக் கொண்டு சல்லாபிக்க... மதிவதனா அறைக்கு வெளியே அமர்ந்து பிழிய பிழிய அழுதாள்.

எல்லாம் முடிந்து வெளியே வந்தனர். அந்தப் பெண் அவளை அலட்சியமாய் நோக்கிக் கொண்டு வெளியேறினாள்!

''ஏய் கறுப்பி... இங்கே என்ன இழுவா விழுந்துடிச்சி? இப்படி விழுந்து விழுந்து ஒப்பாகி வைக்கறே?'' என்று மதன் அதட்ட...

''என்னை ஏமாத்திட்டீங்களே, மதன்?''

''என்னடி ஏமாத்தினேன்? ஆம்பளைன்னா அப்படி இப்படித்தான் இருப்பான்! நீ தான் கொஞ்சம் அறுசரித்துப் போகணும்! நீ மட்டும் பொய் பேசலையா? என்னை ஏமாற்றலையா?''

''நான் என்ன பொய் சொன்னேன்? ஏமாற்றினேன்?'' என்று அவள் கோபத்தோடு கேட்க...

''இளங்கோவோட காடு கழனின்று கை கோர்த்து சுத்தி... மாந்

தோப்பு, தென்னந்தோப்பு, ரோஜாத் தோட்டமன்னு படுத்து எந்திரிச்சதைச் சொன்னியா?''

''ஐய்யோ... அபாண்டமா பேசாதீங்க?'' என்று காதைப் பொத்திக் கெண்டாள்.

''அவன் உன்னைக் காதலிக்கவில்லையா?'' அவன் கேட்க...

''அவர் என்னை ஒருதலையா உயிருக்குயிரா காதலிச்சார்! ஆனால் நான் அவரைக் காதலிக்கலே!''

''வேஷம் போடாதடி! அவனைவிட அழகு, கலர்ன்னு நான் கூட இருக்க... அவனை நிராகரிச்சுட்டு... என்னைக் கட்டிகிட்டே! என்னை விட ஒருவன் பெட்டரா வந்தால்... என்னை விட்டுட்டு போகமாட்டேன்னு கண்டேனா?'' என்று வார்த்தைகளில் விஷம் தடவி அதை அம்பாய் மதிவதனாவின் மேல் மதன் பாய்ச்ச... அவளோ அரண்டு விட்டாள்! பின் அழுகையோட சொன்னாள்.

''அப்பா, அண்ணன், அண்ணி, இளங்கோ எல்லாத்தையும் பகைச்சிகிட்டு, உதறிவிட்டு, கோடி கோடியா பணத்தை பங்கு போட்டு எடுத்துட்டு வந்த எனக்கு இந்தத் தண்டனை தேவை தான்!...

இளங்கோ போல நல்ல மனிதரை நிராகரிச்சுட்டு... அக அழகை பார்க்காமல் புற அழகையும், கலரையும் பார்த்து உங்களிடம் மனசைப் பறிகொடுத்துக்கு இந்தத் தண்டனைப் போதாது! இன்னும் பெரிய பெரிய தண்டனைகளை யெல்லாம் கடவுள் எனக்கு கொடுக்கணும்!''

மதிவதனா தலையில் அடித்துக் கொண்டு அழுதாள்!

''நீங்க என்னைக் கொடுமைப் படுத்தறீங்கன்னு நான் போய் என் வீட்டில் சொன்னால்... என் அண்ணா உங்களை கொன்று குவிச்சிடுவார். தெரியுமா?''

''அடிப்போடி பைத்தியக்காரி! என் முடியைக் கூட அவனுங்களால அசைக்க முடியாது! இந்த லட்சணத்துல.. இவ அண்ணன் என்னைக் கொன்று குவிச்சிடுவானாம்! அவனுங்க செல்வாக்கெல்லாம் அந்த ''பூம், பொழில்'' கிராமத்தோட தான்! இங்கே என்னை அசைச்சிப் பார்க்க முடியாது!'' என்று எகத்தளமாய் கூறிவிட்டு வெளியேறினான்.

''மன்னா எதிரி மன்னரிடம் எதற்கு உங்களுக்கு ஒன்பது மனைவிகள் என்று கூறினீர்கள்?''

''நான் அனுபவித்துக் கொண்டிருக்கும் வேதனைகளை உணர்ந்தாவது என் மீது போர் தொடுக்காது இருப்பானே என்றுதான்!''

-எம்.அசோக்ராஜா, திருச்சி.





''இளங்கோ... இளங்கோ அத்தான்... உங்களின் உயிருக்குயிரான காதலை புரிந்து கொள்ளாமல்... ஒரு கயவனிடம் மாட்டிக் கொண்டு சித்தரவதைப் படுகிறேனே!''

''இளங்கோ அத்தான்... பூங்குழி என்று நினைத்து புழைகுழியில் விழுந்து விட்டேனே!''

'' தீ என்று தெரியாமல்... தித்திக்கும் தேனாறு, பாலாறு என்று நினைத்து, குளித்து என் உடலைக் காயப்படுத்திக் கொண்டேனே!''

மறுகி மறுகி அழுதாள்.

**17**

என் உண்மை நேசம்..
என்னைக் கைவிட வில்லை!
எத்தனை சோதனைகளைத் தாண்டியும்..
எத்தனை கஷ்டங்களைக் கடந்ததும்..
எத்தனை வேதனைகளில் வெந்தும்...
எத்தனை சீரழிவுகளில் மூழ்கியும்..
கடைசியில் முழுவதுமாய்...
உன்னை எனக்கு கொடுத்துவிட்டதே!

மறு நாள் பயங்கர காய்ச்சலில் படுத்துகிடந்து மதிவதனாவிடம் வந்தாள், அவளுடைய மாமியார்!

''அம்மா மதிவதனா... நீ இங்கே இருக்காதேம்மா! மதன் பொல்லாதவன்! உன்னைக் கொன்று போட்டாலும் போட்டுடுவான்! உன் அப்பா வீட்டுக்கு போயிடு! இவனிடம் இருந்து விவாகரத்து வாங்கி... அந்த இளங்கோ தம்பியை திருமணம் செய்து நல்லபடியா வாழும்மா!'' என்று அன்போடு பேச...

''அத்தை... அத்தை...'' என்று மதிவதனா அழ...

''மதன் மிருகம்மா! உன்கிட்ட நான் பேசவோ, நெருங்கவோ கூடாதுன்னு மிரட்டி வச்சிருக்கான்! இவனுடைய அம்மா இவன் பிறந்த கொஞ்ச நாளில் இறந்து போக... சொந்த அக்காப் பிள்ளை அநாதையாகக் கூடாதுன்னு என்னை விட இருபது வயசு மூத்தவரான இவங்கப்பாவை. நான் கட்டிகிட்டேன்! கட்டின மறுமாசமே அவர் என்னையும், இவனையும் விட்டுட்டு மனைவி போன இடத்துக்கு போய் சேர்ந்துட்டார்!...

சொத்து, சுகம்ன்னு எதுவுமில்லை! இட்லி சுட்டு விற்று இவனைக் கஷ்டப்பட்டு வளர்த்தேன்! படிக்க வச்சேன்! இவன் தறுதலையா படிக்காமல் போயிட்டான்! பத்தாம் வகுப்பு கூட தாண்டலே! போலி டிகிரி சர்டிபிகேட் வாங்கிட்டு ஒவ்வொரு இடமா வேலைக்குப் போக... போலி சர்டிப்கேட்டுன்வு தெரிஞ்சு வேலைக் கொடுத்தவனுங்க விரட்டினானுங்க!...

''குடிப்பான்! சீட்டாடுவான்! குதிரை ரேஸ்ஸுக்கு போவான்! பணத்

துக்காக பணக்கார வீட்டு பொண்ணுங்க பின்னாடி சுற்றுவான்! அடுத்ததா நான் இதைச் சொல்லக் கூடாது, தாயி! இவனிடம் கழுத்தை நீட்டி ஏமார்ந்த பணக்கார பொண்ணுங்கள்ல நீயும் ஒருத்தி!''

''ஐய்யோ அத்தை...'' மதிவதனா தீயை மிதித்தவள் போல் கத்தினாள்.

காதலைச் சொல்லி பொண்ணுங்களை 'கரெக்ட்' செய்து... பணம், நகையோட வரவசைக்கி... எங்காவது ஓடிப்போய் கொஞ்ச நாள் குடும்பம் நடத்திட்டு... அந்தப் பொண்ணை தவிக்க விட்டுட்டு... அவள் கொண்டு வந்ததை சுருட்டிட்டு ஓடிப்போவான்! அந்த ஏமாந்த பொண்ணுங்க வெளியே சொல்ல முடியாமல் திரும்ப வீடு போய் சேரும்! தன் மகள் உயிர் பிழைச்சி வந்தாளேன்னு அந்தக் குடும்பமும் மானம், மரியாதைக்கு பயந்துட்டு போலீஸ், கேஸ்ன்னு போகமாட்டாங்க!

மாவட்டம் மாவட்டமா மாறி... இப்படி ஏமாத்தி பொழைக்கறதே தான் இவன் பிழைப்பு! நான் இவன் போக்க பிடிக்காமல் நாகர் கோயில்ல இருந்தேன். நான் ஒழுங்கா இருக்கேன்னு கெஞ்சி, கூத்தாடி என்னை உன் வீட்டுக்க பெண்கேட்க அழைச்சி வந்தான்!

ஊரறிய உன் கழுத்தில் தாலிகட்டினான்! உன்னை நல்ல வச்சிருப்பான்னு நினைச்சேன்! என் நினைப்புல மண்ணள்ளி போட்டுட்டு... இப்பி பாவி பண்றானே! கடைசியில உன்னையும் ஏமாத்தப் பார்க்கறலனே! அதான் மனசு கேட்காமல்... மகன்னு பார்க்காமல் அவனைப் பற்றி சொல்றேன்!...

அடுத்ததா இவனோட வாழறது புரயோசனமில்லாத வாழ்க்கை! இவனுக்கு இருப்பது வயசுல ஏற்பட்ட ஆக்ஸிடெண்ட்ல ஆண்மை நரம்பு பாதிச்சிடிச்சி! ஒரு பொம்பளையை சந்தோசப் படுத்த முடியும்! ஆனால் இவனால் ஒரு குழந்தைக்கு தகப்பனாக முடியாது!...

''ஐய்யோ... அத்தை... என்னை சொல்றீங்க?''

''நிஜம் சொல்றேம்மா! இளங்கோ தம்பி எதையோ கண்டுட்டு இவன் கெட்டவன்... இவன் வேண்டாம்ன்னு சொன்னது! ஆனால் நீ அந்தத் தம்பியை இழிவு படுத்தி வீட்டைவிட்டு விரட்டிவிட்டுட்ட! மறுநாள் எச்சரிக்கணும்ன்னு நினைச்சேன்! ஆனால், நீ மதன் மேல் உள்ள மோகத்தால் யார் பேச்சையும் கேட்க மாட்டேன்னு தெரிஞ்சி

''என் கணவருக்கு எப்படி டாக்டர் நினைவு திரும்பயது?''

''லீவில் போன உங்க வேலைக்காரி மீண்டும் வந்துவிட்டாள்னு சொன்னேன்!''

-எம்.அசோக்ராஜா, திருச்சி.





சும்மா இருந்துட்டேன்!...

அடுத்ததா, இந்த பய திருந்திட்டானோன்னு நினைச்சிதான் நானும் உன்னைப் பெண்கேட்டு வந்து தீங்கிழைச்சிட்டேன்! நீ உன் வீட்டுலயே இவனோட குடித்தனம் நடத்தியிருந்தால்.. உன் பெற்றோருக்கு கொஞ்சமாவது பயந்து இருந்திருப்பான்! நீ இவன் பேச்சை கேட்டுட்டு... பிறந்த வீட்டை பகைச்சிட்டு... நிறைய பணத்தோட வந்தே! அந்த பணத்தையாவது உன் பேர்ல போட்டிருக்க கூடாதா? ஏமாந்துட்டையே, தாயி! பணத்தை வச்சிருக்கானோ... இல்ல குடி, கூத்தி, ரேஸ்ன்னு தொலைச்சிட்டானோ! அந்த மகமாயிருக்குதான் தெரியும்!''

மாமியாரும் மதிமவதனாவோடு சேர்ந்து கதறிகதறி அழுதாள்.

அதற்கு அடுத்து வந்த நாட்களில் மதன் வரவேயில்லை! போன் செய்தால் ஸ்விட்ச் ஆப் என்று வந்தது!

வீட்டில் அரிசி, பருப்பு, மளிகை காலியானது! பத்து நாள்... இருபது நாள்... ஒர மாதம் பொறுத்துப் பார்த்தாள்!

அவன் டெபாசிட் செய்திருந்த பேங்கிற்கு போய் கேட்க... அவன் பாதி பணத்தை அவ்வப்போது எடுத்து செல்வழித்திருந்தான். கடைசியாய் இருந்த பெரும் பணத்தையும், பாதுகாப்பு பெட்டகத்தில் இருந்த நூற பவுன் நகையையும் எடுத்துக் கொண்டு கம்பி நீட்டி இருந்தான்.

மதிவதனா நொடிந்து உட்கார்ந்து விட்டாள்.

தாலி செயினை விற்று வாடகைப் பாக்கியை கொடுத்தாள். மெட்டியை கழற்றி வீசினாள். கோயில் உண்டியலில் தாலியை காணிக்கையாக்கினாள்.

''நான் மிச்சமீதி வாழ்க்கையை பழகின இடத்துல போய் ஓட்டிக்கிறேன்! நீ! உன் வீட்டிற்கு போம்மா!'' என்று மதிவதனாவை கள்ளக்குறிச்சி பஸ்ஸில் ஏற்றி விட்டுவிட்டு, மாமியார் நாகர்கோவில் பஸ்ஸி ஏறிவிட்டாள்.

''எந்த முகத்தை வைத்துக் கொண்டு அவர்கள் முகத்தில் முழிப்பது?''

''அத்தனை சொத்தையும் எனக்காக விற்று, எவ்வளவு பணத்தோடு அனுப்பினார்கள்! நான் மதனோடு சந்தோசமாய் வாழ்கிறேன் என்று நினைத்துக் கொண்டு இருப்பார்கள். அவர்கள் நினைப்பில் சிறு தீப்பொறியை வைக்க வேண்டாம்! என்று எண்ணி கருமந்துறை பஸ்ஸில் ஏறினாள்.

கல்வராயன் மலையின் கிழக்கு அடிவாரத்தில் 'பூம்பொழில்' கிராமம் இருக்கிறதென்றால் அதற்கு மேற்கு அடிவாரத்தில் மல்லிகை தோட்டம் என்ற சிற்றூர் உள்ளது. அங்கு வந்து இறங்கினாள்.

ஒரு மாதமாய் சரியாக உண்ணாமல் உறங்காமல் தன் நிலையை எண்ணி எண்ணி வருந்தியதால் இளைத்து, துரும்பாகி விட்டாள்.

இவளைக் காட்டி 'இது தான் மதிவதான' என்றால் யாருக்கும் அடையாளம் தெரியாது!

நீண்ட பட்டான தலைமுடியெல்லாம் கொட்டி, பாதியாகி, பார்க்கவே பரிதாபமாய் இருந்தாள்.

மல்லிகைத் தோட்டத்தில் இறங்கி நடக்க...மலைக்காற்று அவள் மேனி தொட்டு கடந்து போனது நின்று அந்தக் காற்றை உள்ளிழுத்து அனுபவித்து விட்டு சாலையில் நடந்தாள். கண்கள் இருண்டது!

ஒரு மூலை வளைவில்... வேகமாய் வந்த லாரிக்கு ஒதுங்க முடியாமல் தள்ளாடியவளை... லாரிக்காரின் அவளைப் பார்த்துவிட்டு பிரேக் போட்டும்... லாரி அவள் மேல் மோத... தூக்கி வீசப்பட்டாள். மயக்கிப் போனாள்.

மீண்டும் கண்விழித்த போது ஆஸ்பத்திரி படுக்கையில் கிடந்தாள்.

''அம்மா... தாயீ... கண் விழிச்சிட்டியாம்மா? கலங்கிப் போயிட்டோம்மா!'' என்று ஒரு முதிய தம்பதிகள் வந்து நின்றனர்.

''நீங்களெல்லாம்...'' என்று கேட்க...

''நாங்க மல்லிகைத் தோட்டம் ஆளுங்கம்மா! உன்னை என் பேரன் தான் தூக்கி வந்து, ரத்தம் கொடுத்து காப்பாத்தி இருக்கான்! என் பேரன் உன் நிலைக்கண்டு ரெண்டு நாளா உண்ணலே, உறங்கலேம்மா! தவிச்சிப்போயிட்டாம்மா!'' என்றனர்.

''உங்க பேரன் யார்?''

''இப்போ வந்துடுவான்ம்மா!'' என்று அவர்கள் வாய் மூடும் முன்... இளங்கோ வந்து நின்றான்.

அங்கே, அந்த நிலைமையில் இளங்காவைக் கண்டதும் கண்கள் பொத்துக் கொண்டது! கொஞ்ச நேரம் அழட்டும் என்று காத்திருக்க... அவள் அழுது முடித்து... கண்கள் துடைத்து.. இளங்கோவை நோக்க... அவன் கண்களிலும் ஈரத்தைக் கண்டாள்.

''மதிவதனா...''

''இளங்கோ அத்தான்...''

அவள் அவனை 'அத்தான்' என்று அழைக்க நெகிழ்ந்து போனான்.

''என்னை ஏன் காப்பாத்தனீங்க, இளங்கோ அத்தான்? அப்படியே விட்டிருந்தால் நிம்மதியாய் செத்துப் போய் இருப்பேனே!''

''வதனாம்மா... அப்படியெல்லாம் சொல்லாதேம்மா? உனக்கு என்னாச்சி? ஏன் இப்படி ஆயிட்டே? எதுக்கு நீ இங்கே வந்தே? மதன் எங்கே? உன்னை நான் இப்படி ஒரு கோலத்துல காண்பேன்னு சத்தியமா நினைக்கலே, வதனாம்மா!''

அவள் பதில் சொல்லாமல் அழுதாள்.

''நீ சொல்ல வேண்டாம்! உனக்கு உடம்பு தேறட்டும்! அப்புறமா கேட்டு தெரிஞ்சிக்கிறேன்!

தினம் தினம் ஆஸ்பத்திரிக்கு வந்து அவளைப் பார்த்து கொண்டான்.

அவன் வருகை. அவன் பேச்சு... அவனுக்கு ஆறுதலாய் இருந்தது.

உடம்பு பூரணமாய் குணமானதும், ஆஸ்பத்திரியிலிருந்து வீட்டிற்கு அழைத்துப் போனான். சிறு குடிசை வீடுதான்! மல்லிகை, முல்லைக் கொடிகளை வீட்டின் மேல் ஏற்றி விட்டிருந்தான். அந்தச் செடிகளில் மலர் மலர்ந்து மணம் வீசிக் கொண்டிருந்தது. வெகு நேர்த்தியாய், அழகாய் வீடு இருந்தது.

குடிசை வீட்டின் பின்புறம் காய்கறி தோட்டம் இருந்தது.



அந்த ஊர் முழுக்க கேரட், கோவு, பீட்ரூட், தக்காளி, வெண்டை என்று பயிரிடப்பட்டு இருந்தது.

அந்த ஊர் மக்களுக்கு சமீபமாய் காற்கறி அறுவடைதான் தொழிலே!

இளங்கோ அவளைக் கண்ணின் கருவிழியாய் கவனித்துக் கொண்டான்.

''இப்படி ஒரு நல்ல மனசுக்காரனை நிராகரிச்சையேடா, அரக்கி!'' என்று வள் மனது தாடையில் இடித்தது.

ஒரு மாலைப் பொழுது டி.வி. ஓடிக் கொண்டிருந்தது. இளங்கோ டி.வி. பார்த்துக் கொண்டிருக்க, அருகில் போய் அமர்ந்தாள்.

''அத்தான்... நீங்க எப்படி இங்கே வந்தீங்க?'' என்று கேட்டாள்.

''நம்ம வீட்டை விட்டு வெளியேறியவன் நேரே 'மல்லிகைத் தோட்டம்' பஸ் ஏறினேன். இந்த பெரியவர் தூருகில் வந்து அமர்ந்தார். கொஞ்ச நேரத்தில் நெஞ்சைப் பிடித்துக் கொண்டு மயங்கி விட்டார். அவரை ஆஸ்பத்திரியில் சேர்ந்து காப்பாற்றினேன். இவர்களுக்கு குழந்தை இல்லை. வீட்டுக்கு பின்புறம் இருக்கும் நிலம் அனைத்தும் இவர்களுடையது! குத்தகைக்குவிட்டு அதில் வரும் வருமானத்தில் வாழ்ந்து வந்தனர்..!

எனக்கும் போக்கிடம் இல்லை! நிலத்தை எனக்கு குத்தகைக்கு விட றீங்களான்னு கேட்க... கொடுத்தார்கள். என்ன பயிரிடலாம்ன்னு யோசித்தேன்!. காய்கறி பயிரிட முடிவு செய்து பயிரிட்டேன்! இயற்கை உரம், பூச்சிக் கொல்லி போட்டு உற்பத்தி செய்ய... பயிர் செழித்து வளர... அத்தனை பேரும் என் தோட்டத்திற்கு வந்துவிட்டார்கள்! தங்களுக்கும் இயற்கை முறையில் காய்கறி பயிரிட கற்றுத்தர கேட்க... கற்றுத்தந்தேன்! கம்பையும், சோளத்தையும் விதைச்சி அரைவயிறு, கால்வயிறு உண்ட மக்கள்... இன்று காய்கறி பயிரிட்டு அமோகமா இருக்காங்க! இந்த மலையடிவாரமே இயற்கை விவசாயத்துக்கு மாறிடிச்சி!''

''இந்த மலையடிவாரத்தையே மாற்றினா இளவரசன், நீங்க! உங்களை இந்த மக்கள் தலையில தூக்கிவச்சி கொண்டாடறதைப் பார்க்க சந்தோசமா, இருக்கு, அத்தான்!'' என்று அவள் சிரித்தாள்.

''சரி என்னைப் பற்றி அவ்வளவு தான்! உன்னைப் பற்றி சொல்லுடா, வதனா?'' என்றான்.

''மேடம், உங்கள் கணவரிடம் உங்களுக்குப் பிடித்த விஷயம் எது?''

''எத்தனையாவது கணவரிடம்னு தெளிவாகக் கேளுங்க!''

-எம்.அசோக்ராஜா, திருச்சி.



அவள் அத்தனையும் சொன்னாள். அழுதபடி சொன்னாள்.

அவள் கதை கேட்டு இளங்கோவின் உள்ளம் கொதித்தது!

''அத்தான்... என்னை இம்சை படுத்திய கூட எனக்கு பெரிசா தெரியலே! ஆனால், நான் உங்களோட காடு கழனின்னு கை கோர்த்து அலைஞ்சேன்னு சொன்னதும்... மாந்தோப்பு, தென்னந்தோப்புன்னு படுத்து எந்திரிச்சேன்னு சொன்னதும்.

''ஐய்யோ வதனா... மேலே சொல்லாதே! அந்த ராஸ்கலை தேடிப் பிடிச்சி என்ன செய்யறேன் பார்! அவனை வெட்டி பொலி போட்டா தான் என் வெஞ்சம் அடங்கும்!''

இளங்கோ பற்களை நறநறவென கடித்தான். கண்கள் தீ அவாலையாய் கொழுந்து விட்டு எரிந்தது.

''உங்க நல்ல மனசை. கஷ்டப்படுத்தினதுக்கு கடவுள் என்னைத் தண்டிச்சிட்டார், அத்தான்!''

''வதனாம்மா.. அப்படியெல்லாம் சொல்லாதேம்மா!''

''அழகும், கலரும் பார்த்த எனக்கு இப்படி ஒரு தண்டனை தேவை தான். மனிதனுக்கு புற அழகைவிட அக அழகுதான் சிறந்ததுன்னு இப்போ புரிஞ்சிகிட்பேன், அத்தான்! நான் இப்போ ஒரு அநாதை! எனக்கு போக்கிடம் இல்லை! உங்க வீட்டுல வசிக்க கொஞ்சம் இடம் தருவீர்களா? அங்கே அண்ணாகிட்டே எந்த முகத்தை வைத்துக் கொண்டு போவேன்!'' மதிவதனா சொல்லிவிட்டு அழுதாள்.


திடீரென டி.வி. செய்தியில் மதன் முகத்தைக் காட்ட...

''அத்தான்... அத்தான்..'' என்று மதிவதனா செய்தியை சுட்டிக் காட்ட... இளங்கோவும் பார்த்தான்.

பல பெண்களை மணந்து ஏமாற்றியவன் மீண்டும் ஒரு பெண்ணை ஏமாற்றி திருமணம் செய்ய போன நேரம்... போலீஸிடம் கையும் களவுமாய் பிடிபட்டு சிறையில் அடைக்க... அவமானம் தாங்காமல் சிறையில் தூக்கு மாட்டி இறந்து போனான்! என்று செய்தி ஓடிக் கொண்டிருந்தது.

அவள் முகம் ஆனந்தத்தில் மின்னியது!

''வதனா... நாம உடனே கிளம்பணும்! செய்தியைப் பார்த்துட்டு... உன் நிலை என்னவோன்னு பூம்பொழிலில் பதறிட்டு இருப்பாங்க!'' என்றவன் தனது அக்காவின் செல்லுக்கு தொடர்பு கொண்



''உன்னைப் பொண்டாட்டினு சொல்லிக்கவே எனக்கு வெட்கமாக இருக்கு...''

''அவ்வளவு துணிச்சலா?''

''ஒய்ஃப்னு சொன்னாத்தான் நல்லாயிருக்கும்னு சொன்னேன் டார்லிங்!''

-எம்.அசோக்ராஜா, திருச்சி.



டான் செய்தியைச் சொன்னான். தம்பியின் குரல் கேட்டு நித்யா மகிழ்ந்தாள்.

வாடகைக்கு கார் அமர்த்தி உடனே கிளம்பினர்.

மதிவதனா இளங்கோவின் அருகில் அமர்ந்து அவன் கையை விடாமல் பிடித்துக் கொண்டு பயணிக்க... இளங்கோ இன்பமானான். அவளிடம் சொன்னான்.

''வதனா... உன்மேலான காதல் சற்றும் குறையாமல், பெருகி, பொக்கிஷமாய், புதையலாய் அப்படியே என் இதயத்தில் இருக்கு! வதனாம்மா.. நீ என்னை உன் காதலனாய் ஏற்றுக் கொள்வாயா? என் காதல் மனைவியாய் என் உள்ளத்தில் குடி கொள்வாயா?'' என்று இளங்கோ கையை விரிக்க...

''இளங்கோ அத்தான்.. என் தெய்வமே...'' என்று அவன் மார்பில் தஞ்சம் புகுந்தாள்.

''வதனா... என் உயிரே... உன் விழிமலரில் என்றுமே கண்ணீரை நான் காணக்கூடாது! வதனாம்மா ஐ வல் யூடா!'' என்று மதிவதனாவை இளங்கோ இழுத்து இறுக்கிக் கொள்ள... அவள் அவனுடைய நெஞ்சில் பூமாலையாய் தவழ்ந்தாள்.

பூம்பொழில் கிரமத்திற்கு போய் இருவரும் ஜோடியாய் இறங்க... சக்திவேல் ஐயா, ராகுல், நித்யா, சொந்தம், சுற்றம் அத்தனை பேரும் மகிழ்ந்தனர்.

ஒரு நல்ல நாளில் இளங்கோவின் கையால் மாங்கல்யத்தைச் சூடிக் கொண்டாள், மதிவதனா!

**முற்றும்**

## பட்டுச் சேலை பரிசுபெற்றவர்கள்

மே-15, 2012 பதில்: ஸ்ரீநந்தன

1. **எச்.முகம்மது** - சிந்தாதரிப்பேட்டை, சென்னை-2
2. **ஏ.கீதா ஆராவமுதன்** - மைலாப்பூர், சென்னை-4
3. **மா.உ.பொன்னுரங்கம்** அயப்பாக்கம், திருவள்ளூர் மாவட்டம்- 77